உ

செந்திலாண்டவன்

திருவடி துணை.

---

# ஔவை அருந்தமிழ்

13 JAN 1922
MADRAS

திரு - அ. சிவாநந்தசாகர யோகீசுவரர்

மருகரும் மாணவருமாகிய

வரகவி - திரு - அ. சுப்ரமண்யபாரதி

இயற்றியது.

---

கே. பழநியாண்டிப் பிள்ளை கம்பெனி

திருவல்லிக்கேணி,

சென்னை.

காபிரைட் செய்தது] [விலை அணா 12.

பதிப்பித்தது :
சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை.

# முகவுரை.

ஔவை யென்கிற சொல், வயது முதிர்ந்த ஒரு பெண் மகளைக் குறிப்பது. நரைதிரை மூப்போடு கூடிய தள்ளாத கிழவிமாரெல்லாருக்குமே இது பொதுப் பெயர். நமது தேசத்தில் வழங்கும் பழமையான கட்டுக்கதைகள் பலவற்றிலும் இப்பெயரைக் கொண்ட கிழவியொருத்தியின் பிரஸ்தாபம் வராமலிருப்பதில்லை. சந்திரனுடைய களங்கத்தைக் காணும் நமது பாட்டிமார் முதலானவரும், அந்தச் சந்திரனிடத்தில் ஆலவிருக்ஷமொன்று இருப்பதாகவும் அந்த மரத்தினடியில் ஔவையாரென்கிற ஒரு கிழவி உட்கார்ந்துகொண்டு நூல்நூற்றுக்கொண் டிருப்பதாகவும் சொல்வதுண்டு. இவ்வாறு சொல்வதிலும் "நூல்நூற்றல்" என்னும் சிலேடை (இருபொருள் தரும்) மொழி வருவது தான் ஆச்சரியம்.

"இப்பெயர் கொண்டவளிருந்தது உண்மையே. அவள் ஒருத்தி என்பது மட்டும் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. என்னதான் வயதைப் பெருக்கிக் கொண்டாலும், கணக்கற்ற நூற்றாண்டுகளை ஒரே கிழவியின் தலைமேலேற்றுவது யுக்த மன்று. ஆகவே ஒன்றுக்கு மேற்பட்ட ஔவைமார் இருந்திருக்க வேண்டும். அதற்கு அத்தாட்சியும் பலவுண்டு" என்று சொல்லுகின்றனர் சிலர்.

"ஜனவாக்யம் கர்த்தவ்யம்" ஆகையால் 'ஔவையொருத்தியுண்டு; அவள், பாலர் முதல் விருத்தாப்பியர் வரையிலுள்ளவர்க்கும், பிரமசாரியர்முதல் சந்நியாசியர் வரையிலுள்ளவர்க்கும், போகியர்முதல் யோகியர் வரையிலுள்ளவர்க்கும், மதக்கோட்பாட்டில் சிறப்பு விதியினர் முதல் பொது விதியினர் வரையிலுள்ளவர்க்கும் பயன்படும்படியான அரிய பெரிய விஷயங்களையும், முக்கியமான தருமங்களையும் இனிமையும் எளிமையும் பொருள் நிரம்பியுள்ளவையுமான சொற்களால் வெளிப்படுத்தி யிருக்கிருள்; அச்

சொற்களைச் சிறிதும் பெரிதுமான கட்டு வாக்கியங்களாகவும், பாடல்களாகவும் தொடுத்துப் படிப்பவர்க்கும், கேட்பவர்க்கும் இன்பத்தையும் மனக்கவர்ச்சியையும் யுண்டுபண்ணத் தக்க வழியில் கூறியிருக்கிறுள்.

இந்தப் பரோபகாரத்தை நோக்கும்போது அவள் நமக்கு முதற்றாயாக வந்தவதரித்த ஒரு கருணாரூபியென்று கொள்ள வேண்டியதாகின்றது.

" கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை "

என்கிறபடி உலக நடையாகிற தன்னுயிர் போல மன்னுயிரைப் பார்த்தல், சகாயஞ் செய்தல், பிழை பொறுத்தல் முதலிய தருமங்கள் கருணையின் பாற்பட்டவையாதலின், கண்ணோட்டமென்னும் அந்தக் கருணையில்லாதவர் பிறந்திருத்தல் உலகத்திற்குப் பாரமாம். பாரமாகிற பிறப்பு கூடாதென்பதற்கே தாயாக வந்த ஔவை மேற்படி யுலக நடைகளை யெல்லாம் சொல்லாலும் செயலாலும் தானே விளக்கிக்காட்டித் தன் மக்களை அவ்வழி நடந்துய்யச் செய்தாள். மனிதவகுப்பிற் றேன்றினுரெவரும் இவ்வுலகின் நாற்பாங்கெல்லைக்கும் புன்முகத்தராகாது, எப்படி வாழை வடக்கிலும், வான்கமுகு தெற்கிலும், தென்னை கிழக்கிலும், தென்னுபலா மேற்கிலும் குலைதள்ளுவது சுபமோ அப்படி அந்நான்கு தருக்களொத்துப் பொன் முகத்தராயிருந்து தாமும் பிறருமாக நன்மையடைய வேண்டுமென்பதே அவள் கருத்து. இக்கருத்துடையார் மாட்டே தெய்வீகம் விளங்கும். இதுவே மக்கட்குரிய பண்பாம்.

* " பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன் "

என்று தமிழ் வேதங் கூறுகின்றது.

---

* பெருமையும் அறிவோடு கூடிய ஊக்கமும் உடையவரிடமிருத்தலால், உலக நடை, எப்போதும் இருக்கின்றது. இன்றேல் அது மண்ணிற் புகுந்து மாய்ந்துபோம்.

எவர்க்குஞ் சொல்வதெளிது செய்வதரிதாதலால், இக்கிருபா நாயகியின் செயலையும் ஒருவாறு தெரிவிக்க அவளது சரிதம் இங்குச் சுருக்கமாக எழுதலாயிற்று.

ஔவை சோழ தேசத்தில் உறையூரில் பகவன் அல்லது ஞாளிதத்தன் என்பவனுக்கும் ஆதிக்கும் பிறந்தவள். இவளுடன் பிறந்தவராறுவர். இவள் பிறந்ததும் தாய் இவளை விட்டுப் பிரிவதெப்படி யென்று வருந்தியபோது இவள் "இட்டமுடன்" என்ற பாடலைப் பாடினாள். தாய் நீங்கிய பின் ஔவை பாணன் வீட்டிலும், புல்வேளூர், அதியமானூர், திருக்கோவலூர் என்னு மிடங்களிலும் வளர்ந்து வந்தாள். இவளுக்கு வயது வந்தது கண்டு விவாகஞ் செய்யப் பாணன் தன் மரபின்படி சேலை முதலியவை பெற்றுத் தன் குமரியாகிய ஔவையை யுடுத்துக் கொண்டுவரக் கட்டளையிட அவள் அவ்வாறே உடுத்துக் கொண்டு கிழவுருத்தாங்கி வந்தாள். மணமகன் "எனக் கிந்தக் கிழவி வேண்டாம்" என்று வெறுத்துப் போயினன். அன்று முதல் மணமின்றி ஔவையெனப் பெயர் பெற்றுக் காலங்கழித்து வந்தாள்.

ஔவை செய்த நூல்கள் :—விநாயகரகவல், ஆத்திச் சூடி, கொன்றவேந்தன், மூதுரை, நல்வழி, அசதிக்கோவை, நான்மணிக்கோவை, அருந்தமிழ் மாலை, தரிசனப்பத்து, பந்தனந்தாதி, நான்மணிமாலை, ஞானக்குறள், தனிப் பாடல் முதலியன. கடைச் சங்கத்தார் காலத்திலும் குலோத்துங்கச்சோழன் காலத்திலும் இருந்ததாகத் தெரி கிறதால் நீண்ட ஆயுள் படைத்தவளே இவள்.

யோகாப்பியாசமுடைய தெய்வீகியாதலால் இவள் ஒருத்தியே நெடுங்காலம் இருந்து வந்தாள் என்பதை ஆஸ் திகர் ஒத்துக்கொள்ளாமற் போகார். இரண்டு மூன்று ஔவைகளைக் கற்பிப்பது மேற்படி ஔவையின் தெய்வீகத் தன்மைக்குப் பழுதுதேடியதாகும். ஒரே ஔவை ஏன் பல நூற்றாண்டுகள், மேற்படி காரணங்களால், இருந்திருக்க லாகாது? ஔவை என்னும் பெயரே இதனை நிலைநிறுத்த லாம். ஔவை யென்கிற சொல் தெரிந்தார் தெரியாதார்

முதலிய யாவராலும் வழங்கிவருவதாலும் யோகப் பயிற்சியால் அநேக கோடி கற்ப காலங்கள் ஒருவர் இருக்கக் கூடுமென்கிற சாஸ்திர வலுவாலும், இந்த ஔவையையே பல தமிழரசர் காலங்களில் இருந்திருக்கக் கூடுமென்பது விதிதமாகின்றது.

ஔவையின் கோயில் ஒன்று தஞ்சாவூர் ஜில்லா வளவனாற்றின் கீழ்க்கரை, திருவிடும்பாவனத்திற்குக் கீழ்த் திசையில் துளசியார்பட்டி என்கிற ஊரிலிருக்கின்றது. அக்கோயிலில் அவள் வடிவம், தள்ளாத கிழரூபமாய், தளர்ந்த அங்கங்களுடன் நரைதிரையோடு கூடிக் காணப் படுகின்றது. இந்த உருவத்தின் பக்கத்தில் இளம் பெண்ணுருக்கொண்ட விக்கிரகமொன்றும் இருக்கிறது. அதை உப்பையின் வடிவம் என்று கூறுகிறார்கள். இவள் கோவிலுக்கு வடமேற்கில் அரை மைல் தூரத்தில் கொல்லன் திடல் ஒன்றிருக்கிறது. ஆங்கு ஓர் ஆலமரமும், ஒரு மேடையும் உண்டு. அவற்றைப் பற்றி விசாரிக்கின் ஔவை ஒரு சமயம் மழையில் நனைந்து அவ்வழியாக வந்த போது அவளை ஊரார் ஆதரிக்காமல் விட்டதாகவும், கொல்லன் தன் உலை நெருப்பால் அவளுடைய குளிரைப் போக்கி அன்னமிட்டு ஆதரித்தானென்றும் கூறுவர். அப்போது வெள்ளம் பெருகி ஊர் மீது வர, கொல்லன் திடல் தவிர மற்றது அழிந்துவிட்ட தென்பர். வெள்ளம் வந்த சமயத்தில் ஔவை “வள்ளையுங் கொள்ளையாகி வளவனும் பேரானுகிக் கொல்லன் றிடரொழியக் கொள்ளாய் பெருங்கடலே” என்று பாடியதாகப் பேசுவர்.

இப்படி ஔவை உலகத்திற்கே ஒரு தாய் ஸ்தானத்திலிருந்து மக்கள் மீது கொண்ட காருண்யத்தால், அவர்கள் ஒருமித்துச் சுகவாழ்வடையும் மார்க்கத்திற்குரிய இதோபதேசங்களை எளிதிலறிந்து, அறிந்தபடியொழுகும் வண்ணம் உபதேசித்து, சிரஞ்சீவியாய், யோகாநுக்கிரகத்தால், இவ்வுலகத்திலேயே நித்யானந்த சொரூபத்துடன் எழுந்தருளி யிருக்கிறாள் என்பது எமது துணிவு. இவ்வுலகம் “சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின் வகை

தெரிவான் கட்டே யுலகு'' என்கிறபடி அவளிட்ட வழக்கி லிருக்கிறது. தெய்வபல முள்ளவர்க்கு எது தான் சாத்தியமாகாது. "தெய்வமிகழேல்", "திருமாலுக் கடிமை செய்", "ஆலயந் தொழுவது சாலவு நன்று", "சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு", "தெய்வஞ்சீறிற் கைதவ மாளும்'' எனப் பொது சிறப்பென்னும் இருவழியாலும் கடவுளை வழிபடும் உபதேசத்தை வற்புறுத்தியுள்ளதே, அவள் தெய்வவிசுவாசி என்பதை வெளிப்படுத்தும். தாமின்புறுவ துலகின்புறக் கண்டு காமுறுவதன்றோ கற்றோர் கடன்.

இத்தகைய பரோபகாரியின் திருவாக்கினின்றும் வெளிப்போந்து, தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்திக்கும் தனிப்பாடல்களை ஒன்று திரட்டிப் பொருள் விளக்கத்துடன் சந்தர்ப்பங்களையும் விரித்து, "ஔவையருந்தமிழ்'' என்று திருநாமஞ் சூட்டி, உலகோபகாரமாய் ஒருநூல் வெளியிட்டருளினர். வெளியிட்டவரோ வரப் பிரசாதம்பெற்றவர். "பாம்பின்கால் பாம்பறியு'' மென்கிறபடி வரப்பிரசாதியரின் மகத்துவத்தை வரப்பிரசாதியரே யறிவர். இவ்வாசிரியர் அடைதற்கரியவையெனப் பேசும் மானிடப்பிறவி, வளங்கெழுநாடு, நல்ல தொல் குலம், உருவின் மிக்கதோருடம்பு என்பவற்றை யடைந்து, வரன்முறை வழியில் கல்வி பயின்று, பயின்ற வண்ணம் அடங்கி நின்று, லௌகிக வைதிக ஒழுங்குகளை நன்கறிந்து, உலகத்தோடொட்ட வொழுகுந் திறந்தெரிந்து, நல்லவரிணக்கம் பூண்டு, செய் தக்க செய்துவரும் மேம்பாடுடைய அந்தணரேறு-அறத்தின் பேறு - வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதியா ரென்னுமென் ஆருயிர்த் தோழர். அன்னாரெடுத்த இவ்வரும்பெறற் பிரயாசத்திற்கு உலகம் கடமைப்பட்டதே. அவர் குலதெய்வமாகிய ஸ்ரீ முருகப் பெருமான் அவர்க்கு தேகாரோக்கியம், மனோதிடம், சுகவாழ்வு, தீர்க்காயுள், நன்மக்கட்பேறு முதலிய நலங்களை யளித்து, மேலு மேலு முலகுக்குரிய நன்மைகளைச் செய்துவர அருள் புரிவாராக.

ம. இராஜகோபால பிள்ளை.

காப்பு.

“ வாக்குண்டாம் நல்ல
மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி
நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி
தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார்
தமக்கு.”

18 JAN 19

உ

சேந்திலாண்டவன்
திருவடிதுணை.

# சிறப்புப்பாயிரம்.

---

உலகம் நீதியின் வழிப்பட்டு நிற்பின் இம்மைப் பயனும் மறுமைப்பயனும் இனிதெய்துமென்பது துணிபாம். ஆதலின் நீதியென்பது மக்கட்கு உறுதி தருவதாம். உறுதிதரும் நீதிகளைச் சிறுவர்க்கும் பெரியவர்க்கும் ஏற்றபடி விளங்கவைத்த பரோபகார குணமிக்கவர் ஔவையார். ஆதலின் அவர் பரம குருவாவர். கற்றவரும் பாமரரும் மறவாமல் மனத்திற்கொள்ளவும் அடிக்கடி கூடி மகிழவும் தக்கவாறு சொல்லும் பொருளும் சுவையும் பொருந்திய பாடல்கள் பலவும் சிறு சிறு நீதி வாக்கியங்கள் பலவும் அவர் இயற்றியிருக்கின்றார். உலகப்பற்றற்றவராயிருந்தும், உலகுய்யும்பொருட்டு உள்ளத்திலே பெருங்கருணைகொண்டு ஏழை எளியவர் இல்லந்தோறும் வலிதில் தாமே தேடிச்சென்று அவரிட்டதை இன்பமாயுண்டு, அவரவர் குறைகளைக்களைந்து அநுக்கிரகஞ் செய்திருக்கின்றாராதலால், இவரைவிடப் பரம உபகாரி இலரென்பது யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதாம்.

உலகத்தில் பழமொழிகள் வழங்குவதுபோல் இவர் பாடல்களும் வழங்குகின்றன. வழங்குங்கால் தாம் சொல்லும் அப்பாடலின் உண்மைப் பொருளுணராதவரும் மகிழ்கின்றனர், ஆதலின் இவர் பாடல்கள் சொற்பொருட் சுவை மலிந்தன என்பது மாத்திரமல்ல; இனிய ஓசையுமுடையன என்பது விளங்குவதாம்.

இவருடைய பாடல்களைப் படிக்கும்போதெல்லாம் நான் மீண்டும் மீண்டும் ஆசையோடு படிப்பதுண்டு. படிப்பதோடு நில்லாமல் சமயம் வந்தபோதெல்லாம் பேசி மகிழ்வேன்;

B

ஔவையார் கலைமகளின் அவதாரம் என்பதில் ஐயமில்லை யென்று சொல்வேன். இப்படியிருக்கையில் ஒரு சமயம் "இட்டமுடன் என்றலையில்" என்ற பாடலை எனக்குள் நினைத்து என் மனத்தைச் சரி செய்துகொள்ள வேண்டிய தாயிற்று. அன்று இவ்வாறு ஒரு நூல் எழுத வேண்டுமென்ற அவா உதித்தது. — "எண்ணி யொருகருமம் யார்க்குஞ் செய வொண்ணாது, புண்ணியம் வந்தெய்து போதல்லால்" என்ற படி, எண்ணியவாறு முடித்தற்குப் புண்ணியமில்லாமற் சில காலமிது தடைபட்டிருந்தது. பின்னர் என் உள்ளத்தெழுந்த அவாவிற்குத் தக்க வோர் ஊக்கம் பிறந்தது.

"உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று"—

என்னும் வேதவாக்கின் உண்மை கண்டு உற்சாகங் கொண் டேன். உடனே என் வழக்கப்படி என் குருநாதனையும் வழிபடு கடவுளாகிய முருகப் பெருமானையும் சிந்தித்து இதனையெழுதத் தொடங்கினேன். தொடங்கிய இது அவர்களுடைய திருவருளி னாலினிதுமுடிந்தது. முடிந்ததும் — நன்றாக! குருவாழ்க! குருவேதுணை !! என்று வாழ்த்திப்பேரானந்த மடைந்தேன்.

ஔவையார் ஒருவர், இருவர், மூவர் — என்கிற வழக் கிலும் அவருடைய சாதி பிறப்பு வளர்ப்பு முதலிய ஆராய்ச்சி யிலும் என்மனஞ் செல்லவில்லை. அது வீண்காலப்போக்காக முடியுமென்பது என் கருத்து. ஆனால் ஔவையார் ஒருவர் என் பதும் அவர் சிரஞ்சீவியாயிருக்கிறார் என்பதுமாகிய பெரியார் கொள்கையே எனக்குமுடன்பாடாம். அவர் திருவாய்மலர்ந் தருளியதாக விளங்கும் பாடல்களே என் மனதை உருக்கின. ஆதலின் அவர் திருவாய்மலர்ந்தருளியவற்றிலே, தனிப்பாடல் களை மாத்திரமெடுத்துக்கொண்டு ஒவ்வொரு பாடலுக்கும் இன்ன சமயத்தில் இன்னாருக்கு இதற்காகச் சொன்னது என்கிற கதைக்குறிப்பும் கருத்தும் அதற்கு விளக்கமும் அரும்பதவுரை யும் மேற்கோளும் மேற்கோட்குப் பொருளும் இனிதமைத்து இதற்கு "ஔவையருந்தமிழ்" என்று பெயரிட்டேன்.

இது மாணவர்க்கென்றே எழுதியதாயினும் எவனையரும் படித்துணரத்தக்க விஷயமும் இதிலமைந்துள்ளது. வீட்டிலே

பெண்பாலரும் படித்துப் பயன்பெறத் தக்கதிதுவென்று சொல்லு வது மிகையாகாது. இதில் அநேக நீதிகள் விளக்கப்பட்டுள் ளன. இப்புத்தகமொன்றினால் பல புத்தகங்கள் படித்த பயன் பெறுதல் கூடும்.

இதனை யெழுதுங்காலத்தில் நிகழ்ந்த சந்தேகங்களை விளக் கியும் பின்னர் அச்சுப்பரிசோதனையில் தம்மாலியன்ற உதவி புரிந்தும் வந்த எனது நண்பர் கோமளேசுவரன்பேட்டை வித் வான் ம. இராஜகோபால பிள்ளையவர்களின் நன்றி என்றும் மறக்கத்தக்கதன்றாம். என்னுடைய பேச்சிற்கிணங்கி இதனை அச்சிடுவித்து உலகுக்குபகரித்த ஸ்ரீமான் பழநியாண்டிப் பிள்ளை யவர்களின் குணமும் தமிழபிமானமும் போற்றத்தக்கனவாம்.

இது சிறியேன் செய்த நூல். ஆயினும் ஔவையின் தமிழ் என்கிற ஓர் ஏற்றமுண்டு இதற்கு. அந்த ஏற்றத்தை மறவாமல் மனத்திற்கொண்டால் அடியேன் பிழை தோன்றாதென்பதே யான் கொள்ளுந்துணிபு.

இங்ஙனம்

குமாரவிலாசம், குமாரபுரம்
இராயப்பேட்டை
சென்னை, 1-11-21.

திரு. அ. சுப்ரமண்யபாரதி.

உ

செந்திலாண்டவன்
திருவடி துணை.

# ஔவை அருந்தமிழ்

---

வெண்பா.

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ. (1)

ஔவையார் பிறந்ததும் அவருடைய தாயும் தந்தையும் முன்னமே அவர்கள் தங்களுக்குள் செய்துகொண்ட உறுதிமொழியின்படி, அவரை விட்டுப்பிரிந்து செல்ல வேண்டியதாயிற்று. இப்பொழுது ஔவையாருடைய அன்னை இச்சிறு குழந்தையை இந்த இடத்தில் எப்படி விட்டுப்பிரிவது என்னுங் கவலை கொண்டு வருந்தினாள். அதனை உணர்ந்த சிறு குழந்தையாகிய ஔவையார் தமது அன்னைக்கு அப்பொழுது தேறுதல் கூறும் பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளிய திந்தச்செய்யுள். ஔவையார் கடவுளின் அருட்செல்வம் பெற்ற ஞானத் தாயாராதலின் பிறந்தபொழுதே எல்லாம் உணரவல்லவரா யிருந்தார்.

கருத்து.

கடவுள் ஒருவருண்டு. அவர் எல்லா உயிர்களையும் காத்தளிக்குந் திருவருளுடையவர். கடவுள் தம்மை நம்பியவரை ஒருபோதும் கைவிடமாட்டார். அவர் பிறப்

பும் இறப்பும் இல்லாதவர். இந்த உண்மை உணர்ந்தவர் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டுவதில்லை. கர்மாநுசாரத்தை யொட்டியே அனைத்துயிர்க்கும் நன்மை தீமைகளை அவர் கொடுக்கின்றார். — என்னும் இப்படிப்பட்ட உயர்ந்த கருத்துக்களை இச்செய்யுள் விளக்குகின்றது. ஆதலின் தெய்வமுண்டு அதனை வழிபடுதல் மக்களின் முதற்கடமை.—என்பவை வற்புறுத்தலாயின. இதனைப் பின்வரும் பாடல்களும் ஆதரிக்கின்றன.

அரும்பதவுரை.

பாரம் = பொறுப்பு ; அவனுக்கு = கடவுளுக்கு ; அன்னாய் = தாயே.

மேற்கோள்.

1. "அவனன்றியோ ரணுவுமசையாது" (தாயுமானவர்)

2. "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது" —(குறள்)

3. "என்செய லாவது யாதொன்று மில்லை
யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற்றே னிந்த
வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை
பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து
மூண்டதுவே" (பட்டணத்தார்)

---

1. கடவுளின் சங்கற்பமின்றி எதுவும் நடைபெறாது.

2. அநுபவிக்கப்படும் பொருள்கள் பலவற்றையுஞ் சேர்த்து வைத்திருப்பவர்க்கும் தெய்வம் வகுத்த அளவிற்கு மேலே அநுபவித்தல் முடியாது.

3. உண்மை உணர்ந்தவர்க்கு ஜீவனுலாவது ஒன்று மில்லை என்பது இனிது விளங்கும்.

### கலித்துறை.

மதுர மொழிநல் லுமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினையவல் லார்க்கரி தோமுகில் போன்முழங்கி
அதிர வருகின்ற யானையுந் தேரு மதன்பின்வருங்
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே. (2)

ஒருநாள் ஔவையார் விநாயகபூஜை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கைலாயமலைக்குச் செல்லுஞ் செய்தி யறிந்தனர்; உடனே அவர்களோடு தாமும் செல்ல விரும்பிப் பூஜையை அவசரமாகச் செய்யவே அதுகண்ட விநாயகமூர்த்தி, "அவசரமில்லாமல் பூஜை செய்க! குதிரையின்மீது செல்லும் சேரர்க்கும் யானையின்மீது செல்லுஞ் சுந்தரர்க்கும் முன்னதாக உன்னைக் கைலாய மலையிலே கொண்டுபோய்ச் சேர்ப்போம்" என்று திருவாய் மலர்ந்தனர். அது கேட்ட ஔவையார் மகிழ்ந்து விநாயகருடைய பூஜையை வெகு சாவகாசமாகச் செய்து அவர்தம் திருவருளுக்குகந்து—சீதக்களப — என்று தொடங்கும் அகவலைப்பாடித் துதித்தனர்.

விநாயகக்கடவுள் திருவுளமகிழ்ந்து விசுவரூபங் கொண்டு ஔவையாரைத் தமது துதிக்கையாலெடுத்துத் திருக்கைலாயமலையின்மீது சேர்த்தருளினர். பிறகு அவ்விருவரும் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் ஔவையார் தங்கட்கு முன்னே அங்கு வந்திருப்பது கண்டு வியப்படைந்து, "எங்கட்குமுன்னே இங்கு வந்ததெப்படி?" என்று வினவினர். அப்போது ஔவையார்—

இனிய சொற்களையுடைய உமாதேவியாரருளிய விநாயகப் பெருமானுடைய பாதமலரைத் தியானிக்கக்

கூடியவர்கட்கும் அரியதொன்றுண்டோ? அவ்விதியை அநுஷ்டித்து வரும் கிழவியின் நடைக்கும் ஏனைய ரதகஜதுரகங்களின் நடைக்கும் உள்ள வேறுபாடு அளவு கடந்ததாம்—என்னும் கருத்தடங்கிய இச்செய்யுளைக் கூறினர்.

### கருத்து.

கடவுள் எல்லாம்வல்லவர். அவரை வழிபடுகிறவர் கட்கு எல்லாம் இனிதுமுடியும்; அரியதொன்றில்லை. அவர் தமது அன்பர் விரும்பியதையளிக்கும் இனிய கருணையுடையவர் — என்னும் உயர்ந்த கருத்துக்களை இச்செய்யுள் விளக்குகிறது.

### அரும்பதவுரை.

மதுரமொழி - இனியசொல்; மூதிரங்கினையவல்லார்க்கு- உறுதிபெறத் தியானிக்கும் வல்லமையுடைவர்க்கு; சிறுவன் - புத்திரன் (விநாயகர்); அதிர - அதிர்ச்சியுண்டாக; முகில் - மேகம்; முழங்கி - கர்ச்சித்து.

### மேற்கோள்.

"முன்னோனே முன்னின்றால் முடியாததொன்றுண்டோ'
(பழமொழி)

* "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது"—(குறள்)

### வெண்பா.

கானேந்தே னேந்தேன் கடுகி வழிநடந்தேன்
யான்வந்த தூர மெளிதன்று — கூனன்
கருந்தேனுக் கண்ணாந்த காவிரிசூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே இடம். (3)

* நிகரில்லாதவனாகிய ஈசனுடைய திருவடியைச் சேர்ந்தவர்களுக் கல்லாமல் மற்றவர்களுக்குத் தம் நெஞ்சிலே தோன்றுகிற துன்பங்களை நீக்குவதரிதாம்.

ஒருசமயம் சோழன் தன் நகரத்திற்கருகே ஒரு சோலைப்புறம்போய் அமர்ந்திருந்தான். அப்பொழுது ஒரு நத்தை அங்கிருந்த ஒரு பெரிய ஆலமரத்தை அண்ணாந்து நோக்கியவாறே வாயைத் திறந்துகொண்டிருந்தது. இதைக்கண்ட அரசன், "இது இவ்வாறு நிமிர்ந்து வாயைத் திறந்துகொண்டிருப்பதேன்" என்று வியந்தவாறே அதனைப் பார்த்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் அம்மரத்திலிருந்து ஒரு துளி தேன் சொட்டியது. அந்தத்துளி நத்தையின் வாயில் விழுந்தது. அதனால் நத்தை அப்பால் தள்ளுண்டது. பிறகு மீண்டும் அந்த நத்தை ஊர்ந்துகொண்டே அங்குவந்து முன்போல் அண்ணாந்து வாயைத் திறந்துகொண்டிருந்தது. பழையபடி சற்று நேரத்திற்கெல்லாம் மரத்திலிருந்து தேன்துளி அதன்வாயில் சொட்டியது. நத்தை அதனைக் குடித்துச் சென்றது. இதைக்கண்டு வியப்படைந்த அரசன் தன் அரண்மனைசேர்ந்து, "இன்று நாம் கண்ட அதிசயத்தை எந்தப் புலவரேனும் தெரிந்து கூறுகின்றனரா என்று பார்க்கவேண்டும்" என்று கருதிச் சபைக்குச் சென்றான்.

சபைக்கு வழக்கம்போல் வித்வான்கள் பலர் வந்தனர். அவர்களை அரசன் "வாரும், இரும்" என்று கூறி வரவேற்றதை யன்றி வேறொன்றும் அவர்களோடு பேசவில்லை. பிறகு ஔவையாரும் அச்சபைக்கு விஜயமாயினர். அவரையும் அரசன் "வாரும், இரும்" என்றே வரவேற்றான். சபையில் வீற்றிருக்க இடமில்லை. இதனால் ஔவையார், சற்று நின்று உடனே சொன்ன செய்யுளிது. அரசனுடைய உள்ளக்கருத்தை உணர்ந்து உரைத்தபடியால், அரசன் ஔவையாரிடம் மகிழ்ந்து, தக்க தவிசிட்டு அவரை வீற்றிருக்க உபசரித்துப் பின்

சபையில், தான் கொண்டிருந்த கருத்தையும் அதனை வெளியிட்ட ஔவையாரின் தெய்வீக உணர்ச்சியையும் எடுத்துரைத்து மகிழ்ந்தான்.

**கருத்து.**

இந்தச் செய்யுள் பிறர் கருதியதை வெளியிடும் அற்புதசக்தி புலவர்களுக்கு உண்டென்பதை விளக்குகின்றது.

---

இதுபோன்ற இன்னொரு வரலாறுண்டு—நடுராத்திரியில் அரசன் நகர்சோதனை செய்துகொண்டு வருகையில் காளிகோவிலில் காளிக்குப் பூசைபோடப் பேய்கள் கூடியிருப்பதைக் கண்டு வியப்படைந்து, அங்கொரு சாரிருந்து அதைக் கவனித்தான். அப்பொழுது ஒரு பேய் சந்தனமரைத்துக்கொண்டிருந்தது; மற்றொரு பேய் அந்தச் சந்தனத்தை விரலால்வழித்து மூக்கில் முகர்ந்தது. அதுகண்டு சினங்கொண்ட அப்பேய் "காளிதேவியின் பூசைக்குரிய சந்தனத்தை முகரலாமா?" என்று கேட்டு அதன் கையை வெட்டிவிட்டது. அரசன் இவ்வதிசயத்தைப் பார்த்து வியந்தவாறே கம்பர் இதனையறிந்து சொல்லுகின்றாரா என்றறிய எண்ணிக் கம்பர் வீட்டிற்குப் போனான். கம்பர் வீட்டுக்கதவு மூடியிருந்தது. வெளியே அவர் புதல்வன் அம்பிகாபதி யிருந்தான். அவனிடம், "நான் கம்பரை இப்போது பார்க்கவேண்டும்" என்று சொன்னான். அம்பிகாபதி உடனே—

"கரைக்கு வடக்கிருக்குங் காளிகா ளம்மைக்
கரைத்துவழி சாந்தைத்தொட் டப்பேய்! அப்
பேய்! அப்பேய்!!

என்று கூவிக் கதவைத் தட்டினான். இச்சத்தங் கேட்ட

தும் நித்திரை செய்துகொண்டிருந்த கம்பர் விழித்துக் கொண் டெழுந்துவந்து,—

—உரைத்தும்

மறைக்க வறியாத வன்பேயின் கையைக்
குறைக்குமாங் கூன்கத்தி கொண்டு—என்று

பாடிக்கொண்டே கதவைத்திறந்தார். அரசன் கம்பரும் அவர் மைந்தரும் இவ்வாறு தான் இரகஸ்யத்தில் கண்டு வந்த அதிசயத்தை வெளியிட்டதுபற்றி மகிழ்ந்து இரு வரையும் மனதாரப் புகழ்ந்து பெருமகிழ்ச்சியோடு விடை கொண்டான்.

இதுவும் புலவர்க்குப் பிறருள்ளக்கருத்தை யுணரும் அற்புதசக்தி உண் டென்பதை விளக்குவதாம்

அரும்பதவுரை.

கால் நொந்தேன் - நடந்த அலுப்பால் கால்கள் நோவப்பெற்றேன்; கடுகி - விரைந்து; எளிது அன்று - சுலபமானதல்ல. கூனன் - நத்தை; கரும் - கரிய, அண் ணாந்த - நிமிர்ந்த, இருந்தேனுக்கு - இப்படியிருந்த எனக்கு; இடம் எங்கே - இடம் எவ்விடத்தேயுள்ளது?

வேண்பா.

விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விர னிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டு மவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று. (4)

ஒரு சமயம் கம்பர்பாடிய பாட்டைச் சோழமகா ராஜன் வியந்து பேசினன். அப்பொழுது அங்குள்ள ஔவைப் பிராட்டியார் அரசனை நோக்கிச் சொன்ன செய்யுளிது.

### கருத்து.

டம்பமுடையவர் சொன்னகவி, சொற்பொருட் சுவையில்லாததாயினும் அது போற்றப்படுவதாகும். டம்பமில்லாதவர் சொன்ன கவி, சொற்பொருட் சுவை நிரம்பியதாயினும் அது போற்றப்படுவதில்லை. இது உலக வழக்கம் என்பதனை இச்செய்யுள் விளக்குவதாம். படா டோபத்தில் உலகம் மயங்கும். அப்படி மயங்குவது பய னற்றது—என்பது கருத்து.

### அரும்பதவுரை.

விரகர் - அறிவாளர், விரல் நிறைய - விரல்கள் நிறைய அரை - இடை; பஞ்சு - நூலாலாகிய ஆடை, கவிதை - பாடல்; நஞ்சு - விஷம்.

### மேற்கோள்.

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். (நல்வழி)

இச்செய்யுள் மேற்சொன்ன கருத்தை விளக்குவ தறிக.

### வெண்பா.

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால் — யான்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கு மோவ்வோன் றெளிது. (5)

### கம்பர்.

ஒரு சமயம் கம்பர் கம்பராமாயணத்திலே சிற்சில கவிகள் சொல்லிச் சோழராஜனுடைய சபையிலே பிரசங் கஞ்செய்தார். அதைக்கேட்டு மகிழ்ந்து அவ்வரசன்,

"பாரகாவியம் பாடுவதில் கம்பருக்கு நிகரானவர் ஒருவருமில்லை" என்று பாராட்டிப் பேசினன். அப்பொழுது அச்சபையின்கண் வந்திருந்த ஔவையார் பாடியது இது.

கருத்து.

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதுலகளவு" என்னும் திருவாக்கை விளக்குவதிது. குருவியின் கூடு, குளவி கூட்டும் அரக்கின் (மெழுகின்) கூடு, கரையான், வண்டு, சிலந்தி இவற்றின் செயல் ஆகிய இவை அரிய செயலேயாம். சிற்பநூல் வல்லவரும் இவைபோலமைக்க இயலாதவராவார். ஆகையினல் "வல்லமை பேசேல்" என்னும் உபதேசமாகுமிது. "ஆனைக்கும் அடிசறுக்கும்" என்னும் முதுமொழி வழங்குவதுங் காண்க.

அரும்பதவுரை.

வான் - சிறப்பு; வல் - வலிமையாகிய.

மேற்கோள்.

"என்ன நீவருந் திக்கவி பாடினும்
எடுத்தகற் பனைமுன்னோர்
சொன்ன தேயலால் நூதன மொன்றிலை
தொன்மைநூல் பலவாகும்
முன்னங் நூலெலலாங் தந்தவன் நீயலை
முற்றுணர்ந் தனையல்லை
உன்னின் மிக்கவர் பலருளர் கல்வியால்
உள்ளமே செருக்கென்னே" (நீதிநூல்)

* "தோன்று தோற்றித் துறைபல முடிப்பினுந்
தான்றற் புகழ்தல் தகுதி யன்றே"—(நன்னூல்)

---

* பிறர் அறிதற்கரிய கருத்துகளை அமைத்துப் பல வகைத்துறைகளில் கவிபாடி முடிக்குந் திறமையுடையவ

*" பலகற்றேம் யாமென்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்
சிலகற்ருர் கண்ணு முளவாம் பலகற்ருர்க்
கச்சாணி யன்னதோர் சொல்."—(அறநெறிச்சாரம்)

வெண்பா.

சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம். (6)

இச்செய்யுள், நட்பு, தயை, கொடை இவற்றின் மேன்மையை விளக்க ஒருசமயம் அரசசபையில் ஔவை யார் கூறியதாகும்.

கருத்து.

இது மக்களுக்கு இயற்கையாலும் செயற்கை யாலும் அமையும் குண பேதங்களைத் தெரிவிப்பதாகும். கையின் பழக்கத்தினலே சித்திரமும், நாவின் பழக்கத்தினலே தமிழும், மனப்பழக்கத்தினலே கல்வியும் பெருகும். ஆனல் நட்பு, தயை, ஈகை யென்னும் இம் மூன்றும் இயற்கையாய் அதாவது 'கருவிலே திரு' என்கிறபடி ஜந்மாநு சாரமாய் எனவே பூர்வவினையின்படி அமையத்தக்கனவாம். இவை பழக்கத்தின லமைவன வல்ல. பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு

ஞானும் ஒருவன் தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுதல் தகுதியன்ரும்.

* அலர்கதிர் ஞாயிற்றை = விரியுங் கிரணமுடைய சூரியனை, சிலகற்ருர் = சில நூல்களைப் படித்தவர், பலகற்ருர்- பல நூல்களைப் படித்தவர்; அச்சாணியன்னதோர் சொல் = தேரின் அச்சுக்கு உரித்தாய கடையாணியைப்போன்ற உறுதியுடைய அதாவது புலவரும் போற்றத்தக்க ஒரு சொல்.

என்னும் இவையாறும் கருவில் அமைவன. இவற்றுள் மேலே சொன்ன நட்பு, தயை, ஈகையாகிய மூன்றும் பேறு என்பதனுள் அடங்கும். ஆகவே இவை இயற்கைக் குணங்களாம்.

அருமீபதவுரை.

நடை - ஒழுக்கம் ; நட்பு - சிநேகம், கொடை - கொடுத்தல்.

மேற்கோள்.

* "நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு"—(குறள்)

வெண்பா.

காணாமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே—நாணாமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி. (7)

போலிப் புலவரின் தன்மையைப் பற்றிப் பேச நேர்ந்தபொழுது ஔவையார் சொன்னதிது.

கருத்து.

கிளி தன்னை வளர்ப்பவர்களின் முன்பு சிறிதுங் கூசாமல் கொஞ்சிக் கொஞ்சிப் பேசும். அப்பொழுது அங்கொரு பெரிய பூனை வருமாயின் அதைக் கண்ட வளவில் கீச்சுக் கீச்சு என்று கத்தும். இதனை நாம் பார்க்கின்றோம். போலிப் புலவர் தம்மைப்பற்றி வித்வான்கள் இல்லாத இடத்தில் தம் இஷ்டப்படி ஆடம்பரமாகப் பேசி மகிழ்வர். வித்வான்களைக் கண்டால், பூனையைக்கண்ட கிளியைப்போல் பயமடைந்து பேச்சில்

---

* நிலத்தின் இயல்பால் நீர் மாறுபடுவதுபோல், ஒருவர்க்கு அறிவு அவர் சேரும் இனத்தாலேமாறுமென்பது.

சோர்வுபடுவர். நன்றாய்ப் பேசுவதற் கியலாமல் தயங்குவர். ஆதலின் கற்றோர் முன், போலிப் புலவரின் வல்லமை சிறவாது. கற்றோர்முன் பேசித் தம்து வல்லமையைக் காட்டுவோரே வித்வான்க ளென்று மதிக்கப்படுவர். இதனையன்றி "ஊமைக்கு உளறுவாயன் சண்டப் பிரசண்டன்" என்பதற் கிணங்க, பாமரர் முன் சில சொல்லிப் பெருமை பெறுவது மதிப்பிற்கிடந்தராது. ஆகையினால் என்றும் அடங்கி, அவை யஞ்சிப் பேசுவதே அறிவுடையவர்க்கழகு—என்னும் கருத்துக்களை விளக்குவதிது.

அரும்பதவுரை.

கோணாமல் வாய் திறக்கக்கூடாதே = தவறில்லாமல் பேச முடியாது; நாணாமல் = கூசாமல்; வந்தக்கால் = வந்தால்.

மேற்கோள்.

*கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்—குறள்.

†எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம்—எழுத்தறிவார்
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை.—(நன்னெறி)

---

*நூல்களைக் கல்லாத ஒருவன் யான் அறிவுடையேனென்று தன்னை மதிக்கும் மதிப்பானது, அவைகளைக் கற்றவன் கண்டு பேசக்கெடும்.

†ஆகாய கங்கையின் பெருக்கமானது சிவபெருமான் சடையைக் கண்ட வளவில் அடங்கிய தன்மைபோல், நூலுணர்ச்சியில்லாதவருடைய கல்வி நூலுணர்ச்சியுடையா ரெதிரே பயன்படாது.

சுரநீர் = ஆகாய கங்கை.

வெண்பா.

கூரிய வாளாற் குறைபட்ட கூன்பலா
ஓரிலையாய்க் கொம்பா யுயர்மரமாய்ச்—சீரியதோர்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமாய்ப்
பண்டுபோ னிற்கப் பலா. (8)

குறவ னொருவனுக் கிரண்டு மனைவிகள். அவ்விருவரும் ஒருவரை யொருவர் பகைந்திருந்தனர். ஒரு நாள் குறவன் வீட்டை விட்டு வெளியே போயிருந்தான். அச்சமயத்தில் அவனுடைய மனைவியரில் இளையவள் மூத்தவள் மீது பழி சுமத்தக் கருதி, புருஷன் அன்பாய் வளர்த்து வந்த பலாமரத்தை வெட்டி யெறிந்தாள். இதனால் மூத்தவள் புருஷனுக்கஞ்சிப் பெருங்கவலையுடனிருந்தாள். அச்சமயம் தெய்வ வசமாய் அங்கே ஔவையார் வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் கவலையோடிருந்த குறத்தி தன் குலதெய்வத்தையே நேரிற் கண்டதுபோல் மகிழ்ந்து, பணிந்து வரவேற் றுபசரித்தனள். ஔவையார் அவ்வேழையின் திருமுக நோக்கி அவளுள்ளக் கவலையை யுணர்ந்து உடனே பலாமரம் முன் போல் தழைத்தோங்கும்படி கூறியதிது.

இச்செய்யுளின் கடைசி அடியை, "பண்டுபோனிற் கப்பணி" என்று கூறுவதுமுண்டு. அதனை மேற்கொள்வார், ஔவையார், தெய்வத்தை முன்னிடையாகக்கொண்டு பலாத்தழைக்கும்படி அதனை வேண்டியதாகப் பொருள் படுத்துவர். ஔவையாரே யன்றி, ஏனைய தெய்வீகப் புலவரும் இப்படிப்பட்ட அற்புதம் விளங்கச் செய்யுள் செய்யுந் திறமையுடையவர்களாயிருந்திருக்கின்றனர். அவர்கள் இதற்கெல்லாம் தெய்வத்தை நாடிப் பணிந்து வேண்டுவதின்முதலின் அத

னினும் "பண்டுபோனிற்கப் பலா" என்று கட்டளை யாயிருப்பதே பொருத்த முடையதாம்.

"மற்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட் டிங்குவந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவையறிவா ரீங்கிலையே
விற்கொண்ட வாணுதலாள் வேலி தருங்கூலி
நெற்கொண்டு போமளவு நில்லாய் நெடுஞ்சுவரே."

என்று கம்பர், கட்டக் கட்ட விழுந்து போன ஒரு சுவர் விழாதிருக்குமாறு பாடியிருக்கின்றார். இதனை யன்றி,

"திங்க ணுதலார் திருமனம்போ லேகீறிப்
பொங்குகட லுப்பைப் புகட்டியே—எங்களிட
ஆச்சாளுக் கூறுகா யாகாம லாருக்காக்
காய்ச்சாய் வடுகமாங் காய்"—.

என்று காளமேகப் புலவர், தாம் சோறுண்ணப் போன ஒரு வீட்டுக் கடுத்த வீட்டிலிருந்த மாமரத்தி லிருந்த காய் முழுவதும் தாமிருந்த வீட்டிலே ஒரு கண நேரத்தில் விழும்படி பாடியிருக்கின்றார்.

## கருத்து.

கற்றுணர்ந்த பெரியவர்கள், நண்பர், பகைவர், பெரி யார், சிறியார், உள்ளார், இல்லார் - என்னும் பேதம் பாராட்டாமல் எல்லார்க்கும் தம்மாலியன்ற உதவியை எக்காலத்திலுஞ் செய்வர். அவர்களிடம் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் இவ் வைந்து குணங்களும் நிலைத்திருக்கும். பிறர் முடித்தற் கரியவைதையும் அவர்கள் முடித்துத் தருவார்கள். அவர் களை அடுத்தவர் தம் துன்பம் நீங்கப் பெறுவர். இன்ப முறுவர் - என்னும் இந்தக் கருத்துக்களை இச்செய்யுள் விளக்குகின்றது.

### அரும்பதவுரை.

கூரிய = கூர்மையான; குறைபட்ட = வெட்டுண்ட; கூன் = வளைவு, ஓரிலையாய் = ஓர் இலை ஆகி; பண்டு போல்- முன் போல்.

### மேற்கோள்.

*அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்—(குறள்)

### வெண்பா.

கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழக்கா ழாக்குத் தினைதந்தாள்—சோழகேள்
உப்புக்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை
ஒப்பிக்கு மென்ற னுளம். (9)

ஔவையார் பலாத் தழைக்கப் பாடியதற்காகக் குறத்தி மூவுழக்கு ஆழாக்குத் தினை தந்தாள். அந்தத் தினையை முடிந்தெடுத்துக்கொண்டு ஔவையார் சோழனுடைய சபைக்குச் சென்றார். சோழன், மூட்டையென்ன வென்று கேட்டான். அப்பொழுது ஔவையார் பாடியதிது. ஔவையார் தாம் பலாத்தழைக்கப் பாடியதற்காகக் குறமகளிடம் பெற்ற மூவுழக்காழாக்குத் தினையும், வெட்டுண்ட பலாத்தழைத்த விவரமும், சிற்சில ஊர்களிலே தம்மை யறியாதவரிடத்திலே தாம்

*(சுற்றத்தார் மேலே யன்றிப் பிறர் மேலும் உண்டாகிய) அன்பும் (பழிபாவங்களினால்) நாணுதலும் (யாவரிடத்தும்) உபகாரஞ் செய்தலும் (பழையவர்மேல்) (கண்ணோட்டஞ்செய்தலும் (எவ்விடத்தும்) மெய்மை சொல்லுதலும் - என - சால்பென்னும் பாரத்தைத் தாங்கிய தூண்கள் ஐந்தாம். (சான்றோர் அன்பு முதலிய வைந்தையும் உடையராயிருப்பர்)—

சென்று உப்பையும் புளியையும் பெறக்கருதிக் கவி பாடி அவர்களன்பினிட்டதைப் பெரிதாக வேற்ற தம் பெருந் தன்மையும் விளங்கும்படி சொன்னதிது.

### கருத்து.

அறிவுடைய பெரியவர்கள், தங்களை யடைந்தவர்கள் அன்போடிட்டதை அகமகிழ்ந் தேற்றுக்கொள்வதும் அவர்கட்கு நன்மை செய்வதுமாகிய திருவருட் செல்வ முடையவர்களென்பதை இச்செய்யுள் விளக்குகின்றது.

### அரும்பதவுரை.

கூழை = குறைக்கப்பட்ட, மொட்டையான; கவிதை = பாடல்.

### மேற்கோள்.

*களைகணுத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய
தூனுடம் பென்று புகழுடம் போம்புதற்கே
தானுடம் பட்டார்க டாம்—(நீதிநெறிவிளக்கம்.)

### வெண்பா.

நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நூற்சீலை
நாற்றிங்க ளூக்கு ணைந்துவிடும்—மாற்றலரைப்
பொன்றப் பொருதடக்கைப் போர்வே லகளங்கா
வென்றுங் கிழியாதென் பாட்டு. (10)

* பெரியோர், தம்மை ஆதரவாக அடைந்தவர்க்குத் துன்பஞ் சிறிது வந்த விடத்தும் உலகவின்ப முதலாகிய வேறொரு இன்ப மநுபவித்தலை எண்ணிப் பயனில்லாத உடம்பைத் தாங்கிக் கொண்டிருக்க மாட்டார். ஏனெனில், இறைச்சியானாகிய உடம்பு பிணிமூப்பு முதலியவற்றால் தளர்வுடைய தென்று விட்டு, அவ்வாறு தளராத கீர்த்தியாகிய உடம்பைப் பாதுகாத்தலுக்கே உடன்படுவார்கள்.

ஔவையார் தாம் தினை பெற்றவரலாற்றைச் சொன்னதைக் கேட்டு மகிழ்ச்சி யடைந்த சோழன், அவர்க்கு உயர்ந்த பட்டாடை தந்தான்; அவன் தந்த அக்கொடையைத் தானே பாராட்டினான். அப்பொழுது ஔவையார் பாடிய செய்யுளிது.

## கருத்து.

இச்செய்யுளில், ஔவையார் சோழன் கொடுத்த பட்டாடையை விடத் தமது பாடலே சிறந்தது என்று கூறி, ஆடை, பல ஆயிரம் பொன் விலை பெறினும், அது நூலாலாகியதாதலால், நான்கு மாதத்திற்குள் நைந்து கிழிந்து விடும். என்னுடைய பாட்டோ என்றுங் கிழியாதென்று அதற்கு மிதற்கு முள்ள ஏற்றத் தாழ்வை விளக்கி யிருக்கின்றார். ஆதலின் இச்செய்யுள் பொருட் செல்வத்தினும் கல்விச் செல்வமே மேன்மையுடையதென்பதைக் காட்டுகின்றது.

## அரும்பதவுரை.

நூற்றுப் பத்தாயிரம் = (பத்து லட்சம்) ஆயிரமாயிரமாக; நூற்சீலை = நூலாலாகிய ஆடை; நால் திங்கள் = நான்கு மாதம்; நைந்துவிடும் = கெட்டுப்போகும்; மாற்றலர் = பகைவர்; பொன்ற = அழிய; பொரு = போரிட வல்ல; தடம் = விசாலம்; அகளங்கா = சோழா.

## மேற்கோள்.

* "கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும் [ய்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செ
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு." (நீதிநெறி விளக்கம்.)

---

* ஸரஸ்வதி தேவியின் வாழ்க்கையைத் தன் முகத்தினிடத்திலே உடையவனானாலும், பிரமதேவன், வளப்பம்

வெண்பா.

இருந்து முகந்திருத்தி யீரோடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினா ளாடிப் பழமுறத்தால்
சாடினா ளோடோடத் தான். (11)

தென்னாட்டில் ஓரூரில் ஒரு குடியானவன் வீட்டுத் திண்ணையில் ஔவையார் மிகக் களைப்பாய்ப் படுத்திருந் தார். அந்தக் குடியானவன் வெளியே வயற்புறம் போக வீட்டைவிட்டுப் புறப்பட்டான். தெருத்திண்ணையிற் படுத்திருந்த ஔவையார் அவனை நோக்கி, "அப்பா! பசிக்கிறது! கொஞ்சம் கூழாயினும் வார்ப்பாயா?" என்று கேட்டாள். குடியானவன் பரமயோக்யன். இரக்க முடையவன்; ஆதலால், மனமிரங்கி ஔவையார்க்கேதே னும் இடவேண்டுமென்று கருதி வீட்டிற்குள்ளே போய், மனைவியினிடம் தன் எண்ணத்தைத் தெரிவிக்க அஞ்சி நின்றான். ஏன்?—மனைவி கொடியவள்! புருஷனுக் கடங்காத பேய்! ஆகையினால் குடியானவன் சற்று நின்று அப்பால், "இவள் மனமகிழ்ந்து பிரியம் பாராட் டும்படி யேதேனும் செய்து பிறகு நம் எண்ணத்தைத் தெரிவிக்கவேண்டும்" என்று நிச்சயித்து, அவளை அருகி லழைத்து, தன் பக்கத்தி லுட்காரவைத்துப் பிரிய வார்த் தைகள் பேசி, அவளுடைய தலைமயிரைக் கோதிச் சிக் கெடுத்துப் பேன் பார்த்து, பிறகு மெதுவாய், "ஒரு விருந்து வந்திருக்கிறது! கொஞ்சம் கூழ் வார்த்தாலும் போதும்!" என்றான். உடனே அவள், பேயாய் மாறி

---

வாய்ந்த தமிழ்ப்புலவர்க்கு ஒப்பாகான். எனெனில், அந் தத் தமிழ்ப்புலவர் புகழால் உண்டாக்குகிற உடம்புகள், பிரமன் செய்யும் பயன்படா உடம்புகளைப்போல் மாயா. அதனாலேயாம்.

ஒருதரம் ஆடிப் பிறகு பாடி அப்பால் இங்குமங்கு மோடிப் பழைய முறமொன்றை யெடுத்து வந்து "விருந்தா! விருந்தா உன் வாழ்வுக்கு!! விருந்தா! நன்று!" என்று சொல்லிக்கொண்டே அவனைத் துரத்தித் துரத்தி யடிக்கப் போனாள். இந்த அதிசயத்தைக் கண்ட ஔவையார் இச்செய்யுளைப் பாடினர்.

## கருத்து.

இது துஷ்டப் பெண்டிருடைய செய்கையையும் அவளை மணந்தவனுடைய நிலைமையையும் விளக்குவது.

குடியானவன் ஔவையாரின் நிலைமையைக் கண்டு மனமிரங்கி "இவள் பசிக்கு ஏதேனும் இடவேண்டும்" என்னும் எண்ணத்துடன் வீட்டிற்குள் சென்றான். பசித்தவர்க்கு அன்னமிட வேண்டியது இல்லறத்தானுக்குரிய கடமைகளுள் ஒன்றாகுமாதலின், அதனைச் செய்ய மனங்கொண்டமட்டில் குடியானவனுடைய குணம் பெரிதேயாம். புருஷனுடைய இப்படிப்பட்ட எண்ணத்தை நிறைவேற்ற வேண்டியது மனைவியின் கடமையல்லவா? அவளும் அந்தத் தன் கடமையை யுணர்பவளாயின், அவளுடைய குணமும் பாராட்டத்தக்கதாம். காரியமும் இனிது முடியும். இந்த ஒற்றுமை குறைந்தமையினால் குடியானவன், அவளைத் தன் வழிக்குக் கொண்டு வருவதற்குத் தலை சீவி ஈரும் பேனும் பார்த்து இதம் பேசுவானானன். அவ்வாறு செய்தும் அவள் வழிக்கு வாராமையினால் குடியானவன் சங்கடப்படலானான். ஆகையினால், இவர்களுடைய வாழ்வு இன்பந் தருவதன்றாம்.

கற்புநிலை தவறாமலிருந்து தன்னைக் காத்துத் தன் கணவனைக் காப்பாற்றி நற்செய்கைகளை மறவாமலிருப்பதே மனைவியின் கடமையென்றும், பொருளால் தாரத்

தையும் தாரத்தால் தன்னையும் காத்துக்கொள்வதே புருஷனின் கடமையென்றும் ஸ்திரி புருஷரின் கடமையை மேலோர் வகுத்திருக்கின்றனர். மனைவி தன்னையுந் தன் கணவனையுங் காப்பதாவது, தன் கணவன் ஈட்டும் பொருளை நல்ல வழியில் சீர்யும் செட்டாயும் செலவு செய்து வீட்டுப் பண்டங்களை அந்தந்தக் காலத்திற் சேகரித்து, அவற்றைப் பாழாக்காமல் வைத்திருந்து, கணவனுடைய இன்ப துன்பங்களைத் தனதாகக் கொண்டு, தாய்க்குப் பிறகு தாரம் என்பதற்கிணங்க வேளை தவறாமல் உண்டி முதலியன உதவி அவனைக் காப்பாற்றி வருவதேயாம். கணவனுக்கு ஏற்படும் சௌகர்யம் மனைவிக்குமாகு மாதலின், கணவனை இவ்வாறு காப்பவள் தன்னையுங் காத்துக்கொள்கிறவளாகின்றாள்.

"பொருளிலார்க்கிவ் வுலகமில்லை" என்றபடி இவ்வாறு வாழ்க்கையை நடத்துவதற்குப் பொருள் இன்றியமையாத தாதலால், பொருளை யீட்டலும் காத்தலும் வகுத்தலும் ஸ்திரி புருஷர் இருவர்க்குமுரிய கடமையாம். இது, இருவரு மொத்திருந்தாலன்றி நிறைவேறுவது கூடாமையாம். பொருளை யீட்டுவது புருஷனைச் சார்ந்த கடமையாகு மாயினும் அவன் தீவினைவிட்டீட்டல் பொருள் என்றபடி பொருளை நல்லவழியில் தேட மனைவியின் துணை அவனுக்கு இன்றியமையாததாகும். இதனையன்றிப் பொருளைக் காத்தலிலும் முன்னர்க் கூறியபடி வீட்டில் வீண்செலவு முதலியவை நேராமல் துணை புரிவதற்கும் மனைவியே துணையாகின்றாள். ஆதலின் அதற்கும் அவள் துணை இன்றியமையாத தாகும். இனி வகுத்தலாவது, இல்லறத்தானுக்குரிய விதியின்படி அதாவது இம்மை மறுமை நலமுண்டாகும் வழியில் பொருளைச் செலவழித்தலாம். அதில் தலைமையானது விருந்தோம்ப

லாகக் கூறியிருக்கின்றனர். மனைவி மனம் வேறாகும் போது விருந்தினை யோம்பல், எப்படி ஒரு புருஷனுக் கியல்வதாகும்? இயலாதென்பதை இந்தப்பாடலே நமக் குக் காட்டுகின்றது. ஆதலின் இதற்கும் மனைவியின் துணை வேண்டுமென்பது திண்ணமாம். இதனாலேதான் மனைவிக்கு வாழ்க்கைத் துணை என்று பெயர் வழங்கு கின்றனர். வாழ்க்கைத் துணை யென்னும் தன்பெயர்க்கு மாறாக ஒரு ஸ்திரீ நடப்பாளாயின் வாழ்வில் எள்ளளவும் சுகமிராது. ஆதலின் வாழ்வு சீராகாது—என்னும் கருத் துக்களை இச் செய்யுள் விளக்குகின்றது.

அரும்பதவுரை.

இருந்து = உட்கார்ந்து, முகந்திருத்தி = முகத்தைத் துடைத்து, சாடினாள் = அடித்தாள்.

மேற்கோள்.

இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும். (வாக்குண்டாம்.)

வெண்பா.

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லா ளிட்ட வமுது. (12)

மேற்சொன்ன துஷ்டை, தன் கணவனை இவ்வாறு சினந்து கொண்டபிறகு மனச்சலிப்போடு வந்து ஔவை யாரை அழைத்துப்போய் உணவிட்டாள். அப்பொழுது அந்த உணவைக் காண்பதற்குக் கண்கள் கூச்சமடைந்த

தையும் தமது கையும் வாயும் உண்பதற்குப் பின்னடைந் தையும் விளக்கக் கூறிய செய்யுளிது.

கருத்து.

மனத்தில் அன்பில்லாமல் அன்னமிடுவது, உண்ணும் ஒரு மானிக்கு மனத்திற் பெரிய நாணத்தை உண்டாக்கி இட்ட உணவைச் சரியாய் உண்ணவொட்டாத படி தடுக்குமாதலால், அப்படி உணவிடுவது பயன்றராது. மனத்தில் மாசற்றிருத்தலே அறமாதலால், அது தருமமுமாகாது. பாபமே அதன் பயனும். நாணந் தடுக்குங்கால் வயிறு நிறைய வீழியிராது. இதனிலும் அவன் பசியோடு வருந்துவதே மேலாகும். ஆதலின் இடுவது பெரிதல்ல. முழுமனதோடு இடல்வேண்டும். அப்படி இடுபவரே இட்டார் பெரியோர் என்ற பெரியார் வாக்கிற் கிணங்கப் பெரியராக மதிக்கப்படுவர். அன்பில்லாம லிடுபவர், பசித்துன்பத்தினும் பெரிய துன்பத்தை யுண்டாக்குகின்ற படியால் அவர்கள் இடாதா ரிழிகுலத்தோர் என்பதற் கிணங்க அதனிலுஞ் சேர்தற்கின்றி இன்னுங் கீழாக மதிக்கப்படுவர். வயிறு நிறைய வுண்டு வாழ்த்த உணவிடுவதன்றி வருந்தி வயிறெரிய உணவிடுதல் மதியாகாது—என்னும் இக்கருத்துக்களை இச்செய்யுள் விளக்குகின்றது.

அரும்பதவுரை.

மாணுக்க = மாட்சிமைப்பட, என்பு = எலும்பு.

மேற்கோள்.

* மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (குறள்.)

* அனிச்சப் பூவானது மோந்தவிடத்தே வாடும். விருந்தினரோ, தம்மை உபசரிக்க நேர்ந்தவர் முகம் வேறுபட்டுப் பார்க்கும்போதே வாடிவிடுவர்.

ஒப்புடன் முகம லர்ந்தே யுபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலு முண்பதே யமிர்த மாகும்
முப்பழ மொடுபா லன்ன முகங்கடுத் திடுவ ராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி யல்ல தாமே.

(விவேகசிந்தாமணி.)

பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக விருப்பாளே யாமாகில்
கூறாமற் சன்னியாசங் கோள். (13)

இது அந்தக் குடியானவனை நோக்கி ஔவையார் கூறியது.

கருத்து.

ஒருவன் எந்த நிலைமையிலிருப்பினும் அதாவது வறுமையினாலோ மற்றும் எந்தக் குறைகளினாலோ மிகத் தாழ்ந்த நிலைமையிலிருப்பினும், அவனுக்கு அமையும் மனைவி, வாழ்வு தாழ்வுகளில் புருஷனை யனுஸரித்து அவனது குணங் குறிப்பறிந்து நடப்பவளாய் மாத்திர மிருப்பாளாயின், அவன் இனிய வாழ்வு நடத்தல் (இல்லறம் நடத்தல்) கூடுமென்பதும், மனைவி மேற் செய்யுளிலே முன்னர்க் கூறியதற்கு மாறுபடுகிறவளாயிருப்பின் அவளோடு இடர்ப்பட்டு வாழ்வதினும் ஸந்நியாஸத்தை மேற்கொள்வது சால்புடையதென்பதும் இச் செய்யுள் விளக்குகின்றது.

“மங்கலமென்ப மனைமாட்சி” என்றும், “மனைக் காக்க மாண்டமகளிர்” என்றும் “பாழே மடக்கொடியில் லாமனை” என்றும் “இல்லாளகத்திருக்க இல்லாததொன் றில்லை” என்றும் “மனைக்குப்பாழ் வாணுதலின்மை” என்றும் வெளிவந்துள்ள திருவாக்குகளெல்லாம் நற் குண நற்செய்கைகளுடைய மகளிரைப்பற்றியே யாத

லால், பதிவிரதைகளாகிய அவர்கள் வாழ்க்கைத்துணை யாவதே நன்றாம். அவ்வாறு வாய்க்கப்பெற்றவர்களின் வாழ்வு, இவ்வுலகவாழ்விற் கின்றியமையாததாகிப் பொருள் வருவாயில்லாவிடினும் மற்றும் வேறு அசௌகர்யங்கள் நேர்ந்தபோதும் இடர்ப்பட்டாமல் சிறந்தே நிற்கும். ஏனெனில் "காதலிருவர் கருத்தொருமித் தாதரவு பட்டதே இன்பம்" என்றாராதலால் இன்பமுறுதல், பர்த்தாவிற்கேற்ற பதிவிரதையினாலேதான். வறுமையுற்ற பலர், மனைவியினுடைய நற்குண நற்செய்கைகளாலும் ஒற்றுமையாலும் அவ்வறிமையினாலே நேரும் இடர்களை வென்று மனமகிழ்ந்திருந்து தம்மாலியன்றவரையில் நல்லறங் கடைப்பிடித்தொழுகுவதை நாம் பார்க்கின்றோம். இதனையன்றிப் பொருள்படைத்தார் பலர், அனுகூலமில்லாத மனைவியினால் அப்பொருளினாலே அடையத்தக்க புகழ், புண்ணியம், மகிழ்ச்சி முதலியவற்றை யிழந்து நடைப்பிணம்போல் திரிந்துழலுவதையும் நாம் பார்க்கின்றோம். ஆதலின், மனைவியின் நற்குணமே வாழ்வைத் தருவதென்பது திண்ணமாம்.

மனைவி, சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளாயின், ஸந்நியாஸங்கொள் என்ற கட்டளை, சாலப்பொருத்தமுடையதாம். "பேய்கொண்டாலுங் கொள்ளலாம் பெண் கொள்ளலாகாது" என்றும், "இந்தச் சனியனை விலைக்கு வாங்கினேன்" என்றும், "கூற்றமே இல்லிற்கிசைந்தொழுகாப் பெண்" என்றும் வழங்கும் திருவாக்குகள் தீய பெண்டிரை நோக்கி வெளிவந்தவைகளாகையினால், அப்படிப்பட்ட பெண்களின் வாழ்வில் ஒருவனுக்கு, இன்பமுண்டாகாதென்பது திண்ணமாம். இன்பமில்லா வாழ்வை விடுவதே நல்லதென்றார். "இல்லறமல்லது நல்லறமன்று", "அறமெனப்பட்டதே இல்வாழ்க்கை" என்

னும் வாக்கியங்கள் துறவறத்தை ஆதரிக்கவில்லையே யெனின், துறவறம் எளிதில் மேற்கொள்ளத் தக்கதன்று. அதற்கென விதித்துள்ள விதிகளில் தவறுபடின் அதற்கு ப்ராயச்சித்தமே கிடையாதென்பர். ஆனால் இல்லறத்திலேற்படும் தவறு, மற்ற மூன்று ஆசிரமிகளுக்கும் உண்டி முதலியன வுதவி ஆதரிப்பது முதலிய நற்செய்கைகளினால் நீங்குமென்பர். ஆயினும், மனைமாட்சி யமையாதொழியின் இல்லறம் சிறவாதாதலால், "ஏறுமாறாக விருப்பாளே யாமாயின் கூறாமற் சன்னியாசங்கொள்" என்று கட்டளையிட்டதென் றுணர்க. அதாவது அவ்வளை விட்டொழித்தலே நலந் தருவதாம்.

## மேற்கோள்.

* "மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்." (குறள்.)

† இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சால
ஒழுக்க முயர்குலத்தி னன்று—வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி." (நல்வழி.)

## வெண்பா.

சண்டாளி சூர்ப்பணகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே—தொண்டர்
செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர். (14)

இந்தச் செய்யுளும், ஔவையார் மேற்படி குடியானவனை நோக்கிச் சொன்னதேயாம்.

---

* இல்லறத்திற்குரிய நற்குண நற்செய்கைகள் மனைவியிட மில்லாவிடின், அந்த இல்வாழ்க்கை செல்வத்தால் எவ்வளவு பெருமையுடையதானாலும் பயனற்றதாம்.

† இழுக்கு = குற்றம்; வழுக்கு = தவறுதல்.

### கருத்து.

துஷ்ட மனைவியை, சண்டாளியாகிய சூர்ப்பணகைக்கும் தாடகைக்கும் ஒப்பிட்டுப் பேசுகின்றமையினால் அவர்கள்போல் இவர்களும் கொடுமை செய்வரென்பது விளக்கமாம். ஆதலினாலேதான் அப்படிப்பட்ட மனைவியோடு வாழ்வதைவிட நெருப்பில் வீழ்தல் நல்லதென்றதும். இதனால் அந்த வாழ்க்கை பயனற்றதென் றாகிறது. ஆகையினால், "தொண்டர் செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்"--என்று பயனற்ற அவன் வாழ்க்கையை இழிவாகப் பேசினார். "கூற்றமே இல்லிற் கிசைந் தொழுகாப் பெண்"—என்றபடி கொடிய மனைவியினால் புருஷனுக்குப் பலவாறான இடர்களும் மானக்கேடும் நேரிடும். மானக்கேடுண்டாகுங் காலத்தில் மானியொருவன் உயிரை எவ்விதத்திலேனும் மாய்த்துக் கொள்ளவுந் துணிவான். இப்படி உயிர் துறக்கும்படி செய்யும் அவ்வாழ்வை ஒழித்தல் சிறந்ததென்பதை இது வற்புறுத்துகின்றது.

### மேற்கோள்.

* "புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை." (குறள்.)

### வெண்பா.

அற்றதலை போக அறுததலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ—வற்றும்
மரமனையா னுக்கிந்த மானைவகுத் திட்ட
பிரமனையான் காணப் பெறின். (15)

---

* புகழை விரும்பிய மனையாளை யில்லாதவர்க்குத் தம்மை யிகழ்ந்து பேசும் பகைவர்முன் ஆண்சிங்கம்போல் நடக்கும் பெருநடை யில்லையாம்.

ஒரு சமயம், ஔவையார் ஒரு வீட்டின் தலைவா யிலுக்கருகே சென்றார். அவரைக் கண்டதும் அவ் வீட்டுக்காரன் கடுகடுப்பான முகத்தோடு ஓடிவந்து "யார்! யார்!! போ! போ!!" என்று கூறி முகத்தைத் திருப்பிக்கொண்டான். இவன் எப்பொழுதும் பிச்சைக் காரரைக்கண்டால் நாயாய் விழுந்து வாயில் வந்ததைப் பேசுவான். ஆகையினால் இன்று ஔவையாரையும் கடுகடுத்துப் பேசிப் போ! போ!! என்றான். இவனுடைய இந்த இழிவான குணத்தை வெறுத்த ஔவையார், அவன் வீட்டுத் தலைவாயிலைவிட்டுச் சற்று விலகி நின்றார். பிறகு அவன் ஏதோ வேலையாக வெளியே போய்விட் டான். அவன் போனவுடன் அவன் மனைவி வெளியே வந்து ஔவையாரை அன்போடு வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று வீற்றிருக்க உபசரித்து, வேண்டு வது யாதென்று கேட்டாள். ஔவையார், "பசிக்கிறது அன்னஞ் சிறிது இடின் பசி தணித்துக்கொள்வேன்" என்று கூறினர். அவள் முகமலர்ச்சியோடு ஔவை யார்க்கு அன்னம் படைத்து உபசரித்தாள். அப் பொழுது சொன்ன கவியிது.

### கருத்து.

நல்ல குணமுடைய பெண்ணுக்கு மூடன் புருஷ னுகை வாய்க்கப் பெறுவது, பொருந்தாத தாம்பத்யம் என் பதை இது விளக்குகின்றது.

ஔவையார் தம்மைக் கண்டதும், முகங்கடுத்துப் பேசிய புருஷனை "வற்றும் மரமனையான்" அதாவது பட்ட மரத்திற் கொப்பானவன் என்று உவமித்தார். தம்மிடம் இன்சொல் வழங்கி வரவேற்று வேண்டுவன கேட்டுதவிய ஸ்திரீயை "இந்த மானை" அதாவது

மான்போன்ற பார்வையுடைய அழகிய மாதை என்று அன்புபாராட்டிப் புகழ்ந்தாள். இதனால் நாடி வந்தவரை வரவேற்று உபசரித்தல் வேண்டுமென்கிற நல்லுணர்வில்லாத மானிடப்பிறவி பட்ட மரத்திற்கு நேராகுமென்பதும், இன்சொலால் உபசரித்து வேண்டுவன கேட்டுதவும் நல்லுணர்வுடைய பிறவி பச்சை மரத்திற்கு நேராகுமென்பதும் அறியலானோம். பட்டமரம் தன்னையண்டி வந்தவற்கு என்ன செய்யும்? எரிக்கும் நிழலைத் தருவதன்றி வேறொன்றும் தராமல், அண்டினவனைத் தன்னிடத்திருந்து ஓட்டுமாதலால், தம்மைக் கடுகடுத்துப் பேசிப் போ என்றவனை வற்றும் மரமென்றார். பச்சை மரம், வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்க எதிர்பார்த்திருப்பதுபோல், நன்றாய்த் தளிர்த்து இலைகள் அடர்ந்து, பூவும் பிஞ்சும் காயும் கனியும் நிறைந்ததாய்க் கண்ணுக்கும் கருத்திற்கும் இனிக்குமொரு கவினுடையதாய் விளங்கும். தன்னிடம் வந்தவர்க்குக் களைதீரக் குளிர்ந்த நிழலையும் நல்ல காற்றையும் தந்து, பசிதீரப் பழமோ காயோ கொடுத்து உபசரிக்கும். இதனாலே விருந்தோம்பும் நல்ல குணமுடையவரைப் பச்சைமரத்திற்கு நேராகக்கொள்வது பொருந்தும்.

இது நன்மை, இது தீமையென்றுணரும் பகுத்தறிவு படைத்த மக்களிடம், அன்பும் அன்பை வளர்ப்பதற்குரிய பொறுமையும் எல்லோரையும் சமமாய் நடத்தற்குரிய த்யையும், மாறுபாடில்லாமல் இருப்பதற்கு வேண்டிய உதாரத்வமும் தற்புகழ்ச்சியடையாமல் இருப்பதற்கு வேண்டிய அடக்கமும் ஒழுங்கீனமாய் நடவாதிருப்பதற்கு வேண்டிய உபசரணை யென்னும் உயர்குணமும் ஆகிய இவை உத்தமமான உடன் பிறந்த பிறப்பைப் போலிருக்க வேண்டிய அருமைக் குணங்களென்று பெரி

யார் வகுத்திருக்கின்றனர். இவற்றுள் பிறரை உபசரித்தல் ஒழுங்கீனமாய் நடவாமைக்கு ஒரு காப்பாகிறது. ஆதலால் அதனைக் கைக்கொள்ளாத ஆடவன் ஒழுங்கீனனாகின்றமையால் அவன் இழிஞனாகின்றான். ஒழுக்கமல்லவா ஒருவர்க்கு விழுப்பந் தருவது? அதனைக் காவாத அறிவிலியை மரமென்றால் தானென்ன? கல்லென்றால் தானென்ன?— ஔவையார் யாவரிடத்தும் கருணையுடையவராதலால், உபசரிக்கும் உயர்குணமில்லாத அந்தப் பதடியைப் பட்ட மரமென்று கூறியதோடு நின்று அவனைப் படைத்த பிரமனை வெறுத்துச் சினந்தார்.

"அச்சமுள் ளடக்கி அறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே"

என வருதலுங் காண்க.

ஒரு பிள்ளை தீயகுணமுடையவனாயின், "இந்தப் பாவியைப்பெற இவன் தாய் தந்தையர் செய்த தவந்தானென்னவோ தெரியவில்லையே! அவர்களை நான் இப்பொழுது கண்டால், முகத்திலே காரியுமிழ்ந்து என் காற்கடையால் ஒதுக்குவேன்" என்று தீயபிள்ளையைப் பெற்ற தாய் தந்தையரை இகழ்ந்தும், ஒரு பிள்ளை நல்ல குணமுடையவனாயின் "இந்தப் புத்ரசிகாமணியைப் பெற இவன் தாய் தந்தையர் செய்த அரியதவம் யாதோ தெரியவில்லையே! அவர்களை நான் இப்பொழுது காண்பேனானால் காலில்விழுந்து கும்பிட்டுப் பூஜை செய்வேன்" என்று நல்ல பிள்ளையைப்பெற்ற தாய்தந்தையரை உயர்த்தியும் பேசுவதை நாம் பார்க்கின்றோம். அதுபோலவே ஔவையாரும் உபசரணை செய்யும் உணர்வில்லாதவனைப் படைத்த பிரமனை வெறுத்ததென்றுணர்க.

ஔவையார் தம்மை உபசரியாமைக்காக ஒருவனைப் பற்றி இவ்வளவு பேசியது அத்துணைச் சிறப்புடையதன்றென்று கூறுதல் கூடும். இது அப்படிப்பட்ட எண்ணங்கொண்டு பிறந்த பேச்சன்று. உபசரிக்கும் உயர்குணமுடைய ஒரு மாதிற்கு இப்படிப்பட்டவனைப் பிரமன் படைத்தானே! இது அடாது அடாது என்னும் பரிவு மேலிட்டுப் பேசியது.

புருஷனுக்கேற்ற மனையில்லாதது எப்படித் துன்பந் தருவதாகக் கண்டோமோ அதுபோல் மனைவியின் நற்குண நற்செய்கைகட்கேற்ற புருஷனமையாததும் துன்பமுண்டாக்குவது திண்ணமாம். ஏனெனில், இல்வாழ்க்கை, "மருவிய காதன் மனையாளுந் தானும் இருவராய்ப் பூண்டுய்ப்பி னல்லால் — ஒருவரால், இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான் சகடம், செல்லாது தேற்றிற்று நின்று" என்கிறபடி நடக்குமல்லாது நல்ல வழியில் நடவாது. நல்ல குணவானை யடையாத பெண்கள் பலர் பலவிதத்திலும் துன்புறுவதை நாம் பார்க்கின்றோம். எத்தனையோ பெண்கள் இடர் பொறுக்க மாட்டாமல் குளத்திலும் ஆற்றிலும் விழுந்து உயிர் துறக்கின்றனர். தாய்தந்தையர் சுற்றம் எல்லாவற்றையும் விட்டுப் புருஷனையே கதியாக வந்தடைந்த பெண்களுக்கு அவன் மாறுபடுவானாயின் வேறு யார் அவர்கட்கு இவ்வுலகிலினியவராவர். புருஷன் நல்லவனாக மாத்திரமிருப்பின் ஏனையோர் (மாமி, நாத்தி முதலியோர்) செய்யும் தீமையும் மற்றும் குடும்பத்திலுண்டாகு மெந்தத் தீமையும் அவர்களை வருத்தா. தவிர மனைவியின் நற்குண நற்செய்கைகளுக்குப் புருஷனையே காரணமாகக் கூறுவதுண்டு. ஏனெனில், சிறுவயதில் தன்னை யடைந்த பெண்ணை, தக்க கல்வி கேள்விகளினால் அறிவை

யுண்டாக்கி நல்லவழிக்குக் கொண்டு வருவது மணந்தவனின் கடமையென்று கூறுவர் மேலோர்; அதனாலே தான். இப்படிப்பட்டதன் கடமையை யுணராத புருஷன் புருஷனாவதெப்படி? இவனால் இவனை மணந்தவள் சுகமடைவதெப்படி? உபசரிக்கும் உயர்ந்த குணமடைந்த அவள் குணம் சிறப்பதெப்படி?—

"இன்சொலினதே அறம்" என்றும் "ஈதலினன்றே இன்சொல்" என்றும், "இன்சொலால் பாவங் குறையும் புண்யம் பெருகும்" என்றும் கூறியுள்ள பெரியார் திருவாக்குகளை உணராமல், தம்மைச் சினந்தவன், இன்சொலின் பெருமையையும் விருந்தோம்பி உபசரித்தலின் பெருமையையும் உணர்ந்த மனைவியைச் செவ்வையாய் நடத்தமாட்டானென்று கண்டே ஔவையார் இச்செய்யுளைக் கூறியுள்ளாராதலின் இல்லவன் மாண்பிலனாயின், இல்லவள் சிறப்படைவதில்லை என்பதே இதனால் அறியத்தக்கதாம்.

## அரும்பதவுரை.

அற்றதலைபோக = முன் சிவபெருமானால் அறுபட்ட தலை போக; அறாததலை நான்கினையும் = அறுபடாமலிருக்கும் நான்கு தலைகளையும்; பறியேனா = கிள்ளி யெறியேனா; வற்றும் = வற்றிய, உலர்ந்த; மரம் அனையான் = மரத்தை யொத்தவன், மானை = மான் போன்ற மருண்ட பார்வையுடைய இந்த அழகிய பெண்ணை; வகுத்திட்ட = அமைத்த

## மேற்கோள்.

* அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்—(குறள்)

---

* நல்ல மக்களுக்குரிய குணமில்லாதவர், அரத்தைப் போல் கூர்மையான புத்தியுடையவரேயாயினும் அவர் மரத்தோடொப்பாவர்.

வெண்பா.

எட்டேகா லக்ஷணமே யேமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் றூதுவனே
ஆரையடா சொன்னா யது. (16)

ஔவையாரை அடியென்றழைக்க எண்ணிய ஒட்டக்கூத்தர், "ஒரு காலடி நாலிலைப்பந்தலடி" என்று விடுகதையாகக் கூறிப்பொருள் கேட்டபோது பாடியதிது.

கருத்து.

இச்செய்யுள் மேல்நோக்கில் "நீ யாரையடா அடியென்று சொன்னாய்?" என்று வெருட்டுவதுபோல் பொருள் காட்டுவது. உள் நோக்கில் "நீ ஆரைக்கீரையடா சொன்னாய்" என்று கேட்ட கேள்விக்குப் பொருள் விளக்குவது. இதில் வித்வத் சாமர்த்தியம் நிரம்பியிருக்கின்றது. திட்டுவதிலும் வித்வான்கள் அழகாய்த் திட்டும் சாமர்த்தியமுடையவரென்பதை இது தெரிவிக்கிறது. தவிர "யாரையடா சொன்னாய்?" என்பது, "பெண்ணென்று யாரைச் சொன்னாய்! நீ தான் பெண்!" என்னும் கருத்துக்கொண்டு பேசியதுமாகும். ஏனெனின், கூத்தர், அடியென்ற மரியாதையற்ற சொல் வழங்கியபடியால், இவரை, அவர் பெண்பிள்ளை யென்று நினைத்து மரியாதையில்லாமற் பேசியதாகிறது. அடி என்னும் புன் சொல், ஔவையாருக்குப் பெருங் கோபத்தை யுண்டாக்கிவிட்டது. இப்படித் தம்மைப் பேசியது, எவரேனும் பாமரரா யிருந்திருப்பின், அதாவது மரியாதை தெரியாதவரா யிருந்திருப்பின், அதனை ஔவையார் பொருட்படுத்த மாட்டார். பிழையது பொறுக்கிற் பெரியோராவர்" என்னும் திருவாக்குணர்ந்

தவரல்லவா ? கூத்தர் கற்றுணர்ந்தவர்பாற் கொள்ளப்படும் புலமை வாய்ந்தவரா யிருந்தும், அவர்,—

*" பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல் "—(நீதிநெறிவிளக்கம்)

என்றும், " பெருமையுஞ் சிறுமையுந் தான்றரவருமே " என்றும், " வன் சொல் வழங்கேல் " என்றும்,—வெளி வந்துள்ள திருவாக்குகளை உணராதவர்போல் பேசியிருக்கின்றார். ஆதலால் இது செருக்கிற் பிறந்த நிந்தை மொழியாம். செருக்குற்றவரை அடக்கக் கருதியே ஔவையார் முனிந்தனென் றுணர்வதே உணர்வாம். கூத்தர் "ஒரு காலடி நாலிலைப் பந்தலடி" என்று விடுகதையாக வினவியபடியால், புலமை மிக்கார் உள்ளம் பிறருள்ளக் கருத்தையும் அறியும் ஆற்றலுடையதென்பதை இவர் சிந்தித்தாரில்லை யென்று தெரிகிறது.

" சிறந்தமைந்த கேள்விய ராயினு மாராய்ந்
தறிந்துரைத்த லாற்ற வினிது "

என்று கூறியிருக்கின்றபடியால், இப்படி மரியாதையில்லாமலும் இகழ்ந்தும் செருக்குற்றும் இடமறியாமலும் பேசுவது பேதமையின்பாற் படுமல்லது அறிவுடைமையாகாது. " நல்லொழுக்க முள்ளவர்கள் மறந்தும் தீய சொற்களைச் சொல்வதில்லை " என்னும் ஒழுக்கத்தின் வரம்பைக் கடந்ததாகின்றபடியால் இது ஒழுக்

*பெருஞ்சுட்டு = நன்கு மதிக்கப்படுதலை ; யாண்டும் = எல்லாவிடத்திலும் ; நோற்பது = கைக்கொள்ளத்தக்கது; தூற்றி = எடுத்துப்பேசி ; சிறுமை = குற்றத்தை ; புறங்காத்து = அடக்கி ; தாழ்ச்சி சொலல் = தாழ்மையான சொற்களைச் சொல்லல்,

கத் தவறு. "குணமற்ற சொற்கள் ஒருவனை நற்குணங் களிலிருந்து நீக்கும்" என்று பெரியார் பேசுகின்றபடியி னல் இது குணக்கேடு. ஆகையினால் ஔவையார், பெரி யோரியல்புக் கேற்றபடி மனமிரங்கி, அவலக்ஷணமே! எருமைக்கடாவே! மூதேவியின் வாகனமாகிய கழு தையே! குரங்கே! என்று திட்டி, அடி என்று வை தற்கு "யாரையடா சொன்னாய்" என்று அடாப்பட் டங்கட்டி அந்த வசைமொழியினாலேயே நீ சொன்னது ஆரைக்கீரையடா! என்று விடையுந் தந்து, தேட்டம் மரியாதை என்பதைப் போதித்ததென் றுணர்க.

பெண்களை அடியென்றழைப்பது, வேறெந்த நிந்தை யினும் தீயது என்பதையும் இது உணர்த்துகின்றது.

அரும்பதவுரை.

எட்டேகால், இதனை இலக்கத்தால் எழுதின் அவ- எனவரும். இதனை லக்ஷணமே என்பதோடு சேர்த்தால் அவலக்ஷணமே என்னும் நிந்தை மொழியாம். பரி = வாக னம், எமனேறும்பரி = எமனுடைய வாகனமாகிய எருமைக் கடா; மட்டு இல = மரியாதை யில்லாத; பெரியம்மை = மூதேவி; இவள் வாகனம் கழுதை. மூட்ட = மூடிய; கூரை யில்லா வீடே = குட்டிச் சுவரே; ஆரை = யாரை (ஆரைக் கீரை) ஆரக்கீரையானது ஒருகாலைக் கொண்டு பிறைபோல் நான்கு வட்டவடிவா யுள்ளது.

மேற்கோள்.

* பல்லா ரவைநடுவண் பாற்பட்ட சான்றவர்
சொல்லா ரொருவரையு முள்ளூன்றப்—பல்லா
நிரைப்புரங் காத்த நெடியோனே யாயினும்
உரைத்தா லுரைபெறுத லுண்டு—(பழமொழி)

* நல்லோர் பலர் கூடியிருக்கப்பட்ட சபையின் நடு வில் நல்ல நடத்தையையுடைய பெரியோர், கெட்ட சொற் களால் எவரையும் மனவருத்தமடையும்படி பேசார். பசுமந்

**வெண்பா.**

ஏசி யிடலி னிடாமையே நன்றேதிரிற்
பேசு மவனயீர்ளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாதலே நன்று. (17)

இதனினும் இதீ நன்று என்று விளக்கப் பாடிய திது.

**கருத்து.**

இதில் நான்கு நீதிகள் விளக்கியுள்ளன. நான்கும் உயர்ந்த நீதிகள்; அறம், இல்வாழ்க்கை, நட்பு, பொருள் என்னும் இந்நான்கையும் பற்றிப் பேசுவன.

(1) ஏசியிடலி னிடாமையே நன்று—இதில் உயிர்க் குறுதி தருவதாகிய அறஞ்செய்தலை விளக்கி யிருக் கிறது. ஈதல் அறமல்லவா?—ஈ, தா, கொடு, இடு என் பன ஒரே பொருளைத் தரும் சொற்கள். இவற்றிலிருந்து ஈதல், தருதல், கொடுத்தல், இடுதல் என்னும் தொழிற் பெயர்கள் வந்தன. இங்கே நாம் கவனிக்கவேண்டிய சொல்லாகிய இடுதல் அன்னமிடுதல், ஐயமிடுதல் என் னும் முறையில் வழங்குஞ் சொல்லாகிறது. "ஐயமிட் டுண்" "ஐயமிடுமின்" "சையோத்திருந்தால் ஐயமிட் டுண்" என்று ஔவையாரும், "பிச்சையும் ஐயமுமிட்டு" என்று பிறரும் வழங்கி யிருக்கின்றமையினால், இடு என் பது அன்னம், பிச்சை இவ்விரண்டிற்கே சிறப்பு வழி யில் உரியதாகிறது. ஆகையினால் "ஏசியிடலில்" என்

---

தையைக் காத்த பெரியோனானாலும் (கிருஷ்ணனே யானா லும்) பிறனொருவனுக்குக் குற்றந் தரும்படியான சொல் லைச் சொன்னால் அவனும் அவனாலே குற்றம்படத்தக்க சொல் பெறுதல் திண்ணமாம்.

றது, ஏசி அன்னமிடுவதில், ஏசிப் பிச்சையிடுவதில் எனக் கொள்ளத்தக்கதாம்.

ஈதல் அறம் என்றதனால் இடுதல் அறம் என்பதும் அறிகிறோம். "இன்சொலினதே அறம்," ஈதலினன்றே இன்சொல்" என்று கூறியிருக்கிறபடியால், இன்சொற் சொல்லுவது அறமென்றும், இன்சொல் ஈதலினும் நன்று என்றும் காண்கின்றோம். இதனால், இடுதலினும் மேன்மையான இன்சொல் வழங்காமல், புன்சொல் வழங்கி அதாவது ஏசி இடுதலில் பாவமே பயனாகுமாதலால் இடாமையே நன்று என்றார்.

ஈதல் இடாமை என்னு மிவ்விரண்டில் இடுதல், "இறந்தோர்க் கீவது முடையோர் கடனே" என்றபடி மக்களின் கடமையாகிறது; கடமை வழி நிற்றல் சிறப்புடையதாகு மாதலால், இடுதலே அறிவாம். இடாமை கடமை தவறியதாகுமாதலால், அது அறிவுடைமை யாகாது. அல்லாமலும் இடுதலினால் வரும் இன்பம், அதாவது ஏற்பவன் உள்ளமகிழ்தல் கண்டு, மகிழ்தல், அவன் புகழக்கேட்டு மகிழ்தல் முதலியன பெறுவதற் கில்லாமற் போகிறது. ஆகையினால், ஏசி யிடுதலில் இடாமை நன்று என்னும் இந்த போதனை, இடர்தரு மொன்றைச் சொல்லுவதினாலும் சொல்லாமையே நன்று என்று கூறுவதுபோல் கொள்ளத்தக்கதாம். அது, திட்டிக்கொண்டே இடுவதினும் "அப்பா இல்லை, போய் வா" என்று நல்ல வார்த்தை சொல்லி யனுப்புவது நன்றென்பது. இதனால் ஒருவனுக்கு இலாபம் நஷ்டம் ஒன்றுமில்லையாம்.

ஏசி யிடுதலில்— ஏசுதல் "எள்ளற் பொருளது இகழ்தல் (ஏசுதல்)" என்றும், "எளியரிவரேன் றிகழ்ந்

துறையாராகி யோளிபட வாழ்தல் இனிது" என்றும் கூறியுள்ளபடி, இது விட்டுவிடவேண்டிய கெட்ட குணமாகின்றமையினால், குற்றமுடையதாம். ஆதலின் பாவமாம். இடுதல் இங்ஙே ஏசுதலோடு செய்வதாகையினால் அதுவும் விட்டுவிடவேண்டிய குற்றமுடைய செய்கையாம். ஏசுதல் தீயசெய்கை; இடுதல் நல்லசெய்கை. தீயதோடு நல்லது இணங்கி அமைவது கூடாமையாகையால், அது விலக்கிய செய்கையாம். இதனால் வரும் துன்பத்தை "முப்பழ மோடுபா லன்னம்.........கடும்பசி நல்லதாமே" என்றும், காணக்கண் கூசுதே......... அன்பில்லாளிட்ட வமுது" என்றும் வரும் செய்யுட்கள் விளக்கும்.

"ஏற்பதிகழ்ச்சி" என்ற ஏற்பாரை நோக்கிப் பிறந்துள்ள திருவாக்கின்படி ஏற்பவன் இகழ்ச்சி யென்னும் போர்வையை மேலே போர்த்துக்கொண்டு, மானம் முதலியவற்றையும் விட்டு வெளிவருகின்றான். அவனை யேசி அவன் மனம் நோவவைத்துப் பின் இடுதல், புண்பட்ட எருதை அப்புண்ணில் மறுபடியும் தார்பாய்ச்சி ஓட்டுமொரு கொடியசெய்கை போன்றதாதலால், இது பெரிய பாவமாகுமென்பதிலும் ஐயமில்லை; அல்லாமலும், "நைபவ ரேனினும் நொய்ய வுரையேல்" "கடிவது மற" என்னும் கட்டளையை மீறியதுமாகிறது. இப்படிப் பட்ட பாவங்கட் குட்படுத்தும் இச்செய்கையைச் செய்வதைவிட, "இடாமையே நன்று" என்றதனால், மக்கள், தமக்குச் செய்யத்தக்கவை யென்று விதித்தவைகளையும் செய்யத்தகாதவையென்று விலக்கியவைகளையும் உணர்ந்து விதித்தவைகளை மேற்கொண்டு, அவற்றைச் செய்ய வேண்டிய முறைப்படி செய்தலே நன்றென்பது போதனையாம்.

"ஒப்புடன் முகமலர்ந்து...............உண்பதே யமிர்தமாகும்" என்பதனால், அன்போடு இடுதல் இடுபவனுக்கும் ஏற்பவனுக்கும் இன்பமாகின்றபடியால், இதுவே இட வேண்டிய முறையாம்; இதுவே அறமாம்.

(2) "எதிரிற் பேசு மனையாளிற் பேய் நன்று"— என்றார். "இல்லாள் வலிகிடந்த மாற்ற முரைக்கு மேல் அவ்வில் புலிகிடந்த தூறாய் விடும்" என்றும் "சற்றேனும் ஏறுமாறாக இருப்பாளேயாமாகில் கூறாமற் சன்னியாசங் கோள்" என்றும், "தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்" என்றும் "பிணியன்னர் பின்னோக்காப் பெண்டிர்" என்றும் வெளிவந்துள்ள திருவாக்குகள் பெண்களுடைய பேச்சையும் நடத்தையையும் குறிப்பிடுவன. இவ்விரண்டு செய்கைகளுக் கேற்படும் பயனே அஞ்சத்தக்கதாயிருக்க, இவைகட்கெல்லாம் காரணமாகக் கூடிய புருஷனை எதிர்த்துப் பேசுதல் என்னும் குணம் மனைவிக்கு ஏற்படின் அவளோடு வாழ்வது எப்படிக் கூடும்? கூடாமையாகையினாலே, "எதிரிற் பேசு மனையாளிற் பேய் நன்று" என்றார். பேய் ஒருவரைப் பல கூத்துக்கும் அதாவது மான வெட்கமற்ற செய்கைகட்கும் உடன்படுத்துதல் கூடும். அதனை நன்று என்றால், அந்தப்பேயை விட எதிர்த்துப் பேசும் மனைவியினால் புருஷனுக்குச் சங்கடமுண்டாவது பெரிதேயாம்.

(3) "நேசமிலா வங்கணத்தினன்று வலிய பகை—" என்றார். இது வெளிக்கு நேசமுடையவர் போல் காட்டி உள்ளத்துள் பகைமை பாராட்டும் கள்ள நண்பரைப்பற்றிப் பேசியதாம். இத்தகைய நண்பர், உடனிருந்து பழகுகின்றவர்களாகையினால் உளவறிந்து கொண்டு தம்மை நேசனென நம்பியவரை எளிதில்

மோசஞ் செய்வர். ஆகையினுல் இப்படிப்பட்ட நட்பினுல் தீமையே பயனும். அந்தத்தீமை எதிர் பாராம லேற் படுவதாகையினுல் சில சமயம் அதனைக் கடப்பது கூடாமையாம். ஆகையினுல் இந்த நட்பை நம்ப லாகாது. உண்மையிலேயே பகைவனுயிருப்பவர்க்குத் தம் பகையை முடித்துக்கொள்ள வேண்டுமென்னும் எண்ண மிருக்கும். இருப்பினும் அதனை நிறைவேற்றுவது எளி தில் முடிவதன்று. இருவரும் விழிப்பாயிருப்பார்க ளல்லவா? — ஆகையினுல் நேசமில்லா நட்பிலும்-அதா வது அடுத்துக் கெடுப்பவருடைய நட்பிலும் வெளிப் படையான பகையே சிறந்ததாம். பகைவனிலும் வஞ்ச கன் பாபியாகின்றுன். பாபியைவிடப் பகைவன் மேலானவனல்லவா? — இதனுல், நட்பை நன்காராய்ந்து பின் கொள்ளவேண்டுமென்பதும், கொண்ட நட்பு, ஒத்த தல்லவாயின் அதனை விடுதலே மேன்மையாம் என்பதும் உணரத்தக்கன.

(4) "வாழ்வில்லாச் சங்கடத்திற் சாதலேநன்று" செல்வமில்லாமற் சங்கடப்படுவதைவிடச் செத்துப்போவ தே நல்லதென்றுர். இது அநுபவமானபேச்சு. அந்தோ! வறுமையினுங் கொடியதுண்டோ உலகில்! இதனுலல்லவா, "கோடிது கோடிது வறுமை கோடிது" "பணமில் லாதவன் பிணம்" "பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை" என்னும் முதுமொழிகள் பிறந்துள்ளன. இப்படிப்பட்ட வறுமைக்குள்ளாய்ச் சங்கடப்படுவதை விடச் சாவதே நன்று என்ற திருவாக்கு அறிவாளியாகிய வறிஞனெருவனுடைய செவிக்கு அமுத தாரையாக இருக்குமென்பதில் ஐயமில்லை. வறுமை அத்தனை கொடியதென்பது பெரும்பான்மையருடைய அநுபவ மாகும். அது பொறுத்தற்கரிய தாகையால் பொருளில்

லாக்குறைவை வாழ்வில்லாச் சங்கடம் என்று கூறினர். இது பொருளே வாழ்வென்றும் இல்லாமை வாழ்வல்ல என்றும் விளக்குகிறது.

"பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை" "பொருளுடையான் கண்ணதேபோகம்" "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவண தெய்த விருதலையு மெய்தும்" என்னும் இம்மூதுரைகளும் பொருளில்லையாயின் வாழ்வில்லை என்பதனை விளக்குவது காண்க. ஔவையார், வாழ்வு பொருளாலன்றி இல்லை என்பதனை வற்புறுத்தவே, "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்றும், "பொருடனைப் போற்றிவாழ்" என்றும் கட்டளையிட்ட தென்றுணர்க.

### அரும்பதவுரை.

வங்கணம் = சிநேகம்; வாழ்வில்லா = பொருளில்லா; சங்கடம் = துன்பம்.

### மேற்கோள்.

(1) மனத்துக் கண் மாசில னாதல னைத்தற
னாகுல நீர பிற.—(குறள்)

(2) எறியென் றெதிர் நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
யட்டில் புகாதா ளரும்பிணி—அட்டதனை
யுண்டி யுதவாதாள் இல்வாழ்பே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை—(திரிகடுகம்.)

---

(1) தருமஞ் செய்பவன் மன மாசற்றிருக்கக்கடவன். அவ்வளவே அறம் என்பது.

(2) எறியென்று = சொல்லு சொல்லு என்று; கூற்றம் = யமன்; சிறுகால் = விடியற்காலம்; அட்டில் புகாதாள் = சமையல் செய்யப் போகாதவள்; அட்டதனை = சமைத்ததை; கொண்டானை = புருஷனை; படை = ஆயுதம்.

(3) புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்-(நீதிநெறி விளக்கம்)

(4) பொருளிலார்க்கின்ப மில்லைபுண்ணிய மில்லையென்றும்
மருவிய கீர்த்தி யில்லை மைந்தரிற் பெருமை யில்லை
கருதிய கரும மில்லை கதிபெற வழியு மில்லை
பெருநிலந் தனிற்சஞ் சாரப்பிரேதமாய்த் திரிகு வாரே.
(விவேகசிந்தாமணி.)

### வெண்பா.

பாடல் பெறுனே பலர்மேச்ச வாழானே
நாடறிய நன்மணங்க ளுடானே—சேடன்
இவன்வாழும் வாழ்க்கை யிருங்கடல்சூழ் பாரிற்
கவிழ்ந்தேன் மலர்ந்தென்ன காண். (18)

ஈகைக்குணமில்லாத சேடனென்னும் ஒரு பிரபுவி னுடைய வாழ்வை இகழ்ந்து பாடியதிது.

### கருத்து.

பொருள் படைத்த பிரபு என்பவன், தன்னைப் பாவலர் நாடிப் பாடி வாழ்த்தவும் பலருந் தன்னை மெச்சவும் நாடறிய நல்ல காரியங்களை விரும்பிச் செய்து வாழ வேண்டும். அப்படி வாழானானால் அவன் வாழ்வு வாழ்வாகாது. அது இகழத் தக்கதாம் — என்று கூறுகின்றதிது.

பாடல் பெறுனே - பிரபுக்கள் பாவலர்களைக் கொண்டு அரிய நூல்களைப் பாடவைத்து அவர்கட்குப் பெரும் பரிசு கொடுத்து ஆதரிப்பது வழக்கம். கற்றறிந்த பாவலர்கள் உலகுக்கு வேண்டிய நன்மைகளைச்

(3) வெளியிலே நட்புக்கொண்டு உள்ளே பகை கொண்டிருப்பவருடைய நஞ்சை யொத்த பகையை வெளிப்படுத்தி வேறுபட வேண்டும்.

செய்வார்கள். அவர்களில்லாத இடம் சிறப்படையாது. அவர்களுள்ள இடம் சகல நன்மைகளையும் பெறுவதற் குரியதாகும். ஆகையினால் அவர்களை இவ்வாறு ஆதரித்து வருங் கடமையைப் பிரபுக்கள் மேற்கொண் டிருந்தார்கள். அவர்களும் பிரபுக்களுடைய பெருமைகளைப் பாடி அவர்கட்கு புகழ் பெருகும்படி செய்துவந்தார்கள். அன்றியும், கொடையினால் தங்களை ஆதரிக்கும் பிரபுக்களைப்பாவலர்கள் பாடி வாழ்த்துவதுண்டு. பாவலர்கள் ஆக்கவும் அழிக்கவும் வல்லவர்களாகையினால் அவர்கள் சொல்லும் வாழ்த்து அரிய பேறுகளைத் தரவல்லது. ஆகையினால் அவர்களை யாதரிப்பதும் அவர்களிடம் வாழ்த்துப் பெறுவதும் பிரபுக்களுக்குச் சிறப்பாம். சேடன் பிரபுவாயிருந்தும் இந்த அரிய செய்கையைச் செய்யாமையினால் அவனிடம் ஈகைக் குணமில்லையென்று தெரிகின்றது.

பலர்மெச்சவாழானே — பலபேர் மெச்ச வாழ்தலும் ஈகை யில்லாதபோது ஒருவனுக்கு அமைவது கூடாமை. "இரப்போர்க்கோன் றீவார்மேல் நிற்கும் புகழ்" என்று தெய்வமறை பேசகின்றதல்லவா?

நாடறிய நன்மணங்க ளுடானே - நல்ல காரியங்களைச் செய்து நாடறிய வாழ்வதற்குப் பலருடைய உதவியும் வேண்டுவது இன்றியமையாத தாதலின், அவ்வுதவி ஈகையின்றிக் கிட்டாதென்பது திண்ணமாம். ஆதலின் இதுவும் ஈகையின் வழியே அமைவதாம்.

(1) "ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
ஊதிய மில்லை யுயிர்க்கு."

---

(1) வறியர்க் கொன்றைக் கொடுத்தலா லுண்டாகும் புகழைப் பார்க்கிலும் மக்களுக்கு வேறு பயனில்லை.

என்னுந் தெய்வமறையின் திருவாக்குப்படி, மனிதரெனப் பிறந்தவ ரெவரும் ஈகையினு லுண்டாகும் புகழைத் தம்மாலியன்ற வளவில் தேடக் கடமைப்பட்டவரென் றுகிறது. பொருளபெற்ற ஒருவன் இந்தக் கடமையைச் செய்வது எளிதாமன்றோ? இதனாலல்லவா வேதம்—

(2) "அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்."

என்று பொருளின் பெருமையை விளக்கியுளளது. புகழ் பெறுவதற்கு அரிய துணையாகிய பொருளிருந்தும் அதைத் தேடிக் கொள்ளாதவன்—

(3) "அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."

என்னும் வேத வாக்கைக் கடந்தவ னாகின்றான். கடமை தவறியவன் வாழ்விருந்தாவதென்ன?—

பொருள் ஈதற்குரிய துணையாகின்றமையினால் அது அறத்திற்கும் உரிய துணையாம். ஈதலறமல்லவா?

(4) "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை."

என்று வேதஞ் சொல்லுகிறபடி, பொருளுடைமை அறத்தினாலென்றும் அதாவது புண்யவசத்தினா லென்றும் பொருளில்லாமை அறனை மறந்ததாலாகும் பாப வசத்

---

(2) நன்மார்க்கத்தாற் சம்பாதித்த பொருள் மறுமைக்குரிய அறத்தையும் இம்மைக்குரிய இன்பத்தையுந் தரும்.

(3) பொருள் பெற்றவன் அப்பொருளை வைக்குமிடம் வறியர் பசியைத் தீர்த்தலேயாம்; அதாவது ஏழைகட்குக் கொடுப்பதாம்.

(4) தருமத்தின் பயன் சிவிகை யெடுப்பவனிடத்திலும் ஏறுபவனிடத்திலும் காணலாம்.

தினுலென்றும் காண்கின்ருேம். "தவத்தளவே யாகுந் தனம்" "அறஞ்செய்யின், அஃதன்ரே எய்ப்பினில் வைப்பென்பது" என்றும் வெளிவந்துள்ள திருவாக்கு களை நோக்குக.

இவ்வாறு பொருள் அறத்திற்கும் அறம் பொரு ளிற்கும் துணையாயிருப்பதை அறியாதார், ஈகையினுல் பொருள் செலவாய் விடுமென்று கருதி அதனை, உடாம லும் உண்ணுமலும் பிறர்க்கு ஈயாமலும் சேமித்து வைக் கின்றனர். சேமித்த பொருள்—

* "பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேரும்"—(நன்னெறி.)

என்பதற் கிணங்க வேருருகுமல்லது, ஈட்டிச் சேமித்தவ னுடையதாகாது. இதற்குச் சான்று, "உய்த் தீட்டுந் தேனீக் கரி" என்றதாம். ஆனுல் கொடுக்கப்படும் செல்வமோ, "கொடுத்தேழையாயினரில்" என்றும் "இறைக்கப்படும் கிணறுபோல், கொடுக்கக் கொடுக்கப் பொருள் பெருகும்" என்றும் கூறியுள்ளபடி விருத்தியா கும். ஆனபடியினுலே தான், "அறஞ்செய விரும்பு" "ஆற்றுந் துணையும் அறஞ் செய்க"—என்னும் கட்டளை கள் பிறந்துள்ளனவென் றறிக. இஃதுணரும் உணர் வில்லாத லோபியின் வாழ்வு இகழ்தற்கு உரியதன் றிப் பெருமையின்பாற் படுவதாமோ?—மேலும், ஔவை யார், "இவன் வாழும் வாழ்க்கை யிருங்கடல் சூழ் பாரிற் கவிழ்ந்தென் மலர்ந்தென்ன காண்" என்று கூறியது, உண்ணுத குழவியைத் தாயார் வருந்திப்

* பிறர்க்குபகாரஞ் செய்யாதவருடைய செல்வம் வேருமாயினும் அது பிறர்க்குபகாரஞ் செய்பவருடை யதேயாம்.

பாலூட்டுதல்போல், பிறரை அறநெறிப்படுத்த வற்புறுத்தியதாம்.

### மேற்கோள்.

எட்டிப் பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன ?
இல்லையென்ற வீட்டிநீ பல்லியும் நுழையாது—
(இவை பழமொழிகள்.)

- - - - - சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குப காரஞ்செய் யார்தமை யண்டினர்க்கொன்
றீயா ரிருந்தென்ன போயென்ன காண்கச்சி யேகம்பனே
(பட்டணத்தார்.)

வைத்துப் பொருளைத்தானுகரான் வழங்கானிருந்துஞ்
செத்தானே — (விநாயக புராணம்)

### வெண்பா.

- - - - - - - - சுகிர்த
விரதந் தனிலிளைத்த மேனி—நிரதங்
கொடுத்திளைத்த தாதா கொடுஞ்சமரிற் பட்ட
வடுத் துளைத்த கல்லபிரா மம். (19)

சோழமகாராஜன் ஒரு சமயம் ஔவையாரை நோக்கி, "மக்களுக்கு ஈதன்றல் அழகு விளங்கும் ?" என்று கேட்டான். அப்பொழுது பாடியதிது.

### கருத்து.

விரதம், கொடை, வீரம் இம்மூன்றின் பெருமையை விளக்குவதிது.

(1) சுகிர்த விரதந் தனிலிளைத்த மேனி = நல்ல விரதத்தினலே இளைத்துப்போன உடம்பு. விரதம் என்பது நோன்பு. "நோன் பென்பது கொன்று தின்னமை" (கொன்றைவேந்தன்) "காப்பது விரதம்" (ஆத்திசூடி) என்பது நோன்பு அநுஷ்டித்தலை வற்புறுத்துவதாம்.

மனம் ஐம்பொறிகளின் வழியே செல்லாமற் றடுத்தற் பொருட்டே நோன்பு அநுஷ்டிப்பது. அவ்வாறு தடுத்து நிற்றலே தவம். ஆகையினால் விரதம் என்பதும் தவம் என்பதும் ஒரு பொருள் தருவதாம்.

* உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு "—

என்னும் வேதவாக்கு இதனை இனிது விளக்குவதாம். தவத்தால், பகைவர்களைக் கெடுத்தலும் நண்பர்களைக் காத் தலுமாகிய சாபாநுக்ரஹ சக்தியும் யமனை வெல்ல வல்ல அபாரசக்தியும் வாய்க்குமென்பர். ஆதலின் தவமுடை யார் எல்லோராலும் வணங்கத்தக்க பெருமையுடையவ ராக விளங்குவர்.

இஃதிங்ஙன மிருக்கின்றமையினாலே தான், "தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்" என்று நாயனார் எடுத் துக் கூறினார். ஆகவே தவஞ்செய்வதே மக்கட் பிறப் பினை யடைந்தவர் செய்யத்தக்க செயலென் றாயிற்று. செய்யத்தக்கவைகளைச் செய்வது அறிவுடைமையாவது மன்றி அது எல்லா நலனுங் கொடுப்பதுமாகுமாதலின் அது செய்து இளைத்த மேனி அழகு என்றனர்.

விரதத்தினாலே இளைத்து எலும்பும் தோலுமா யிருக்கும் உடம்பு அருவருக்கத்தக்கதாகுமல்லது அழ காவதெப்படி யெனின், அந்த உடம்பு சகல மங்களங் களையும் தரும் பெருமையுடையது; தரிசித்தவருடைய பாபங்களையும் போக்கவல்லது. ஆதலின் என்க. "கல்வி

* உண்டி சுருக்கல் முதலியவற்றால் தம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்தலும் பிறவுயிர்க்குத் துன் பஞ் செய்யாமலிருத்தலும் ஆகிய இவ்வளவே தவத்திற்கு வடிவமாம்.

யழகே அழகு" என்று வரும் பேரதனை இதனை விளக்குவதாம். சித்ரம் போன்ற வெற்றுடம்பு அழகாவதில்லை.

(2) நிரதங் கொடுத்திளைத்த தாதா = நாடோறும் (வந்து கேட்கும் யாசகர்க்கு) கொடுத்து அதனால் வறிஞனை கொடையாளி. இவனை அழகென்றது எப்படியெனில், கொடுத்தல் (ஈதல் அறம்) அறமாம். அறத்தின் வழி நிற்கும் கொடையாளி,

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு."—

என்னும் வேதவாக்குப்படி குறைவற்றவனாகின்றான். அறம் புகழை நிலைநிறுத்துவதாதலின், கொடையாளி புகழுக்குரியவனாகின்றான். "புகழுடன் வாழ்பவனே உயிர் வாழ்வானாவான்," என்றும் "புகழுடையானானால் அதுவே ஒருவனுக்கு வசை" என்றும் கூறும் வேதம். ஆதலால் புகழைத் தேடிக்கொள்வது மக்களின் கடமையாவதாலெனக. கல்வி, செல்வம், செல்வாக்கு முதலியவைகளால் புகழ் உண்டாதல் கூடும். ஆயினும் உடல் நிலைத்திருப்பதற்குரிய காரணங்கள் பலவற்றுள், "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!" "உணவெனப்படுவது நிலத்தொடு நீரே" என்று கூறுவதற்கிணங்கச் சோறும் நீருமே சிறப்பாதல் போல, புகழ் உண்டாவதற்கு வறிஞர்க்கொன் றீதலேசிறப்பாம். ஆகையினால் ஈகையினால் அடையத்தக்க புகழே தேடத்தக்கதாம். அந்தப் புகழுடையவனே, "மேதினியில் இட்டார் பெரியோர்" என்கிறபடி பெரியவனாவான்.

ஈதல் இத்துணைச் சிறப்புடைத்தாதலின், அதன் வழி நின்று இளைத்தபோதிலும், புகழ் அழியாமல் விளங்கு மாதலால், அதனையும் ஓர் அழகு என்றார்.

(3) கொடுஞ்சமரிற்பட்ட வடுத்துளைத்த கல் அபிராமம் — மேலே, விரதத்தி லிளைத்தவர்களுடைய மேனியும், கொடையா லிளைத்தவர்களுடைப் மேனியும் அழகு என்பதை விளக்கி யுள்ளபடி தவமும் தருமமும் விளக்கியதாயிற்று. அவ்விரண்டில் தவம், ஒருவன்றன் உடலுயிரபிமானமின்றிச் செய்வதாம்.— இதுபோலவே வீரஞ் செலுத்த முன்வரும் ஒருவனும் தன் உடலுயிரபிமானமொழிந்து நிற்கவேண்டியவனாகின்றான். அன்றித் தபோதனரைப்போல் வீரனும் பகைவரை யழிக்கவும் நண்பரைக் காக்கவும் வல்லவனாகிறான். ஆனால் தவமுடைய பெரியோர் எப்போதும் எந்த எண்ணமு மில்லாமல் ஈசுவரத் தியானத்திலேயே யிருப்பார்கள். வீரனோ வெற்றி யொன்றையே நாடியவனாயிருப்பான். ஆகவே தவமுடைய பெரியோர் ஒன்றிலும் விருப்பமில்லாதவரென்றறியலானோம்.

மரண காலத்தில் யார் எந்த நினைவோடிருக்கிறார்களோ அந்த நினைவிற்குத் தக்கபடி பிறப்பெய்துமென்று நூல்கள் கூறுகின்றன. மறுமையின்பம் — ஸ்வர்க்கம் மோட்சம் என்று இருவகையினதாம். இவற்றுள், மோட்சம்,

*"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து"—

என்று வேதங் கூறியுள்ளபடி, விருப்பமற்றவர்க்கே கிட்டுவதாம். மோட்சம் விருப்பமற்றவர்க்கென் றாகிறபடியால்

---

* அறிவென்னு மங்குசத்தினாலே பொறிகளாகிய யானைகளைந்தையும் புலன்களின்மேற் செல்லாமற் காப்பவன், நிலங்களுக்கெல்லா மேலானதென்று சொல்லுகிற மோட்ச நிலத்துக்கு ஒரு வித்தாவான்.

ஸ்வர்க்கம் விருப்பத்தின் வழி யமைவதென் ருகிறது. ஆகவே, இங்கு விருப்பமற்றவராகிய தபோதனர் பெறுவது மோட்சம்; வெற்றியை யடைய விரும்பும் வீரன் பெறுவது ஸ்வர்க்கம் என்றுவை அறியலாஞேம். இருவர்க்கும் வேறுபாடு இத்துணைத்தேயாம். ஸ்வர்க்கம் செல்லும் வீரர்களை அங்குத் தேவமாதர் விரும்பி வரவேற்று உபசரிப்பர் என்று சொல்வர். ஆகையினுல் அவர்கள் தேவமாதரும் விரும்பத்தக்க தெய்வஸ்வரூபம் பெறுகின்ருர்கள் என்பதில் ஐயமில்லை. இதனுலேதான், "கொடுஞ்சமரிற்பட்ட வடுத்துளைத்த கல் அபிராமம்" என்று கூறியதென்றுணர்க.

இதனையன்றி வீரம் சரீரதிடமும் மனத்திடமுமுடையவனுக்கே யமைவது. சரீரதிடமும் மனத்திடமும் நோயற்றவிடத்தே சித்திப்பனவாம். நோய் நொடியுடன் கூடிய சரீரத்தினும் நோயற்ற சரீரமே அழகு என்பதையும் இது உணர்த்தியதாம்.

உலகத்தில்,—அனைவர்க்கும் உபகாரி, நீதிமன்னர், சற்புத்திரனை ஈன்றவர், அறஞ்செய்தவர், கற்றுணர்ந்தவர், கற்பிற் சிறந்தவளை மணந்தவர், *பொருது சமர் வென்ற சுத்தவீரர் — இவர்களை "செத்த பிறகுஞ் சாகாதவர்" என்று பெரியார் கூறியிருக்கின்றனர். ஏன்? இவரதுடம்பழியினும் இவரது புகழுடம்பு அழிதலின்மையாலேயாம். புகழ் புருஷருக் கழகாதலின், அதற்குக் காரணமாகிய வீரமும் அழகாயிற்று.

கமலாசனம், பொய்பேசாப் புனிதர், நல்ல சுபலக்ஷணமமைந்த மனை, நீதியுடைய அரசர், *இரணசுத்த வீரர் — இவர்களிடம் திருமகள் வாழ்வாள் என்று கூறுகிறபடியினுல் வீரமுடைமை அழகாயிற்று.

---

* குமரேசசதகங் கூறுவது.

வீரம் பதினாறு பேறுகளில் ஒன்று. ஆதலின் அது அழகு. பேறு பெறுதல் மானிடர்க்கழகல்லவா ?—

மேற்கோள்.

* "சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற்ப வர்க்கு."—(குறள்.)

† "சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை."—(குறள்.)

துதிவாணி வீரம் விசயஞ்சந் தானந் துணிவுதனம்
அதிதானி யஞ்சவு பாக்கியம் போக மறிவழகு
புதிதாம் பெருமை யறங்குல நோயின்மை பூண்வயது
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே.

(காளமேகப்புலவர்.)

வெண்பா.

நிட்டூ ரமாக நிதிதேடு மன்னவனும்
இட்டதவ னமேச்சா விரப்போனும்—முட்டவே
கூசிநிலை நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும். (20)

இது இன்னின்னோர் கெடுவரென்று பாடியது.

கருத்து.

இதில், அரசன், இரப்பவன், குலக்கொடி, வேசி இந்நால்வரின் ஒழுக்கங்கள் இவையென்பது தோன்ற, அவர்களுண்டாப முறைதவறுன செய்கைகளை யெடுத்துக்

---

* புடம்போட்ட பொன்னுக்கு ஒளி மிகுதல் போன்று தவஞ்செய்வோர்க்கு ஞானமிகும்.

† மரணத்தைப் போலத் துன்பந் தருவது வேறொன் றில்லை. அப்படிப்பட்ட மரணமும் வறியார்க்கொன்றை உதவ முடியாதவிடத்து இனியதாம்.

காட்டி அப்படி முறைதவறி நடந்தால் அவர்கள் கெடுவர் என்று கூறியிருக்கிறது. ஆதலின் இச்செய்யுள் ஒழுக்கத்தவறு கேடுதருமென்பதை விளக்குவதாம்.

ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்தது. ஒழுக்கம் அறங்களெல்லாவற்றினும் மேலானது. ஒழுக்கமே உயர்வைக் கொடுப்பது — என, ஒழுக்கத்தின் பெருமையை வேதம் விளக்குகிறபடியால், அந்த ஒழுக்கத்தை மறந்தவன் கேடடைவது திண்ணமல்லவா? இதனையே இச்செய்யுள் போதிக்கின்றது.

இதில், "நிட்டூரமாக நிதிதேடு மன்னவன் கெட்டுவிடும்" என்று முதலில் மன்னவனுடைய ஒழுக்கத்தை யெடுத்துக்கொண்டு பேசுகின்றார். மன்னன்,—

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்."—

(புறநானூறு.)

என்று கூறியுள்ளபடி, உலகுக்கு உயிர்போன்றவனாதலின், அவன் சீலஞ் சிறந்திருப்பானானால், அவன் கீழ் வாழும் குடிகளுடைய சீலமும் சிறந்து அதனால் இருவரும் இன்பமும் பெருமையுமடைவர். ஆகையினால் முதலில் அவனுடைய சீலத்தைக் கவனித்துள்ளது போலும்!

மன்னவனுடைய செங்கோன் முறையே அதாவது சீலமே (நீதியே) குடிகள், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு நெறிகளிலும் பிறழாமலிருந்து ஒவ்வொன்றிற்குமுரிய நூல்களையாய்ந்து இம்மை மறுமைப்பயன்களை அடைதற்குக் காரணமாகலின், அவன், வண்டு மலரிலிருந்து தேனைக் கிரகிப்பதுபோலக் குடிகளிடமிருந்து வரிப்பணம் கொண்டு அவர்கட்குத தன்னாலும்

பரிசனத்தினுலும், பகைமயரசராலும், கள்வர், துஷ்டமிரு கங்களாலும் தீங்கு நேராவண்ணம் பாதுகாப்பான். வண்டு மலரிலிருந்து தேனைக் கிரகிப்பதுபோல் வரிப் பணங்கொள்வனென்றல், அது, குடிகளை வருத்தாமல் விதித்த வரியைக் கொள்வதென்றாகிறது ; வரி விதிப்பது குடிகள் மனமுவந்து தரும்படியாயிருத்தல் வேண்டுமென் பதும் அறியலானோம். இப்படி முறை செய்யுங்கால்,

*"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்."—(குறள்.)

என்று கூறியுள்ளபடி அரசன் பெருமையடைவானுதலால், அந்த அரசும் குடிகளும் நீடு வாழுமென்பதி லையமில்லை. இந்த முறை மறந்து நிஷ்டூரமாக நிதிதேடுதல் அதாவது குடிகள் தாங்கமாட்டாத வரியை விதித்து அவர்களை வருத்தி அதனைப் பெறுதல் கொடுங்கோன்மையாம். கொடுங்கோன்மை யுண்டாகுங் காலத்தில், குடிகளிடம் அரசன் கொள்ளவேண்டிய அன்பும் குடிகள் அரசனிடம் கொள்ளவேண்டிய அன்பும் மாறுபடும். ஒற்றுமைக்குக் காரணமான அன்பு மாறுபடுமாயின், குடிகள் கோமுறை யேற்று அடங்கி வாழ்வதரிது. குடிகள் வேறுவாராயின் அரசன் உடலை விட்ட உயிர்போலாவான். இதனாலேதான்—"நிஷ்டூரமாக நிதி தேடு மன்னவன் கெட்டுவிடும்" என்று கூறியதென்றுணர்க.

(1) "இட்டதனை மெச்சா இரப்போனுங் கெட்டுவிடும்" என்று சொல்லுகின்றார். முதலில் செல்வத்திற்குரிய அரசனைப்பற்றிப் பேசி இரண்டாவதாக வறுமைக்குரிய இரவலனைப்பற்றிப் பேசுகின்றமையினால் இது

* முறைப்படி குடிகளைக் காக்கும் மன்னன் அக்குடிகளுக்குத் தெய்வமென் றுரைக்கப்படுவான்.

செல்வம் வறுமை யென்னும் வரிசையில் கொள்ளத்தக்க தாகிறது. இரவலன் என்பதற்கு வறுமை மேலிட்டவன் என்பது பொருளாகும். வறுமை மேலிடாவிடத்து ஒரு வன் இரந்து உண்ணுந் தொழிலை மேற்கொண்டு இரவலன் என்ற பெயர்க்குரியவனுவதிராது. இரத்தல் இழிவாயினும் அதனை இழிவென்று தள்ள வறிஞனுல் முடியாதாகையி னுல், வேதம், "இரக்க இரத்தக்கார்க் (இரத்தற்கு ஏற் புடையவரை) காணின்" என்று பணித்ததாம். இந்த நுட்பம் உணர்ந்து இரப்பின், ஏற்பதிகழ்ச்சி யென்னுந் தொழிலிழிவு தோன்ருது. அஃதாவது மானங்கெடாமல் வாழ்வர். மானந்தீரா இரவாதலின் இது இரவாமையோ டொக்கும் என்பர். இதனையன்றி,

* இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முருஅ வரின்—

என்றும் வேதம் விதித்துள்ளபடியால் இரத்தல் ஒரு வழியில் இன்பமுமாகிறது: இரவலன் இவ்விருவகை வழி களிலும் செல்வது அவன் கடமையாகும். இவ்வழி களை மேற்கொண்டு செல்ல, இரவலன் நல்லுணர்வுடைய வனு யிருத்தல்வேண்டும். அதாவது வறுமைத் துன்பங் களைப் பொறுத்துக்கொண்டு முறைமை மேற்கொள்ளல் வேண்டும்.

† "நீர்மையே யன்றி நிரம்ப வெழுந்ததங்
கூர்மையு மெல்லா மொருங்கிழப்பர்—கூர்மையின்

---

* இரந்தபொருள் தான் துன்பமுருமல் வருமானுல் ஒருவனுக்கு இரத்தல் தானும் இன்பத்திற்கு ஏதுவாம்.

† நீர்மை = (இயல்பா யமையவேண்டிய) நற் குணங் கள், நிரம்ப = அதிகமாக (மேலும் மேலும்) எழுந்த = உண் டாக்கிய; கூர்மை = நுண்ணறிவு; ஒருங்கு = முழுதும்;

முல்லை யுலைக்கு மெயிற்றாய் நிரப்பென்னு
மல்லல லடையப்பட் டார்."

என்று கூறியுள்ளபடி, தனக்கடிமையானவனுடைய நிலையையுங் குணத்தையுங் கெடுக்கும். கெடுக்குங்கால், இரவலன் முறையை மேற்கொள்ளாமல் இடர்ப்படுவன். "இரத்தக்கார்க் காணின் இரக்க" என்றும் "இரந்தவை துன்பமுறாஅ வரின் இரத்தல் ஒருவற்கு இன்பம்" என்றும் கூறியுள்ளபடியால், ஈவோரைத் தேடிக் காலமும் இடமுமறிந்து செல்லுதல், அவர் குறிப்பறிதல், அவரைத் தம் வசப்படுத்தல், அவர் மனமிரங்கத்தக்கவை நாடிச்சொல்லல் முதலியன இரவலர் கொள்ளத்தக்க முறையிலடங்கும். ஆதலால், இட்டதனை மெச்சுகிறவனே வாழ்வன் என்னும் கருத்தை விளக்குவதாகிய "இட்டதனை மெச்சா இரப்போனுங் கெடும்" என்ற போதனை, "அவரைத் தம் வசப்படுத்தல்" என்னும் முறையிலடங்கும்.

இம்முறையை மேற்கொள்வதனால், இடுபவன் மகிழவும் மகிழ்ந்தவளவில் அவனுக்கு இடுவதில் தளர்வடையா மனமுண்டாதலுமாகும். அந்த மனமுண்டானபோது கையிலுள்ளதை மறைக்காமல் கொடுத்தலாகிய ஈதன் முறை தானே அமையும். இதனால் இரவலன் இடுபவனை இடும் முறையில்வைத்து அதில் ஊக்கமுமுண்டாகும்படி செய்கிறவனாகின்றான். இவனுக்கும் போதுமென்ற மனம் சித்திக்கின்றது. ஆகையினால் இவன் இரத்தலாலாகும் இழிவை வென்று இன்பமடைகின்றான். ஆகவே இந்த முறைமைபற்றி நடந்து, வறுமை

கூர்மையில் = கூரியதாகுந் தன்மையில்; முல்லை = முல்லை மலரை; அலைக்கும் = பின்னடையச்செய்யும்; எயிறு = பல்; நிரப்பு = வறுமை; அல்லல் = துன்பம்.

யுற்ற ஏழைகள் உய்யவேண்டுமென்னும் கருணையால் பிறந்த போதனை இது.

3. முட்டவே - கூசி நிலை யில்லாக் குலக்கொடியும், கூசியவேசியுங் கெட்டு விடும்—இதில் குலக்கொடியையும் வேசியையும் பற்றிப் பேசியிருக்கின்றார். கூசுதலின்மை கூசுதலுடைமை யென்னு மிரண்டையும் விளக்குவதிது. ஆதலால் இங்கு, கூச்சம் என்னும் குணமே எடுத்துக் கொண்டதாம். "கூசி நிலைநில்லாக் குலக்கொடி கெட்டு விடும்" என்றமையினால், கூச்சம் அல்லது நாண மேற் கொண்டு அதற்குத் தக்க நிலையில் நிற்றலே குலக்கொடிக் கேற்ற குணமென்பதும் "கூசிய வேசியுங் கெட்டு விடும்" என்றமையினால் நாணமில்லாமையே வேசிக்கேற்ற குண மென்பதும் தெரியலாகும்.

குலக்கொடி, குலமகள், குலத்திற்குரியவள், குலம் விளங்க வந்தவள், மனைமாட்சியுடையவள், கற்பிற் பிற ழாதவள் என்பன ஒரு பொருட்சொற்கள். வேசி, விலை மகள், பொதுமகள், தாசி, கணிகை, வரைவின்மகளிர் என்பன ஒரு பொருட்சொற்கள். குலக்கொடிக்கு நாண முடைமை சிறப்பு; வேசிக்கு நாணமின்மை சிறப்பு. நாண மேற்கொள்ள வேண்டியதிவர் என்பதும் நாணம் கொள்ளாமலிருக்க வேண்டியவ ரிவரென்பதும் விளக்கிய தாம். நாணம் —

* "கருமத்தா னாணுத னாணுத் திருநுத
லல்லவர் நாணும் பிற"—

---

* நாணுவது, (இழிந்த) கருமங் காரணமாக நாணுத லாம்; அஃதல்லாமல் மனமொழி மெய்களின் ஒடுக்கத்தால் வருவனவோ என்றால் அவை அழகிய நெற்றியையுடைய குலமகளிரது நாணங்களாம்.

என்னும் வேத வாக்கால், ஆண்பெண் இருபாலார்க்கும் இன்றியமையாத ஒரு குணமென்றாகிறது. ஆடவர்க்கு, இழிந்த செய்கை கண்டு அஞ்சுதலும் பெண்டிர்க்கு மன மொழி மெய்கள் ஒடுங்கி நிற்றலும் நாணமாம். நாணம் என்னும் சிறந்த குணம் ஒருவற்கு அமையுமாயின் பல நற்குணங்களுக்கும் ஆதாரமான சால்புடைமையும் தானே அமையும் என்பர். "நாணுடைமையே மாந்தர்க்குச் சிறப்பு" "அணியன்றோ சான்றோர்க்கு நாணுடைமை" என்றும் வரும் வேத வாக்குகள் இதன் மேன்மையை விளக்குவனவாம்.

இத்தகைய சிறப்பினதே நாணம். "திருநுதல் நல்லவர் நாணும் பிற" "நாணமென்பது பெண்டிர்க்கு இயல்பாகவுடையதொரு தன்மை" (நக்கீரனார்) "காமுற்ற பெண்ணுக் கணிகலம் நாணுடைமை" (திரிகடுகம்) — * "நாற்குணமும் நாற்படையா நல்லைம் புலனமைச்சா, ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா, வேற்படையும் - வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ், ஆளுமே பெண்மை யரசு" — (நள வெண்பா) "ஒழிந்த மனவாக் குடலொடுக் கம் ஒளிவாணுதலார் நாணேயாம்" (விநாயக புராணம்)— என்னுந் திருவாக்குகள், நாணம், மடம், அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களிலும் நாணமே நிலையாயதென் பதை உணர்த்துவனவாம்.

"குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்" "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை" "காவ ரூனே

---

* நாற்குணம் = வெட்கம், பேதைமை, பயம், அருவருப்பு (நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு); நாற்படை = ரதம், கஜம், துரகம், பதாதி; ஐம்புலன் = மெய், வாய், கண், மூக்கு, செவி; அமைச்சு = மந்திரி. அணிமுரசு = அழகிய பேரிகை.

பாவையர்க் கழகு" என்னும் முதுமொழிகள் பெண்களின் கற்பிலக்கணத்தை விளக்குவனவாதலால், அந்த வரம்பில் தவறுதிருப்பதற்கு நாணம் முதலிய நாலும் அரணாக நிற்பனவாம். ஆதலால், புருஷனுக்கடங்கி அவன் மகிழும் வழி நடந்து அவனைப்பேணும் கடமை பூண்ட குலமகட்கு நாணமுடைமையே உடைமையாம்.

வேசி, குலமகளைப்போல் பிறர் தம் ஆதரவின் கீழ் வாழ்வதில்லை. அவள், தனக்குத் தானே பொருள் தேடி வாழ்பவள். வேசியை விலைமகள் என்றமையினால் அவள் பிறர்க்குத் தன்னலம் விற்றுப் பொருள் தேடுவதைத் தொழிலாகக் கொண்டவள். அந்தத் தொழிலை மேற்கொண்ட அவர்கட்கு, குலப்பெண்டிர்க்குரிய நாணம் இடையூறாகு மாதலால் நாணுடைமை அவர்கள் கொள்ளத்தக்க குணமன்றென்றனர். "விலைமகட் கழகுதன் மேனிமி னுக்குதல்" என்னும் திருவாக்கு, தாசிக்கு மேனி மினுக்குதல் அழகு என்கிறபடியால் அவர்கள் நாணமேற் கொள்ளின் அது முடியாததாமன்றோ? ஆதலின் நாண மின்மையே அவர்கட்குச் சிறப்பாம்.

### அரும்பதவுரை.

நிட்டூரம் = விரோதம்; நிதி= திரவியம்; இட்டதனை = கொடுத்ததை; முட்ட = முழுதும்; நிலைநில்லா = தனக்குரிய முறைப்படி நடவாத.

### மேற்கோள்.

*குடிகொன் றிறைகொள்ளுங் கோமற்குக் கற்று
மடிகொன்று பால்கொளலு மாண்பே—குடியோம்பிக்

* குடிகளை வருத்தித் திறைகொள்ளும் அரசனுக்குக் கன்றையுடைய பசுவின் மடியைக் கொய்து பால் கொள்ளு

கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.—(நீதிநெறி விளக்கம்.)

கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.—(குறள்.)

பிச்சைபுக் குண்பான் *பிளிறாமை முன்னினிதே.
(இனியவை நாற்பது.)

†"பெற்றமையு மென்னுப் பெரியோரும் பெற்றபொருள்
மற்றமையு மென்று மகிழ்வேந்து—முற்றியநன்
மானமில்லா வில்லாளும் மானமுறும் வேசியரும்
ஈன முறுவா ரிவர்."—(நீதிவெண்பா.)

வெண்பா.

மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபகன்
ஞாடில்லான் செங்கோ னடாத்துவதுங்—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லா வீடும் விழல். (21)

இன்னதன்றி இன்னது சிறவாதென்று பாடியதிது.

---

தலும் நற்செய்கையாம்; குடிகளைப் பாதுகாத்து, திறை வாங்கு முறைப்படி வாங்குமரசர்க்கு மேன்மையான திரவியம் வெள்ளமென்னுந் தொகையினு மிக்க அமோகமாய்ப் பெருகும்.

முறைதப்பி நடக்குமரசன் பொருளையும் குடிகளையும் இழப்பான்.

* பிளிறாமை = கோபியாமை.

† பெற்றது போதுமென்று திருப்தியடையாத பெரியோரும், பெற்றது போதுமென்று திருப்தி கொள்ளும் அரசனும், நல்ல மானமில்லாத மனைவியும், மானங்கொள்ளும் வேசியும் கெடுவர்,

**கருத்து.**

இதில் ஆறு நீதிகள் விளக்கியுள்ளன. அவை யாறும் இன்னதின்றி இது சிறவாதென்பதனை விளக்கி இதற்கு இது இன்றியமையாததென்பதை உணர்த்துவனவாம்.

(1) மாடில்லான் வாழ்வு விழல் = மாடு இல்லாதவனுடைய வாழ்வு வீண். மாடு என்பது - எருது, பசு, எருமை, எருமைக்கடா என்னும் கால்நடைகளின் பொதுப்பெயராகையினால், எருது முதலியன இல்லாதவனுடைய வாழ்வு எனக் கொள்ளல் வேண்டும். கொள்ளுங்கால் வாழ்வு என்பது வேளாண்மையென்னுந் தொழிலால் வரும் வாழ்வென்றேயாம்.

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு."—(நீதிநெறிவிளக்கம்)

என்றும், "பூமி திருத்தியுண்" (ஆத்திசூடி) "தொழுதூண் சுவையி னுழுதூணினிது" (கொன்றைவேந்தன்) என்றும்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்"—(குறள்.)

என்றுங் கூறியுள்ளபடியால் இங்கு வாழ்வென்று கூறியது வேளாண்மையினையேயாம். அதாவது உழுதுண்டு வாழும் வாழ்வினையேயாம். இந்த வாழ்வு மாடில்லாதவனுக்கு நன்கமையாதன்றோ? ஆதலின், "மாடில்லான் வாழ்வு விழல்" என்று கூறியதென் றுணர்க.

மாடு என்னுஞ் சொல்லுக்குச் செல்வம் என்றும் ஒரு பொருளுண்டு. அப்பொழுது இது, செல்வமில்லாதவனுடைய வாழ்வு வீண் என்று பொருள்படும்.

செல்வமில்லாதவனுடைய வாழ்வைப்பற்றி, "வாழ்வில்லாச் சங்கடத்திற் சாதலே நன்று" என்று முன்பேசியுள்ளது. இதுவும் அந்த நீதியையே விளக்குவதாம். ஆதலின் இங்கு செல்வமில்லாதவனுடைய வாழ்வென்று பொருள் கொள்வதினும் மாடுகளில்லாதவனுடைய வாழ்வென்று கொண்டு வேளாண்மைத் தொழிலை விளக்கியதாக உணர்தலே சால்பாம். மற்றுமிவர், மதியில்லான் வாணிபம் என்று வாணிபத் தொழிலை அதாவது வியாபாரத் தொழிலை இதற்கடுத்தாற்போ லெடுத்துப் பேசுகின்றாராதலின், இது வேளாண்மைத் தொழிலைப்பற்றியென்பதி லையமின்றாம். இவ்விரண்டு தொழில்களும் ஏனைய தொழில்கள் பலவற்றினும் சிறந்தனவென்று சொல்வர். இவ்விரண்டினுள் "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை" என்று கூறியபடி உழுதுண்டு வாழ்தலே சிறந்ததாம். ஆதலின் முதலில் இதனை யெடுத்துக்கொண்டனரென் றுணர்க.

(2) மதியில்லான் வாணிபம் விழல் = அறிவில்லாதவனுடைய வாணிபம் வீண். இதனால் அறிவில்லாதவன் வாணிபஞ் செய்யின் அது பயன்றராதென்பதை உணர்த்தியதாம். வாணிபம் அதாவது வியாபாரம் என்பது, பொருளைக்கொண்டு பண்டங்களை வாங்குவது, வாங்கியவைகளைக் காலமறிந்து இலாபத்திற்கு விற்பது, விற்பதற்கும் கொள்வதற்கும் கணக்கு வைத்து இலாபங் கண்டுபிடிப்பது, கண்டுபிடித்த அந்த லாபத்திற்குத் தக்கபடி வாழ்வை நடத்துவது ஆகிய இம்முறைகளை மேற்கொண்ட ஒரு தொழிலாம். இவற்றையன்றி வைத்த முதலை மேன்மேலும் விருத்திக்குக் கொண்டு வருவதுமொன்றாகும்.

கொண்டபடி போலும்விலை பேசிலாபஞ்சிறிது
கூடிவர நயமுரைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம் வராதபடி
குறுகவே செலவுசெய்வார்
வண்டப் புரட்டர்தா மறிதந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீந்திடார்
மருவுநா ணயமுளோர்கேட்டனுப் புகினுமவர்
வார்த்தையிலெலாங் கொடுப்பார்
கண்டெழுது பற்றுவர வினின்மயிர் பிளந்தே
கணக்கிலணுவாகிலும்விடார்
காசு வீணிற்செல விடாருசித மானதிற்
கனதிரவி யந்தள்விடுவார்
மண்டலத் தூடுகன வர்த்தகஞ் செய்கின்ற
வணிகர்க்கு முறைமையிதுகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.—(குமரேசசதகம்.)

இது வணிகனொருவன் மேற்கொள்ளவேண்டிய முறையாம்.

ஆகையினால் இந்தத் தொழில் செய்வது எளிதல்ல. இதற்குப் பிரதானம் பொருள். ஆதலின் அதனை முதல் என்றுஞ் சொல்லுகின்றனர். முதலுண்டாமாயின் மாத்திரம் வாணிபம் எளிதில் முடியுமென்று கூறுவதற்கில்லை. இது, மேலே கூறியபடி முதலை வகுத்துப் பயன்கொள்ளவேண்டிய தொழிலா யிருக்கிறதல்லவா? அந்தத் திறமை அறிவுடையவனுக்கன்றி மற்றவனுக்கமையாது.

*"அறிவுடைய ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்"—(குறள்.)

*அறிவுடையார் வேறொன்று மில்லாராயினும் எல்லா முடையவராவர். அறிவில்லார் எல்லாமுடைய ராயினும் ஒன்றுமில்லாதவராவர்.

என்று வேதம் அறிவின் பெருமையை விளக்கியுள்ளபடி யால், அறிவுடையவனுக்கே அத்திறனமையும். "அறிவி லார் என்னுடையரேனுமிலர்"—என்றமையினால் பொரு ளிருந்தாலும் அறிவில்லாதவனுக்கு வியாபாரம் முட் டின்றி அமையாது. ஆகையினாலேதான், "மதியில்லான் வாணிபம் விழல்" என்று கூறியதென்றுணர்க.

(3) நன்னாடில்லான் செங்கோல் நடாத்துவதும் விழல் - நல்ல நாடில்லாத அரசன் செங்கோல் நடாத்துவது வீண் என்கின்றார். இதனால் நல்ல நாடுடையவனுக்கே செங்கோல் அமையும் என்பது உணர்த்தியதாம். நல்ல நாடென்பது,—

*"செல்வம் விளையுள் பல்வளஞ் செங்கோல்
கொல்குறும் பின்மை கொடும்பிணி யின்மையென்
றிவ்வகை யாறு நன்னாட் டமைதி"—(பிங்கலந்தை.)

என்று வெளிவந்துள்ள திருவாக்கின்படி அமையப் பெற் றதேயாம். இதிற் கூறியுள்ள ஆறு இலக்ஷணங்களுள் செங்கோல் என்பதும் ஒன்றாகின்றமையினால், செங்கோல் என்னும் ஓர் இலக்ஷணம் குறையின் நல்ல நாடுமில்லா தொழிவதாம்.

†படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு.—(குறள்.)

---

*விளையுள் = வயல்; கொல்குறும் பின்மை = கொல் லுங்கொடுமையுடைய தீயசெய்கை யில்லாமை; கொடும் பிணி = கொடியநோய்.

†சேனையும், நாடும், பொருளும், மந்திரியும், நட்பும், அரணும் என்று சொல்லப்படும் இவையாறும் உடையவன் மன்னருள் ஆண்சிங்கம்போலாவான்.

என்று விதித்துள்ளபடி அரசனுக் கமையவேண்டிய ஆறங்கத்தினுள், நாடும் ஒன்ருகிறது. நாடு என்னும் ஓர் அங்கமில்லையாயின் அரசனுமில்லையாம். அரசனு மில்லையென்பது செங்கோல் செல்லா தென்பதேயாம். ஆகவே நாடு செங்கோலுக்கும், செங்கோல் நாட்டுக்கும் இன்றியமையாதனவாம்.

*"தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்வில்லாச்
செல்வருஞ் சேர்வது நாடு"

என்று வேதங் கூறுகிறபடி நாட்டிற் குடிகளமையா தொழியின், அரசனுடைய பெருமையையும் அவனிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைமையையும் உணர்ந்து அவனிடம் தாம் பெறவேண்டிய நன்மையைப் பெற முன் வருவாரில்லாமற் போகும். ஆகவே அரசனை யாதரிப்பா ரில்லாமற் போகும். அரசனை யாதரிப்பாரில்லாமற் போகு மெனின், அந்நாடு பல தீயர்களும் கயவர்களும் வசித்தற் கிடமாய்க் காட்டினுங் கேட்டை யடையுமென்பதி லையமில்லை. நாடாள்வதற்கரச னன்றிக் காடாள்வதற்கேது? இல்லையாதலின், அங்குச் செங்கோலமையாது. ஆகவே அது காட்டில்மலர்ந்த மலர்போல் வீணும். இதனுலே தான் "நன்னுடில்லான் செங்கோ னடாத்துவதும் விழல்" என்றதென்றுணர்க.

கூடுங் குருவில்லா வித்தை விழல் = பொருந்திய குருவையடைந்து அவரிடம் கற்காத வித்தை வீண். இதனுல் ஒவ்வொருவரும் குருவைத் தேடி அடைந்து அவரிடமே வித்தையைக் கற்கவேண்டும்; இன்றேல்

---

*குறைவில்லாத விளைச்சலைச்செய்யும் உழவரும் தரும சிந்தனையுடையோரும் கேடில்லாத செல்வமுடையோரும் ஒன்றுசேர்ந்து வாழ்வதே நாடாம்.

அந்த வித்தை அதாவது தானுகவே உணர்ந்ததாகக் கொள்ளும் வித்தை பயன்படாது என்று உணர்த்திய தாயிற்று. குரு என்பதுதன் பொருள் அறியாமையாகிய இருட்டை நீக்கத்தக்க நல்லறி வுடையவர் என்பதாம். ஆகவே அறியாமை யென்பது ஒன்றுண்டு; அதனை நீக் கத்தக்க குருவுமுண்டு; குருவைப்படுத்து அதனை நீக்கிக் கொள்ளவேண்டியது ஒவ்வொருவருடைய கடமை என் னுமிவை அறியலானேம்.

ஒருவன் தன் அறியாமையைத் தானே நீக்கிக் கொள்கிறேனென்பது குருடன் தனக்குத் தானே வழி கண்டு செல்வேனென்பது போலாகும். ஆதலின் அறி யாமை அறிந்தவராலேயே நீக்கத்தக்கதாகிறது. இதனல் ஒன்றையறியாதவன் அதனை அறிந்தவனிடத்துக் கேட்டு அவன் சொல்ல உணர்ந்தாலன்றித் தானே யுணர்தல் கூடாமையென்பது அறியலானேம்.

இங்கு வித்தையென்பது, கல்வி யொன்றைமட்டுங் குறிப்பதன்று. மற்றும் பிறரிடங் கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடிய தொழில்களையும் குறிப்பதாம். ஒரு வன் நெசவுத்தொழில் தெரிந்துகொள்ள வேண்டுமாயின், அது அதனைத் தெரிந்தவனிடங் கேட்டுத் தெரிந்து கொண்டாலன்றிக் கிட்டுவதில்லை. அதுபோலவே ஏனைய தொழில்களுமாம். ஆதலால், ஒவ்வொன்றும் குருமுக மாகவே தெரிந்துகொள்ளவேண்டிய தாகின்றது. ஒன் றை யறிந்தவன் அதனை அறியாதவனைவிடப் பெரியவ ஞகின்றபடியால், அறியாதவன் அவனை வணங்கி வழி பட்டுத் தனக்குத் தெரியாத அதனைக் கற்றுக்கொள்வதே கடன். அப்படிக் கற்றுக்கொண்ட போதிலும்—

"ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும்." (நன்னூல்.)

கூறியுள்ளபடி ஆசானுக்குத் தெரிந்ததில் காற்பங்கல்லது முழுதுங் கற்றுக் கொள்வது முடியாதென்பது திண்ணம். இப்படியிருக்கக் குருவில்லாமல் வித்தை கற்பதும் அது பயன்படுவதும் எப்படி? ஒருகாலுமில்லையாகையினல், "குருவில்லா வித்தை விழல்" என்று போதித்ததென்றுணர்க.

குணமில்லாப் பெண்டு விழல் = நற்குணமில்லாத மனைவி வீண். இந்த நீதி, "இருந்து முகந்திருத்தி."— என்று தொடங்கும் செய்யுள் வந்த இடத்தும், "எதிரிற் பேசு மனையாளிற் பேய்நன்று" என்பது விளக்கியவிடத்தும் விவரித்துள்ளது.

விருந்தில்லா வீடும் விழல்—விருந்து வரப்பெறாத வீடு வீண். விருந்து வரப்பெறாத வீடு எனில் விருந்து வருவதற்குத் தகுதியில்லாத வீடு அதாவது இழிஞர் வீடு என்றும் இடாத வீடு என்றும் விரியும்.

"இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு."

என்று வேதம் விதித்திருக்கிறது. ஆதலின் விருந்திடாத வீடு இந்த விதியைக் கடந்ததாகின்றது. இந்த விதியை மேற்கொள்ளும் வீட்டில், திருமகள் வசிப்பாள் என்று வேதங் கூறுகிறது. இதனல் இடாத வீடு திருமகள் விலாச மிழந்ததேயாம். ஆகையினலேதான் ஔவையார், "விருந்தில்லா வீடும் விழல்" என்று கூறியதென்றுணர்க.

## மேற்கோள்.

(1) "மேழிச் செல்வங் கோழைபடாது."

(கொன்றைவேந்தன்.)

ஏருடையான் வேளாண்மை தானினிது.

(இனிது நாற்பது.)

(2) "முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்
ததன்பய னுகரா வணிகரும் பதரே."

(வெற்றிவேற்கை.)

(3) போதிய விளக்கம் கூறியுள்ளது. ஆதலின் மேற்கோள் மிகை.

(4) "தலைப்பட்ட சற்குருவின் சன்னிதியி னல்லால்
வலைப்பட்ட மானதுவே யாம்." (ஔவை குறள்.)

(5) "நிறைமாண்பில் பெண்டிரை நீக்கலினிதே"

(இனிது நாற்பது.)

(6) "உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்."

(கொன்றைவேந்தன்.)

## வெண்பா.

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறம்பசந்த—பொய்யா
அடகென்று சொல்லி யமுதத்தை யிட்டார்
கடகஞ் செறிந்த கையார். (22)

ஒரு சமயம் ஔவையார் ஓர் இடையனுடைய வீட்டிற்குப் போயினர். அவ்வீட்டில் அங்கவை, சங்கவை யென்று இரண்டு பெண்களிருந்தனர். அவர்களிருவரும் விவாகமாகாத கன்னிகைகள். அவர்கள் ஔவையாரைக் கண்டதும் வெகுபணிவாய் வரவேற்றுத் தக்க உபசாரத்துடன் நெய்விட்டுச் சமைத்த

முருங்கைக் கீரையும் கேழ்வரகுக் களியுமிட்டு உண்பித்தனர். அதனால் உள்ளம் மகிழ்ந்த ஔவையார் அப்பொழுது பாடிய செய்யுளிது.

## கருத்து.

உபசாரத்தா லுண்டான உள்ள மகிழ்ச்சியை வெளியிட்டதாகுமிது.

அறிவுடையோர்க்கு அன்போடு ஒன்றைச் செய்யின் அது அற்பமாயினும் அதனை அவர் பெரிதாகக் கொண்டு மகிழ்வர் என்பதை உணர்த்துவதிது. இட்டவை அற்பமாகிய முருங்கைக் கீரையும் கேழ்வரகுக் களியுமா யிருப்பினும் அவை அன்போடு கூடியவையாகையினால் அவற்றை "அமுதத்தை யிட்டார்" என்று சொல்லி வியந்ததாம்.

அன்போடிடுவதையும் அன்பில்லாம லிடுவதையும் பற்றி முன்னர் விவரித்துள்ளது காண்க.

"அடகென்று சொல்லி யமுதளித் தாளே
கடகஞ் செறியுமவள் கைக்கு"

என்று இச்செய்யுளின் பின்னடி இரண்டும் வழங்குதலுண்டு.

## அரும்பதவுரை.

வெய்தாய் = சூடுள்ளதாய்; நறுவிதாய் = நல்ல மணமுள்ளதாய்; வேண்டு அளவும் = வேண்டிய மட்டும்; அளாவி = கலந்து; நிறம் பசந்த = நிறத்தால் பசுமையாகிய; பொய்யா = உண்மையாகிய; அடகு = இலைக்கறி; கடகம் = கையிலணியும் ஆபரணம்.

### வெண்பா.

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி கொடுத்த களகோட்டும்—சேரமான்
வாரா யெனவழைத்த வாழ்மையு மிம்மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர். (23)

ஔவையார் வழக்கம்போல் பின்னொரு சமயம் எங்கேயோ போய் வந்தார். வரும்போது வழியில் பெரு மழை பெய்தது. அதனால் அவர் ஆடையும் உடலும் நனைந்து குளிரால் வருந்தி ஒரு வீட்டுப்புறம் போய் ஒதுங்கினர். அவ்வீட்டிலிருந்து இரண்டு பெண்கள் வெளி வந்தனர். அவர்கள் ஔவையாரைக் கண்டதும் பணிந்து வரவேற்றனர். ஔவையார், அவர்களிருவரும் முன் தமக்கு இலைக்கறியிட்டு உபசரித்த அங்கவை, சங்கவை என்னும் பெண்களா யிருக்கக்கண்டு பெருமகிழ்ச்சியோடு ஆசீர்வதித்து அவர்களழைக்க அவ்வீட்டுக்குள் சென்றார். அங்கே அவர்கள், ஔவையாரின் நனைந்த ஆடையைக் களையவைத்து உடுத்துக்கொள்ள அவர்க்கு ஒரு நீலச்சிற்றாடை தந்து தம் குடிசையிலிருக்க உபசரித்தனர். அப்பொழுது சொன்ன கவியிது.

### கருத்து.

இதுவும் முன் கவியின் கருத்தையே வெளியிடுவதாம். இவ்விரண்டு செய்யுளும் உள்ளத்தெழுந்த மகிழ்ச்சியினால் வாழ்த்தாகக் கூறியதெனினும் பொருந்தும். பெரியோர் மகிழ்ந்துரைப்ப தெதுவும் வாழ்த்தென்று கொள்வதே முறையாம். கூழிட்டதும் ஆடை யுதவியதும் சிறிய செய்கையே யெனினும் பெரிய பயனை விளைவிப்பனவாம்.

*" உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனும்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.—(நாலடியார்.)

† இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.—(குறள்).

என்று நூல்கள் கூறுவது காண்க.

பாரி யென்பவன் ஓரிடையன். அவன் ஔவையாரிடத்தில் தெய்வ விசுவாசமுடையவன். அவன் ஔவையார்க்குத் தன்னிடம் வரும்போதெல்லாம் வேண்டியபடி வேண்டியதை யுதவுவதுண்டு. அவர் வந்து சென்றால் அவரை யனுப்ப மனமில்லாமல் அவர்க்குக் கொடுத்த வற்றைப் பிடுங்கி வைத்துக்கொண்டு வழிமறித்து நின்று அவர்தம் ஆடையைப் பிடித்தபடி மன்றாடுவான். இப்படிச்செய்யும் அவனுடைய வழக்கத்தை ஔவையார் இங்கு நினைத்துக்கொண்டா ராதலின் அவனையும் அவன் கொடையையும் "பாரி பறித்தபுறி" என்று வெளியிட்டனர்.

---

* உறக்கும் துணையது ஒரு =(அநாயாசமாய்க் கிள்ளியெறியக்கூடிய தன்மையதாகிய ஒரு; ஆலம் வித்து = ஆலம் வித்தானது; ஈண்டி = பெருகி; இறப்ப = மிகுதியும்; நிழல் பயந்தாங்கு = நிழலைக் கொடுப்பது போல; அறப் பயனும் = தருமத்தின் பயனும்; சிறிதாயினும் = சிறியதா யிருந்தாலும்; தக்கார் = நல்லவருடைய; கைப் பட்டக்கால் = கையில் சேர்ந்தால்; வான் = ஆகாயத்தையும்; சிறிதா = சிறிதாக; போர்த்துவிடும் = மறைக்கக் கூடுந் தன்மையாய் விடும்.

† விருந்தினருக்குச் செய்யு முதவி யிவ்வளவென்பதொன்றில்லை. விருந்தினரது மகிழ்ச்சியளவே யளவாம்.

காரி யென்பவன் ஒரு வேளாளன். இவன் தோட்டத்தில் களைவெட்டுந் தொழிலுடையவன். ஔவையார் இவனிடம் வருவதுண்டு. அப்பொழுது அவன் தன் வேலைமேலிருந்தால், வேலையை முடித்து வருவதற்குள், ஔவையார் போய்விடுவாரோவென் றெண்ணி ஒரு களைகொட்டுக் கொடுத்து அவரைக் களை வெட்டும்படி செய்வித்துப் பின் தன் வேலை முடிந்ததும் வந்து பேசி வேண்டுவன உதவி யனுப்புவான். ஔவையார் அவனுடைய அன்பையே பெரிதாகக் கொண்டு தம்மை அவன் களை வெட்டும்படி வைத்ததையும் மனதார ஏற்றுச் செய்து மகிழ்வர். ஆகையினால் இங்கே அவனையும் அவனுடைய அன்பையும், காரி கொடுத்த களைகொட்டும் என்று வெளியிட்டார்.

சேரமான் என்பவன் ஒரு வேந்தன் (சேரன்) இவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நண்பன். அவன் தன் சபைக்கு வரும் ஔவையாரை அன்போடு அழைத்துபசரிப்பான். ஆகையினால் அந்த அன்பையும்—சேரமான் வாராயென வழைத்த வாய்மையும் என்று வெளியிட்டார்.

ஆகவே இம்மூன்றும் அன்பின் வழியினதாம். இம்மூவருடைய அன்பான உபசரணை போலவே ஆயர் மாதருடைய உபசரணையும் அன்பின் வழியினதாதலால் இவர்களுடைய உபசரணையை, "இம்மூன்றும் நீலச் சிற்றாடைக்கு நேர்" என்று அவர்களுடைய உபசரணைக் கொப்பிட்டு வியந்தார். வியந்ததாகவே, இது அம்மூன்றினும் சிறந்ததென்பதும் பொருந்தும். அன்றி இது காலத்திற்செய்த உபசரணையல்லவா?—

*காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.—(குறள்.)

என்று வேதங் கூறுவது காண்க.

இதனால், அன்போர் செய்யுஞ் செய்கையே பெரியோர்க்கு மகிழ்ச்சி தருவதென்பதும் அதுவே பெரிய செய்கையென்பதும் தருமமும் அதுவே என்பதும் அறியலானோம்.

## அரும்பதவுரை.

பாரிபறித்தபறி = பாரியென்பவன் முதலில் கொடுத்துப் பின்பு பறித்துக்கொண்ட பரிசாகிய பொன்.

## வெண்பா.

ஒருகோம் பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் காளாய்—பரிவுடனே
கண்ணால வோலை கடிதெழுத வாராயேல்
தன்னுண்மை தீர்ப்பன் சபித்து. (24)

இது தம்பொருட்டு அன்பு பாராட்டிய அங்கவை சங்கவை யென்னும் ஆயர் சிறுமிகளுக்கு விவாகஞ் செய்வித்து அவர்களை உயர்த்த வெண்ணித் திருமணப் பத்திரிகை யெழுத விநாயகரை வருமாறு பாடியதாம். அன்றி விநாயகரை, வாராய்—வந்தருள்க எனக்கொண்டு, துதித்ததென்றுங் கூறலாம்.

## கருத்து.

பெரியோருடைய அன்பிற்குப் பாத்திரமானவர்களுக்குப் பெரும் பேறு கிடைக்குமென்பதும் பெரியோர்

* ஒருவன் காலத்திற் செய்த வுதவி சிறிதாயினு மக்காலத்தை நோக்க நிலவுலகினும் பெரிதாம்.

களுக்கு ஈசனும் கட்டுப்பட்டு நடப்பனென்பதும் அவர்கள் ஈசனையும் கட்டுப்படுத்த வல்லவர்களென்பதும் இதில் விளங்குவனவாம்.

ஆயர் மரபிலே வந்த ஆரிவையர்கட்குக் கலைமகளின் அவதாரம் என்று சொல்லும் ஔவையார் திருமண நடத்த முன்வந்ததும் அந்தத் திருமணஓலை யெழுத எல்லாம் வல்ல இறைவனாகிய விநாயகக்கடவுள் பிரேரேபிக்கப்படுவதும் பெரும் பேறுகுமல்லவா? இந்தப் பேறு எதனுலெய்தியது? தக்கார்க்குத் தருணமறிந்துதவிய ஒரு சிறிய உதவியினுலேயே யாதலின் அத்தன்மையான உதவி செய்தற்குச் சமயம் வாய்க்குமாயின் அதனையே நற்பேறு வந்த காலமாகக்கொண்டு தவருமற் செய்தல் அறிவுடைமையென் றுணர்க.

## அருஞ்பதவுரை.

நால்வாய் = தொங்குகிற வாய்; கரியுரிவை = யானையுரித்த தோல்; கங்காளன் = பிரம கபாலமேந்தியவன் (சிவன்); காளாய் = மகனே; தன் ஆண்மை தீர்ப்பன் = உனது ஆண்மையை ஒழிப்பேன்.

## மேற்கோள்.

நிமலனே நீயின்றெய்திச்
சித்தனைத் திருநாங்கூரிற் சேர்த்தனை வேந்தனிட்ட
கைத்தளை யதனைநீக்கிக் காட்டுவெண் காட்டுளானே.

(பட்டணத்தார்,)

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
யரியாசனத்தி னரசரோ டென்னைச்
சரியாசனம் வைத்த தாய். (காளமேகப்புலவர்.)

இவை இரண்டும் கவி பாடும் புலவர்கட்கு ஈசன் கட்டுப் படுவது உணர்த்துவன.

"அடியார்க் கெளியவன் அம்பலவாணன்"
(பட்டணத்தார்.)

"பத்துடையடியவர்க் கெளியவன் பிறர்களுக்கரிய
வித்தகன்." (சடகோபர்.)

இவை போன்றவை ஈசன் அடியார்க் கெளியவன் என்பது உணர்த்துவன.

வெண்பா.

சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவந் தர்ன்வருக வுட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள வரசன் மனமிசைந்தான்
சங்கவை யையுங்கூடத் தான். (25)

இது சேரமகாராஜனை இடைச் சிறுமிகளின் திரு மணத்துக்கு வரவழைக்கப் பாடியது.

கருத்து.

இது கவியரசரின் ஏற்றத்தையும் புவியரசர் அவர் கட்கு ஒடுங்குந் தன்மையையும் விளக்குவது.

இதில் "அரசன் மனமிசைந்தான்" என்பது, திருக் கோவலூர் அரசன் அப்பெண்களைத் திருமணஞ்செய்து கொள்ள இணங்கினன் என்பதாம். அரசன் ஆயர் பெண்களை மணக்க விசைந்தது, ஔவையாரின் கட் டளைக் கடங்கியேயாம். கவியரசர் சொல்லுக்குப் புவி யரசர் இணங்குவது, அவர்தம் அறிவுடைமை கண்டே யாம்.

திருக்கோவலூர் அரசன் ஆயர் சிறுமிகளை மணஞ் செய்துகொள்ள இணங்கவே, அவனிடம் கொண்ட

மகிழ்ச்சியினால் ஔவையார், அந்த மணத்தையும் அவனையும் கௌரவிக்கக் கருதி முதலில் இந்தக் கவி பாடிச் சேரனுக்குத் தூதனுப்பினர். இதனால் பெரியவர்கள் சொல்வழி இணங்கி நடப்பவர், என்றும் பெருமையையே அடைவர் என்பது விளங்குகிறது.

"வருக உட்காதே" என்றார். நாணுமல் வரக்கடவாய் என்பது இதன் பொருள். ஒருகால், அரசன், "ஆயர் சிறுமிகளின் திருமணத்திற்கு நாம் போவது நமது பெருமைக்குக் குறைவல்லவா" என்று சிந்தனை கொள்ளுதல் கூடுமென்று கருதி உட்காதே என்னு மொரு சொல்லால் இது உன்னைப்போன்ற அரசர்களும் வந்து கௌரவிக்கத்தக்க திருமணமென்பதை விளக்கியுள்ளார்.

ஔவையார் தமக்கு உபசரணை அன்போடு செய்த ஆயர் சிறுமிகளை உயர்த்தத் திருவுளங் கொண்டதனால் அவர்களெய்தும் சிறப்பினை உய்த்துணரின் "பெரியோர் திருவுளம் பெறற்கரும்பேறு"—என்பது இனிது விளங்குவதாம்.

### அரும்பதவுரை.

சேரலர்கோன் சேர்ன் = சேரநாட்டார்க் கரசனாகிய சேரன்; உட்காதே = நாணுதே.

### வெண்பா.

புகார்மன்னன் பொன்னிப் புனனாடன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து—நகாதே
கடிதின் வருக கடுக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டா நாள், (26)

சோழராஜனை அங்கவை சங்கவை யென்பவர்களின் விவாகத்திற்கு வரும்படி பாடியதிது.

கருத்து.

இதுவும் முன்னயதின் கருத்தையே வெளியிடுவதாம்.

அருஞ்பதவுரை.

புகார் = காவிரிப்பூம் பட்டணம்; பொன்னி = காவிரி; புனல் = நீர்; தகாதென்று = தகாத காரியமென்று; நகாதே = பரிகாசம் பண்ணாதே; பதினெட்டாம் நாள் விடிய = பதினெட்டாநாள் விடியுமளவில்; கடு = காவலையுடைய; கோவலூர்க்கு = திருக்கோவலூர்க்கு; கடிதின் = விரைவாக.

வெண்பா.

வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியவீ ரோன்பாநாள்
ஈண்டு வருக விசைந்து. (27)

பாண்டியனைக் கல்யாணத்திற்கு வரும்படி பாடியதிது.

கருத்து.

இதுவும் முன்பாட்டின் கருத்தையே கொண்டது.

அரும்பதவுரை.

வையைத்துறைவன் = வையையாற்றுத் துறையையுடையவன்; தென்னன் = பாண்டியன்; தேம்பாதே = மயங்காதே; தையலர்க்கு = பெண்கட்கு; ஈரொன்பாநாள் விடிய = பதினெட்டா நாள் விடியுமளவில்; ஈண்டு = திருக்கோவலூர்க்கு.

இவ்விரண்டு செய்யுட்களிலுமுள்ள "நகாதே" "தேம்பாதே" என்பன முதற் செய்யுளில் குறிப்பிட்.

டுள்ள "உட்காதே" என்பது விளக்கும் கருத்தையே விளக்குவனவாம்.

### மேற்கோள்.

" மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு."—(மூதுரை)

### வெண்பா.

கருவணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையான் கோவல்—திருமணத்தில்
முன்மாரி பெய்யு முதுவாரி யைமாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி. (28)

மேற்படி விவாகத்தின் பொருட்டு, வருணபகவானைப் பொன்னையே மழையாகப் பொழியும்படி பாடியதிது.

### கருத்து.

இதுவும் கவிவாணரின் திறமையை விளக்குவது. மணத்திற்கு அரசர்களை வரவழைத்துச் சிறப்பித்தாராதலின் அவ்வரசர்களின் பெருமைக் கேற்றபடி ஏழைகட்குப் பொருளுதவல், தான தக்ஷிணை வழங்கல் முதலியனவும் சிறப்பாய் நடைபெறுதல் இன்றியமையாதனவாகுமாதலால், இப்படிப்பட்ட அதிசயமான மழை பெய்வித்ததாம். ஆகவே இது அரசர்களைப் பெருமைப் படுத்தியதாகும்.

### அரும்பதவுரை.

மாமலையான் கோவில் = சேருமலைத் தெய்வீகனது திருக்கோவலூர், முன் மாரி பெய்யும் = முன்னே மழையாகப் பெய்கின்ற; முதுவாரி = பழமையாகியகடல்; பொன் மாரி = பொன் மழை.

### வெண்பா.

முத்தெறியும் பெண்ணைமுது நீரது தவிர்ந்து
தத்திய நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத் தெய்வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கோண்டோடி வா. (29)

மேற்படி மணத்தின்பொருட்டுச் செய்யும் பெரு விருந்திற்குப் பால், தயிர், நெய்யாகப் பெருகும்படி பெண்ணை யென்னும் நதியை நோக்கிப் பாடியதிது.

### கருத்து.

அரசர்கள் பெருஞ்சேனைகளோடு வந்திருப்பார்களாதலால், அவர்களுக்குக் குறைவறவிருந்து செய்வித்து மணத்தைச் சிறப்பிக்குமாறு செய்த ஒரு செய்கையிது. கவிவாணர் அசேதனப் பொருளையும் தம் விருப்பப்படி நடத்தவல்லவர் என்பதனை இது விளக்கும்.

### அரும்பதவுரை.

முத்து = முத்துக்கள்; எறியும் = இருகரையிலுந் தள்ளும்; முது = பழைமை; செரு = போர்; தத்திய = தாவுகின்ற; தலைப்பெய்து = முதன்மை பெற்று.

### வெண்பா.

பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையாம்
அந்நாள் வயலரிசி யாகுமூர்—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்கு திருக்கோவ லூர். (30)

அந்தத் திருமணத்திற்கு வந்திருப்பவர்களெல்லோருக்கும் பொன், ஆடை, உணவு முதலியன வேண்டியவர்க்கு வேண்டியவளவு உதவி மணத்தைச் சிறப்பித்தற் பொருட்டு அந்தத் திருக்கோவலூரை வாழ்த்தியதாம்.

கவீசுரர்கள் வாழ்த்துவதால் எல்லா நலனும் இனி தமையும் என்பதும் அவர்கள் நினைத்ததை நினைத்தபடி முடித்தல் கூடுமென்பதும், விளக்குவதிது.

அரும்பதவுரை.

பூம்பருத்தி யாடையாம் = (இவ்வூரிலுள்ள) அழகிய பருத்திகளெல்லாம் ஆடையாகட்டும்; அந்நாள் வயலரிசி யாகுமூர் = (திருமண நாட்களில்) ஒவ்வொரு நாளும் இவ் வூரிலுள்ள வயல்களிலெல்லாம் அரிசியே நிறைந்திடுக; தேங்கு புகழ் = நிறைந்த புகழ்; சேதிமா நாடு = பெரிய சேதியென்னுந் தேசம்; ஓங்கும் = பெருமை பெற்றுள்ள.

ஐந்தடிக் கலித்துறை.

திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் றூர்மணப் பந்தலிலே
சங்கோக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே. (31)

சேர, சோழ, பாண்டியர்கள் ஔவையாரை நோக்கி, "எங்கட்குப் பரிசாக இந்தப் பனமரத்துண்டைப் பழந் தரும்படி பாடியருள்க" என்று அங்கிருந்த பனந் துண்டைக் காட்டிக் கேட்டனர். ஔவையார், அத் துண்டை நோக்கி, ஒவ்வொரு பங்குக்கும் மூன்று பழங் கள் தரும்படி பாடியதிது.

நதியைப் பெருகவைத்தது போன்ற பெருமையை விளக்குவதிது.

அரும்பதவுரை.

திங்கட்குடை = சந்திரவட்டக் குடை; மங்கைக்கு = அங்கவை சங்கவையென்னும் பெண்கட்கு; அறுகு இட = அட்சதை இடும் பொருட்டு; சங்கு ஒக்க வெண்குருத்து

ஈன்று = சங்கையொத்த வெண்மையாகிய குருத்தை விட்டு, நுங்குக்கண் முற்றி = நுங்குக் கண்கள் முதிர்ந்து; அடிக்கண் கறுத்து = அடியில் கறுத்து.

வெண்பா.

சிரப்பான் மணிமவுலி சேரமான் றன்வனச்
சுரப்பா டியான்கேட்கப் பொன்னாடோன் றீந்தான்
இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தங்கொடையின் சீர். (32)

அங்கவை சங்கவை யென்னும் பெண்கட்கு இடையர் மரபின்படி சீதனங் கொடுக்கச் சேரராஜனை ஔவையார் ஓர் ஆடு தரும்படி கேட்டார். அவன் பொன்னாடு ஒன்று கொடுத்தான். அந்த அவனுடைய கொடையைச் சிறப்பித்துப் பாடியதிது.

"இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தங்கொடையின் சீர்."

என்னு மிஃதே நாம் இங்குக் கவனித்தற்குரியது. இரப்பவர், கொடுப்பவர் என்னுமிவ்விருவருடைய தன்மையை விளக்குவதிது.

"இரப்பவர் என்பெறினும் கொள்வர்"

என்றது யாசிப்பவர் பிறர் எதைக் கொடுப்பினும் ஏற்றுக் கொள்வர் எனப் பொருள்படும். "இட்டதனை மெச்சா இரப்போனும்" என்று கூறியிருப்பதனால் இது, யாசிப்பவர் பிறர் எதைக் கொடுப்பினும் அதனை ஏற்றுக் கொண்டு திருப்தியடையக் கடமைப்பட்டவர் என்று இரவலர் கடமையை விளக்குவதாயிற்று. "கொடுப்பவர் தாமறிவர் தங்கொடையின் சீர்" என்றது, தாம் பிறருக்குக் கொடுத்த கொடையின் பெருமையைக் கொடுத்

தவரே அறியக் கடவர் என்று பொருள்படும். ஆகவே கொடையின் பெருமை சிறுமை யுணரவல்லவர் கொடையாளிகளே என்பதுணர்த்தியதாம்.

இங்கு ஔவையார், ஏற்றவராதலால் "இரப்பவர்க்குரிய கடமையின்படி, நான் நீ கொடுத்த கொடையினால் பெரிதுந் திருப்தியடைந்தேன். ஆனால் அந்தக்கொடையின் பெருமையைப் புகழ எனக்கு வல்லமையில்லை. கொடையாளியாகிய நீயே அதன் பெருமை சிறுமை யுணரத் தக்கவன்"—என்று உபசார வழக்கில் அரசனைப் பெருமைப்படுத்திய அழகினை விளக்குவதிது.

அரும்பதவுரை.

சிரப்பால் = சிரசினிடம் (தலையினிடம்) மவுலி = முடி; சுரப்பு ஆடு = பால் கறக்கும் ஆடு.

வெண்பா.

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்—திரமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டானீ
தெல்லா வுலகும் பெறும். (33)

இது, ஔவையார் தமக்கு வேளூர்ப்பூதன் என்பவனொருவன் அன்போடு செய்வித்த விருந்தைப் புகழ்ந்ததாம்.

கருத்து.

இதுவும் அன்போடு விருந்து செய்விக்க வேண்டுமென்பதையே உணர்த்துவது. அன்பே இரப்பவர்க்கும் உண்பவர்க்கும் இன்பந்தருவது. ஆதலின் விருந்து அன்பின்றிச் சிறவாதென்று கூறினர்.

**அரும்பதவுரை.**

வழுதுணங்காய்வாட்டு = கத்தரிக்காய்த் துவட்டல்; மொரமொரெனவே புளித்தமோர் = மொரமொரென்றிரைந்து நுரைத்துப் புளித்தமோர்; புல்வேளூர் = சிறிய வேளூர்; திரமுடனே புரிந்து விருந்திட்டான் = மன ஒற்றுமையோடிருந்து, அன்பாய் விருந்திட்டான; ஈது = இந்த விருந்து.

"புகழ்ந்து பரிந்திட்ட சோறு"

என்றுமொரு பாடமுண்டு.

வெண்பா.

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே—பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியும்
சொம்பொற் சிலம்பே சிலம்பு. (34)

சிலம்பியென்னும் ஒரு தாசி மிக ஏழையாயிருந்தாள். அவள் வித்துவானிடம் ஒரு வாழ்த்துப்பாடல் பெறவேண்டுமென்னும் எண்ணங்கொண்டிருந்தாள். ஒரு சமயம் கம்பர் அவ்வழியே வரக்கண்ட அவள், அவரை அன்போடு வரவேற்று உபசரித்து, ஒரு பாடல் பாடும்படி கேட்டாள் கம்பர், "நான் ஆயிரம் பொன்னுக்கொருபாடல் பாடுவது வழக்கம்!" என்றார் சிலம்பி "ஐயா என்னிடம் ஐந்நூறு பொன்தானிருக்கிறது. தாம் பெரியமனங்கொண்டு பாடவேண்டும்" என்று பணிவாய்க் கேட்டுக்கொண்டாள். கம்பர், அந்த ஐந்நூறு பொன்னைப் பெற்றுக்கொண்டு,—

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே"

என்று அரைப்பாட்டுப் பாடிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். இதனால் திருப்தியடையாமல் வருத்தப்பட்

டுக்கொண்டிருந்த சிலம்பி, ஒரு நாள் அவ்வழியே வந்த ஔவையாரைக் கண்டாள். கண்டதும் அவருடைய அடிபணிந்து வரவேற்றுத் தன் வீட்டிற்குள் அழைத்துப்போய், அவரிடம் தன் குறையைச் சொல்லிக்கொண்டாள். ஔவையார், கம்பர் செய்த கருணையற்ற செய்கையை வெறுத்து, மனத்திலிரக்கங்கொண்டு "அம்மணி! சிறிது கூழிடுவாயாயின் மற்றப் பாதிப்பாட்டையும் பாடி முடிக்கிறேன்" என்ருள். தாஸி, ஔவையாரின் கருணைகண்டு மனமகிழ்ந்து அன்போடு ஔவையாருக்குக் கூழ்வார்த்து அவர் பசியைத் தணித்தாள். ஔவையார் அன்பையே பெரிதாகக் கொண்டு மகிழும் இயல்புடையவராதலால், உள்ளமுவந்து—

—பெண்ணுவாள்

அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு —

என்று பாதிப்பாட்டையும் பாடி முடித்தார்.

இப்படிப் பாடல் முடியவே, தாஸி, ஔவையார் பாடியது கூழுக்காகவாதலால்; அது பொன்னுக்காகப் பாடிய பாட்டுக்கேற்றதாய்க் கம்பர் ஒப்புக்கொள்ளத் தக்கபடியிருக்குமோ என்று சந்தேகங்கொண்டு "தாயே! இது கம்பர் ஏற்றுக்கொள்ளத் தக்கபடி இருக்குமோ?" என்று வினவினுள். ஔவையார் "கம்பர் சிறிதுஞ் சந்தேகமில்லாமல் ஏற்றுக்கொள்வார்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். பிறகு அந்தத் தாஸிக்கு நல்ல வாழ்வுண்டாயிற்று.

அப்பால் ஒரு சமயம் கம்பர் அவ்வழியே போகையில் சிலம்பியின் வீட்டைக் கவனித்தார். சிலம்பி ஒரு

குறைவுமில்லாமல் சௌக்கியமா யிருக்கின்றாளென்பது தெரிய வந்தது. கம்பர், "இவள் எப்படி நல்ல வாழ்வை யடைந்தாள்; நாம் பாடிக்கொடுத்தது அரைப்பாட்டுத் தானே" என்று எண்ணி, அவள் வீட்டிற்குப் போய், தாம் பாடிய பாடலை முடித்தது ஔவையாரென்று அறிந்து உடனே அங்கிருந்து சோழராஜனிடம் சென்று, தாம் பாடி விட்டிருந்த பாடலை ஔவையார் பாடி முடித்தது குற்றமென்று கூறி அவரை விசாரிக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொண்டார். அரசன் இது ஆச்சரியமான வழக்காயிருந்தமையினால் வியந்து, இருவரையும் பாண்டியராஜனிடம் போகும்படி சொல்லி, வழக்கை விசாரிக்க அவ்வரசனுக்குத் திருமுகமொன்று அனுப்பிக் கேட்டுக்கொண்டான்.

இப்படியாகவே, ஔவையாரும் கம்பரும் பாண்டி நாட்டுக்குச் சென்றனர். ஔவையாருக்குக் கம்பர்மீது பெருங்கோபம். "ஓர் ஏழை வேசியிடம் அரைப்பாட்டைப் பாடிப் பொருள் பறித்ததுமன்றி அரசனிடம் வழக்குந் தொடர்ந்திருக்கின்றான். இவனுக்கு எவ்வகையிலேனும் தக்கபடியாக அறிவுறுத்தல் வேண்டும்" என்று கருதி அதற்குத்தக்க ஆலோசனையுடன் சென்றார். போகும் வழியில், ஔவையார் கம்பரோடு பல பேச்சுப் பேசிக்கொண்டும் சென்றனர். அப்பொழுது வழியில் இலையுதிர்ந்திருந்த ஒரு நெல்லிமரத்தைக் கண்டு—

"கல்வி யுடையீர் கருங்கான கத்திடையே
நெல்லி யிலையுதிர்ந்து நிற்பதேவன்"

என்று பாடினர். பாடியதும் கம்பர், ஔவையார் கல்வி யுடையீர் என்று தம்மை விளித்ததாகக் கருதி—

—வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போல் மாண்டு"

என்று மற்றப் பகுதியைப் பாடி முடித்தார். பிறகு ஔவையார், உடனே, 'நீரேன் நான் பாடிவிட்ட பாட்டின் பிற்பகுதியைப் பாடினீர்?" என்று கேட்டார். கம்பர், "நீர் கல்வியுடையீர்! என்று என்னை அழைத்தமையின் பாடி முடித்தேன்" என்றார். ஔவையார், "கல்வியுடையீர்! என்றழைத்தது உம்மை யெப்படிக் குறிக்கும்? நீர் கல்வியுடையவராவ தெப்படி? ஆயிரம் பொன்னுக்குப் பாடுவதாகப் பிரதிஞ்ஞை செய்துகொண்ட நீர் ஐந்நூறு பொன்னுக்கு அரைப்பாட்டுப் பாடி ஓர் ஏழை வேசியை வருந்தும்படி செய்த வஞ்சகரல்லவா? இப்படிப்பட்ட கருணையற்ற செய்கை செய்வதுதான் கல்வியுடையவர்க் கழகோ? கருணையற்ற நீர் கல்வியுடையவராகமாட்டீர்! ஆதலின் நான் உம்மை அழைக்கவில்லை. இந்த என் பாட்டை நீர் பாடியது குற்றமேயாம்" என்று சொல்லி, "இது அரசன் விசாரித்தற்குரிய வழக்காகும்" எனவே, கம்பர், என்னடா இது, கிணறு வெட்டப் பூதம் புறப்பட் டதுபோ லாயிற்றென் றெண்ணி, வேறு பேசாமல் "அர சனிடம் போய் எல்லாவற்றையும் பேசிக்கொள்வோம்" என்றார்.

பின்னர் இருவரும் பாண்டியராஜனிடம் போய்ச் சேர்ந்தனர். அரசன் இருவருடைய வழக்கையுங் கேட் டுத் தெரிந்துகொண்டான். ஔவையார் அரசனை நோக்கி, "முதலில் நான் கொண்டுவந்த வழக்கையே விசாரித்தல் வேண்டும். இது உமது நாட்டில் நடந்ததல்லவா?" என்ற னர். அரசன், ஆச்சரியப்பட்டு, சேரனையும் சோழனையும்

வரும்படி தூதனுப்பினான். அவர்கள் வந்தபின் மூன்று பேரும் சபை கூடி இவர்கள் வழக்கை விசாரித்தனர். விசாரணையில், "கல்வியுடையீர்!" என்று ஔவையார் விளித்தது தம்மையெனக் கொண்டது பொருத்தமல்லவாகையினால் ஔவையார் பாடிய பாட்டை கம்பர் பாடி முடித்தது தவறென்று தீர்மானித்தனர். பின்னர், கம்பர் "கொண்டுவந்த வழக்கில், கம்பர், ஆயிரம் பொன்னுக்குப் பாடவேண்டியவர், ஐந்நூறு பொன்னுக்குப் பாடியது, செய்துகொண்ட பிரதிஞ்ஞை தவறியதாகின்றமையினால், அது குற்றம்; இரண்டாவது ஏழையினிடம் காசு பறித்தது கருணையற்ற ஒரு செய்கையாகையினால் அதுவும் குற்றம்" என்று தீர்மானித்தனர். கம்பரும் நியாயமுணர்ந்து தம் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். பின்னர் ஔவையாரும் கம்பர், தமது பிழையுணர்ந்தது கருதி மகிழ்ந்தனர். இது இப்படி முடிந்தபின் மூன்று அரசரும் "வழக்குத் தீர்த்த எங்கட்கு வெகுமதியாக இந்தப் பனந்துண்டம் பழந்தரும்படி செய்தல் வேண்டும்" என்று கேட்டதாகவும் ஔவையார், உடனே—

"திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
திங்கப் பனம்பழந் தாவென்று கேட்டனர் தித்திக்கநீ
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து
நுங்குக் கண்முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே."

என்று பாடிப் பனந்துண்டத்தை இச்சமயத்தில் பழுக்க வைத்ததாகவும் சொல்வதுண்டு. இங்குப் பாட்டின் இரண்டாவதடியை முற்று மாற்றியிருக்கிறது. எப்படிக் கொள்ளினும் கொள்க.

## கருத்து.

கம்பர் காசுக்காசைப்பட்டுக் கருணையற்ற ஒரு செய்கை செய்தமையினால், காசாசை எப்படிப்பட்டவனையும் மயக்கி, செய்யத்தகாததையும் செய்ய வைக்குமென்பது புலப்படுகிறது. ஔவையார் கூழுக்குகந்து அரைப் பாட்டைப் பாடி ஏழை வேசியை வாழ்வித்தமையினால் ஆசையற்றவர் உள்ளத்தில் கருணை நிறைந்திருக்குமென்பதும் அவர் செய்வதெதுவும் உலக உபகாரமாகவே யிருக்கும் என்பதும் புலனாகிறன்றன.

காசாசை கொண்ட கம்பருக்குக் கடைசியில், அரச சபையில் "இவர் குற்றமுடையவர்" என்ற அவமதிப்பும், ஆசையின்றி இரக்கம் அதாவது கருணை மேலிட்டிருந்த ஔவையாருக்கு, "இவர் குற்றமற்றவர்" என்ற பெருமையும் கிடைத்தமையினால், காசாசையினால் அவமதிப்புண்டாகும் என்பதையும் அஃதொழித்தவர்க்குப் பெருமை யுண்டாகுமென்பதையும் உணர்த்துகின்றதிது.

* அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா—

என்று வேதங் கூறுவ் துணர்க.

ஔவையார் பெரிய ஞானத்தாயாராதலின், அவர் கம்பர் செய்த இரக்கமற்ற செய்கையை அரசறியச் செய்வித்து அவரை வழிப்படுத்த வேண்டுமென்கிற எண்ணங்கொண்டே வழக்கை இவ்வளவு தூரத்திற்குக் கொண்டுவந்தன ரென்பதும் ஒரு கருத்தாம். இதனால்

* ஒருவனை வஞ்சித்துக் கெடுக்க வல்லது ஆசையாம். ஆதலின் அவன் அதனை அஞ்சி யொழிப்பதே அறமாம்.

பெரியவர் செய்வதெதுவும் முடிவில் எல்லோருக்கும் இனிதாக முடியுமென்பதும் உணரத்தக்கதாம்.

தண்ணீருங் காவிரியே, என்றமையினால் காவிரி நதியின் தீர்த்தம் சிறந்ததென்பதையும் தார்வேந்தன் சோழனே—என்றமையினால், சோழராஜனே அக்காலத்திற் சிறந்து நின்ற அரசர்களில் மேலானவன் என்பதையும், மண்ணாவதுஞ் சோழ மண்டலமே—என்றமையினால், சோழநாட்டிற்கு மேலான நாடில்லை என்பதையும் உணர்த்தியுள்ளார். நதி, வேந்தன், நாடு இம்மூன்றிலும் உயர்ந்தது கூறிப் பின்னர்ப் பெண்ணாவாள் அம்பொற் சிலம்பி — என்றமையினால், சிலம்பி, இம்மூன்றையும் போல் உயர்த்திப் பேசத்தக்க பெருமையையும் பெருவாழ்வையும் அடையக் கடவளென்று வாழ்த்தியதாம். ஞானத்தாயாரின் கருணை பெற்றவர்க்கு எது பெறுவது அரிதாகும்? இதனாலேதான், "பெரியாரைத் துணைக் கோள்" என்ற போதனை பிறந்திருக்கிறது.

## அரும்பதவுரை.

அம்பொற் சிலம்பியே = அம்பொற் சிலம்பி யென்பவளே; அரவிந்தம் = தாமரை; தாள் = பாதம்; செம்பொற் சிலம்பே = செம்பொன்னினாலே செய்யப்பட்ட சிலம்பென்னும் ஆபரணம்.

## மேற்கோள்.

"அமர முனிவ னகத்தியன் றனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
கோணிலை திரிந்து கோடை நீடினும்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை"

(மணிமேகலை.)

" வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவரு வியன்கழனி—"(பட்டினப்பாலை.)

இவ்விரண்டு செய்யுளானும், "தண்ணீருங் காவிரியே" என்றதும், "மண்ணாவதுஞ் சோழமண்டலமே" என்றதும் விளங்கும். நிலனும் நீருங் நன்கமைதலான் அதனை ஆளும் மன்னன் செங்கோலுடையான் என்பதிலேயமின்றும். ஆதலின், "தார்வேந்தன் சோழனே" என்றதும் இவை விளக்கும்.

வெண்பா.

கல்வி யுடையீர் கருங்கான கத்திடையே
நெல்லி யிலையுதிர்ந்து நிற்பதேவன்—வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போன் மாண்டு. (35)

கருத்து.

இந்தக் கானகத்திடையே இந்த நெல்லிமரம் இலையுதிர்ந்து இப்படி நிற்பதற்குக் காரணம் யாது என்ற வினவும், 'துர்வழக்குச் செய்யும் சுற்றம்போல் இது இலை உதிர்ந்திருக்கிறது—என்ற விடையும் இந்தக் கவியிலடங்கி யிருக்கின்றன. இதில், இலையுதிர்ந்து நிற்கும் ஒரு மரத்தை, துர்வழக்கிடுவோனுக்கு ஒப்பிட்ட உவமான உவமேய அழகு சாலச் சிறப்புடையதாம். ஆகவே துர்வழக்கிடுவது கூடாதென்பதும் இடுவோன் கெடுவ

தன்றி அவன் உறவினரும் கெடுவர் என்பதும் இதனால் உணரத்தக்க போதனைகளாம்.

### அரும்பதவுரை.

கருங்கானகம் = பெரிய காடு; வல்லாளன் = நிர்தாட்சண்ய முடையவன்; வெல்லா வழக்கை = ஜெயிக்கக்கூடாத வழக்கை; சுற்றம் = உறவினர்; மாண்டு = அழிந்து.

### வெண்பா.

செம்மான் கரத்தனருள் சேயா நெடியோனை
அம்மா னெனப்பெற் றருள்வேலா—இம்மான்
கரும்பிறைக்கும் வெண்பிறைக்கும் கண்ணம் பிறைக்கும்
அரும்பிறைக்குங் கூந்த லணை. (36)

ஒருசமயம் ஔவையார் காலை நீட்டி யுட்கார்ந்து நூல் நூற்றுக்கொண் டிருந்தனர். அப்பொழுது அங்கே, புகழேந்தியும் ஒட்டக்கூத்தரும் போயினர். ஔவையார் புகழேந்திக்குக் காலை மடக்கி மரியாதை செய்தனர்; ஒட்டக்கூத்தருக்கு அப்படிச் செய்யாம லிருந்தனர். அதனால் சினங்கொண்ட கூத்தர் அரசனிடம் தெரிவித்துக் கொண்டார். அரசன் ஔவையாரைச் சபைக்கு அழைத்து "அப்படிச் செய்ததேன்? இருவரும் வித்துவான்களாயிருக்க ஒருபக்ஷமா யிருக்கலாமா?" என்று வினவினன். ஔவையார், இவ்விருவரும் வித்துவான்களென்பதி லையமில்லை. ஆனால் இவர்களுக்குள் உள்ள தாரதம்மியத்தை நோக்கி அப்படிச் செய்தேன். வேண்டுமானால் அதனைச் சபையில் வெளிப்படுத்துகின்றேன்" என்று கூறி உடனே கூத்தரைப் பார்த்து,—செம்மான் கரத்தனருள்—என்ற இச்செய்யுளைப்பாடி, "ஓரடியில் மூன்று மதி வரும்படி ஒரு பாட்டுப்பாடுக" என்றனர். கூத்தர் ஒப்புக்கொண்டு—

வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக்
 கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோ
 டிறங்குஞ் சோணாடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா
 வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டெம்பேதை பெரியமதியு
 மிழந் தாளே.

என்ற இவ்விருத்தப்பாவைப் பாடினர்.

முடித்தவளவில், ஔவையார், இதில் இரண்டு மதியே வந்துள்ளன. ஆதலின், "ஒட்டா ஒருமதி கேட்டாய்" என்று இகழ்ந்து அருகிலிருந்த புகழேந்திப் புலவரை நோக்கினர். நோக்கியதும் அவர்—

பங்கப் பழனத் துழுமுழவர் பலவின்
 கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண்
 டெறியுந் தமிழ்நாடா
கொங்கைக் கமரா பதியளித்த கோவே
 ராச குலதிலகா
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு மெலிந்தப்
 பிறைக்கும் விழிவேலே.

என்ற இவ்விருத்தத்தைப் பாடி முடித்தனர். ஔவையார் மகிழ்ந்து, அரசனை நோக்கி, இதில் மூன்று பிறை (மதி) வந்துள்ளது காண்க! இவ்விருவருக்குமுள்ள தாரதம்மியம் விளங்கியதன்றோ?"—என்று கூறினர். அரசன், "ஔவையார் தவறு செய்யார்" என உணர்ந்து மகிழ்ந்தான்.

## கருத்து.

ஔவையார் புகழேந்திக்கும் ஒட்டக்கூத்தருக்கு முள்ள தாரதம்மியத்தை அரசனுக்குணர்த்தவே, மரியாதையால் வேறுபாடு செய்ததன்றி, அகங்காரத்தாலன்று. ஔவையார், ஏனைய வித்துவான்களின் செருக்கை ஒழித்து நல்வழிப்படுத்த வேண்டுமென்ற பெருங் குணங்கொண்டவர் என்பது திண்ணம்.

ஒரு நாயகி தன் நாயகனின் வரவை நினைந்து வருந்துவதை அவனுக்கு அப்பெண்ணின் தாய் இரக்கங்கொண்டு சொன்னதாகச் சொன்ன கவியிது என்றும் சொல்வதுண்டு.

## அரும்பதவுரை.

செம்மான் கரத்தன் = சிவந்த மானைக் கையிலேந்திய சிவன்; அருள்சேயா = ஈன்றருளிய புதல்வனே; நெடியோனை = உலகளக்க நீண்டவனாகிய திருமாலை; அம்மான் = மாமன் (தாயோடு பிறந்தவன்) இம்மான் = மான் போலு மருண்ட விழியையுடைய இப்பெண்; கரும்பு இறைக்கும் = கரும்பை வில்லாகவுடைய மன்மதன்; வெண்பிறை = சந்திரன்; கண் அம்பு இறைக்கும் = கண்களிலிருந்து நீரை வீழ்த்தும்; அரும்பு = புஷ்ப அரும்புகள்; இறைக்கும் = சிந்தும் (உதிரும்); கூந்தல் = தலைமயிரையுடைய பெண்.

வெள்ளத் தடங்கா = நீர்ப்பெருக்கில் அடங்காத; சினவாளை = கோபத்தையுடைய வாளை மீன்கள்; கமுகு = பாக்குமரம்; முகில் = மேகம்; கள்ளம் = குற்றமுள்ள; குறும்பர் = குறுநில மன்னர்; குலமறுத்த = வமிசத்தையறுத்த; கண்டா = வாளாயுதத்தை உடையவனே; *அண்

* அரசர் திருமாலினவதாரமாதலின் "அண்டர் கோபாலா" என்றார்.

டர் கோபாலா = ஆயர்களுடைய பசுக்களைப் பரிபாலித்த வனே; பிள்ளை மதி கண்டு = இளம்பிறையைக் கண்டு; எம்பேதை = எமது பேதைப் பெண்; பெரிய மதியும் இழந்தாள் = பேரறிவையும் இழந்தாள்.

பங்கம் பழனத்து = சேற்றையுடைய வயலில்; கொங்கு ஐக்கு = கொங்கர் பிரானுக்கு; அமராபதி = ஸ்வர்க்கலோகம்; வெம் கண் பிறைக்கும் = கொடுமையுள்ள பிறைச் சந்திரனாலும்; கரும்பு இறைக்கும் = கரும்பு வில்லையுடைய மன்மதனாலும்; மெலிந்து அப்பு இறைக்கும் விழி வேல் = இளைத்து வேல் போலுங் கண்களிலிருந்து நீரை இறைப்பாள்.

கொங்கைக்கு அமராபதி அளித்தலாவது—கொங்கு நாட்டரசனை வென்று வீரசுவர்க்க மடைவித்ததாம்.

### வெண்பா.

கரியாய்ப் பரியாகிக் காரெருமை தானாய்
எருதாய் முழப்புடவை யாகித்—திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்துகா லோய்ந்ததே
கோரைக்கா லாழ்வான் கொடை. (37)

கோரைக்காலாழ்வான் என்னும் ஒரு பிரபு முதலில் பெரிதான ஒரு வெகுமதியைத் தருவதாகச் சொல்லிப் பிறகு நாளடைவில் படிப்படியாய்க் குறைத்துக்கொண்டு வந்து கடைசியில் அற்பமான ஒன்றைக் கொடுத்தனுப்பியதனால் அவனுடைய அந்தக் கொடையை இகழ்ந்து பாடியதிது.

### கருத்து.

பெரிய வெகுமதி தருவதாகச் சொல்லிப் பலநாளலையவைத்துப் பிறகு அற்பமானவொன்றைக் கொடுத்தனுப்புவது கொடையாகாதென்பது இதன் கருத்து.

பிரபு, பெரியதொன்றைச் சொல்லிப் பிறகு படிப் படியே குறைத்து வந்து அற்பமாக்கியதை, யானை, குதிரை, எருமை, எருது, முழப்புடவை, திரிதிரி என்று ஔவையார் உவமைப்படுத்திக் காட்டியிருக்கும் அழகு, அவர் தம் கவி சாதுர்யத்தை விளக்குவதாம். "ஆனையைக் கொடுக்கிறேனென்றான், குதிரையைக் கொடுக்கிறேனென்றான், கடைசியி லொன்றையுங் காணோம்"— என்று சொல்லுவதுண்டல்லவா? அதனை விளக்குவதிது. "தேரைக்கால் பெற்று மிகத் தேய்ந்து காலோய்ந்ததே" என்ற தொடரால், பிரபு அலைய வைத்ததை விளக்கியிருக்கும் அநுபவமொழி, சாலப் பொருத்தமுடைய தாதலால், இவ்விதக் கஷ்டமநுபவித்த ஏழையின் மனத்தை இது உருக்கும். ஔவையாருக்கு அநந்தகோடி வந்தனம். அவன் தன் மனமுவந்து செய்வான். ஏழையை இப்படி இழுக்கடித்த பிரபுவினுடைய உள்ளம் உணர்வுடைய தாயின், அவனும் இதுகண்டு திருந்துவான் என்பது திண்ணம்.

உலகத்தில் கொடையும் தயையுமுடைய பிரபுக்கள் சிலரும், டம்பம், அகங்காரம் முதலிய வழியிலே பிரபுத்வத்தைக் காட்டிக்கொண் டிருக்கும் பிரபுக்கள் பலருமாயிருக்கின்றனர். இவர்களுள், டம்பத்தில் விருப்பமுடையவர், தம்மிடம் வந்து கேட்கும் ஏழைகட்குப் பெரிய வெகுமதி செய்வதாக எளிதிலே வாக்களிப்பர்; வாக்களித்தபடி நடக்கமாட்டார்கள்; நாளடைவில் சொன்ன வளவினின்று குறைத்து வந்து கடைசியில் அற்பமான ஒன்றைத் தந்து அனுப்புவர்; சிலசமயம் சொன்னபடி கொடுத்தாலும் கொடுப்பர். அது மனமில்லாமல் அமையும்.

அகங்காரங்கொண்ட பிரபுக்கள், பெரிதான ஒன்றைக் கொடுப்பதாக வாக்குக் கொடுப்பதில் முன்பின் ஆலோசித்துப் பார்க்கமாட்டார்கள். பிறகு நாளடைவில் அந்த வாக்கை எவ்வகையிலேனும் மாற்ற முயலுவர். மாற்றமுடியாத விடத்து ஏசியிடுவர்.

தாட்சண்யத்தி லீடுபட்ட பிரபுக்களுமுண்டு. இவர்கள், வாக்குக் கொடுப்பதில் வெகு நயமுடையவரா யிருப்பர். ஆனால் அதன்படி நடக்கச் சௌகரியமிராது. அதனால் தாமிடர்ப்படுவது மல்லாமல், ஏற்பவனையும் இழுக்கடித்திடர்ப்பட வைப்பர். கடைசியில் முடியவில்லையே யென்று வருந்துவர்.

சில பிரபுக்கள் உள்ளத்தில் தயையுடையவரா யிருப்பர்; ஏழைகட்குக் கொடுக்க மனங்கொள்வர்; ஆனால் மனங்கொண்டவுடன் அதை நிறைவேற்ற எண்ணம் வராமற் பின்னே வாவென்பர். அப்பால் அவர்கட்கு முன்னிருந்த மனம் மாறிவிடும். அதனால், தாம் சொன்னபடி நடக்கத் தவறுவர்; ஏற்பவரைப் பலநாள் தம்வீடு வரும்படி வைத்துக் கடைசியில் ஏதேனுங் கொடுத்தனுப்புவர்; கடைசியில் தமது கருத்து நிறைவேறாமற் போனதற்கு வருந்துவர்.

சில பிரபுக்கள் வாக்குக் கொடுப்பதிலும் அதன்படி செய்வதிலும், அவசரப்படுவர்; ஆனால் பிறகு 'நாம் கொடுத்தது நமது சக்திக்கு மேலானது' என்று கருதி வருந்துவர்.

இவர்களெல்லாம் கொடையாளியாகார். கொடையின் முறையும் இவையாகா.

"இரப்போர்க்கீவது முடையோர் கடனே" என்று கூறுவதனால், உடையோர் இல்லை யென்பது கூடாது. "இயல்வது கரவேல்" என்பது இயன்ற மட்

டில் கொடுத்தல் வேண்டுமென்பதை வற்புறுத்துகின்றது. ஆதலின் இயல்வதை ஒளிப்பதாகாது. ஒன்றையுங் கொடுத்தற் கியலாத் சமயம் நேருமாயின், "இல்லையப்பா இச்சமயம் போய்வா" என்று இங்கிதமாய்ச் சொல்லி யனுப்புதல் நெறியாம். "ஈதலினன்றே இன்சொல்" என்று வேதங் கூறுவதுணர்க. இவைபன்றி "ஏசியிடலின் இடாமையே நன்று" என்று போதித்திருக்கிறபடியால் ஏசியிடுதலுங் கூடாது. "தண்டாம லீவது தாளாண்மை" என்றமையினால், ஒன்றைக் கொடுக்க மனம் நினைத்தவுடன் தாமதியாமல் கொடுக்கவேண்டும் என்றாயிற்று.

இந்தத் தருமமிப்படிப்பட்ட முறையில் நடத்தவேண்டுவதாதலின், இதனை மறந்து மாறாக நடப்பது எப்படிக் கொடையென்று கூறுவதற்காகும்? ஆகாதாதலான், இந்தச் செய்கை பலர் பழிப்புக்கும் பாபத்துக்கு மேதுவான இழிந்த செய்கையாம். இழிந்த செய்கையாகவே இதனான் வரும் பயன் இழிவேயாம். பல சொல்வானேன்—"பாவி ஆசை காட்டி யலையவைத்தான்; உண்டு இல்லையென்று சொல்லித் தொலைத்தானா? இவனுக்கு ஈசன் தக்க கூலி கொடாமலிருப்பானா? ஏழையின் வயிற்றெரிச்சல் வீண்போகுமா? இவன் வம்சம் விருத்தியாக வேண்டாமா?" என்று பலர் சாபமிடுவர் என்பதில் ஐயமில்லை. இதனாலேதான் ஔவையார் இந்தக் கொடையை இகழ்ந்து பேசியதென்றுணர்க.

அரும்பதவுரை.

கரி = யானை; பரி = குதிரை; காரெருமை = கறுப்பெருமை; தேரைக்கால் பெற்று = கால் தேரையின் கால்களின் தன்மையையடைந்து; மிகத்தேய்ந்து = மிகவும் தேய்

ந்துபோய்; ஓய்ந்தது = தளர்ந்தது; கோரைக்கால் = ஒரூர்; ஆழ்வான் = (மேற்படி ஊரிலுள்ள ஒருவனது) பெயர்.

### வெண்பா.

வாதக்கோ னாளையென்றான் வையக்கோன் பின்னையென்றான்
ஏதக்கோன் யாதேனு மில்லையென்றான்—ஓதக்கேள்
வாதக்கோன் சொல்லதினும் வையக்கோன் சொல்லதினும்
ஏதக்கோன் சொல்லே இனிது. (38)

ஈகையினா லுண்டாகும் தவறுகளை விளக்குதற் கெண்ணிய ஔவையார், வாதக்கோன், வையக்கோன் ஏதக்கோன் என யாதவப் பிரபுக்களின் பெயர்களை முன்னிலையாக வைத்துத் தமது கருத்தை விளக்கியதாகு மிது. வரதராஜன், வையராஜன், ஏதராஜன் என்றும் கொள்ளலாம்.

### கருத்து.

இது கொடுப்பவர், ஏற்பவர்க்கு ஒன்றைத் தருவ தாகக் கூறிப் பின் நாளை, பின்னையென்று சாக்குச் சொல்லி யிழுக்கடிப்பதினும் ஒரு வார்த்தையில் இல்லை யென்று சொல்லி யனுப்பி விடுதல் நல்லதென்று விளக்கு கிறது. இது முன் செய்யுளை விளக்குவதாம்.

இந்தப் பாடல், காரியென்னும் பிரபுவுக்கு ஆடு வாங்கித்தா, வாதவன், வத்தவன், யாதவன் என்னும் மூவரிடம் சென்றபோது அவர்கள் சொன்ன போக்கை நினைத்துப் பாடினர் ஔவையாரென்றுங் கூறுவர்.

வாதக்கோன் பின்னையென்றான் வத்தவர்கோன்
நாளையென்றான்
யாதவர்கோன் யாதொன்று மில்லையென்றான்—
ஆதலால்

வாதவர்கோன் பின்னையினும் வத்தவர்கோ
ஞளையினும்
யாதவர்கோ னில்லை யினிது.—என்றும் பாடமுண்டு.

கோன் என்னும் பட்டம் யாதவர்க்கு வழங்குவது மரபு. கோன்—வேந்தன்.

## மேற்கோள்.

*ஏற்றவர்க் கொருபொரு ளுள்ள தின்றென்று
மாற்றல னுதவலன் வரம்பில் பல்பகல்
ஆற்றின னுழற்றுமோ ராத னெய்துமக்
கூற்றுறு நரகினோர் கூறுகொள் கயான்.

இது பரதன் கௌஸல்யையினிடம் சபதஞ் செய்த போது சொன்னது. (கம்பராமாயணம்.)

†செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிக மென்னும்—செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று. (நீதிநெறிவிளக்கம்.)

---

* மாற்றலன் = சொல்லவில்லை; உதவலன் = கொடுக்கவில்லை; வரம்பில் = அளவில்லாத; ஆற்றினன் = போய் வாவெனச் செய்தனன்; உழற்றும் = அப்படி அலையவைக்கும்; ஓர் ஆதன் = ஓர் அறிவீனன்.

† தம்மால் முடியாத காரியத்தையும் முடித்துத் தருவதாகப் பிறருக்கு ஆசை சொல்லுகிறவர்களிடத்தி லிருக்கும் தாக்ஷிணியம் எப்படிப்பட்டதென்றால், நாம் கோபமாய்ப் பேசினால் அவருக்கு மனவருத்தமாகுமென்று எண்ணி அவர் தலையை வெட்டிப் போடுகிறவனுக்கு இருக்கிற இரக்கத்தை ஒத்தது என்றதாம். (வீணாசை பேசி ஒருவனைக் கெடுக்கிற தாக்ஷிணியம் ஒருவன் தலையை வெட்டுவதற்குச் சமானம் என்பது கருத்து.)

### வெண்பா.

சுற்றுங் கருங்குளவி சூரைத்தூ றரியப்பேய்
எற்றுஞ் சுடுகா டிடிகரையின்—புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததே னொக்கும்
தளர்ந்தவர்க்கொன் றீயார் தனம். (39)

இது ஈயாத பரமலோபியின் பொருள் இன்னதற்கு நேராமென்று பாடியது.

### கருத்து.

உண்ணாமலும் உடாமலும் கொடாமலும் பொருளைச் சேமித்து வைப்பது கூடாதென்பதையும் அப்படிச் சேமித்து வைப்பது பயன்படாமற் போகுமென்பதையும் விளக்குவதிது.

ஔவையார், ஒருவன் பயனின்றிச் சேமித்து வைக்கும்பொருளை, பேய் அறைகின்ற சுடுகாட்டில் கருங்குளவி சூழ்ந்த சூரைப்புதரில் இடிந்த கரையோரத்தில் வளர்ந்துள்ள மடற் பனைமரத்தின் மேல் கட்டியிருக்கிற தேன் கூண்டுக்குச் சமானமென்று கூறுகின்றார். இது பெரிய கருத்தை விளக்குகின்றது. தேனீக்கள் தேன்கூண்டை எங்கே கட்டியிருக்கிறது? பேய் வாழும் இடுகாட்டின்கண் ஒரு சூரைப் புதரின் இடிகரையோரத்திலுள்ள பனைமரத்தின்மேலல்லவா? ஆகவே, பேய், புதர், இடிந்த கரை, மடற்பனை இவ்வளவுந் தேன் கூண்டுக்குத் தக்க காவலாகின்றன. இதுபோலவே பணத்தை நல்ல வழியிலே செலவிடாமல் சேமிப்பவனும் வெகு பத்திரமான இடத்தில் அதனை வைக்கின்றான். தேனீக்கள் நாடோறுங் கஷ்டப்பட்டுக் கொஞ்சங் கொஞ்சமாகத் தேனைச் சேகரிக்கின்றன. அப்படியே லோபியும் செய்கின்றான். தேனீக்கள் தேனைத் தாங்கள் சிறிதும் நுகராமல் சேர்க்

கின்றன. அதுபோல் லோபியும் தன்பொருட்டுச் செய்து கொள்ள வேண்டிய சௌகரியத்துக்குக் கூடப் பணத்தைச் செலவு செய்யாமல் சேர்க்கிறான். தேன் கூண்டில் தேன் நிறைந்த சமயம் பார்த்திருந்து வனவேடரோ மற்றும் எந்த வனசரரோ கூண்டைத் தொறடுகொண்டிழுத்துத் தேனைக் கொண்டுபோய் விடுகின்றனர். சில சமயம் தேனீக்கள் தங்களை வருத்தாமலிருக்கும் பொருட்டுக் கூண்டில் தீப்பந்தங் காட்டி ஈக்களைத் துரத்திவிட்டுத் தேனைக் கொண்டுபோய் விடுகின்றனர். இதில் அநேக ஈக்கள் மடிவதுமுண்டு. இப்படியே லோபி சேமித்து வைக்கும் பொருளையும் திருடர்கள் சமயம் பார்த்துக் களவாடிக்கொண்டு போய்விடுகின்றனர். திருடர் தங்களைக் காத்துக்கொள்ளும் பொருட்டு லோபியைப் பல வாறாய்த் துன்புறுத்துகின்றனர்; சிலசமயம் கொன்றும் விடுகின்றனர். தேன் எப்படி தேனீக்களுக்கும் அந்தப் புதரி லுள்ளவற்றிற்கும் பயன்படாமற் போகின்றதோ அவ்வாறே பொருள், லோபிக்கும் லோபியின் குடும்பத்துக்கும் பயன்படாமற் போகின்றது. ஆகையினால் ஈயாத லோபியின் பொருளுக்குப் பொருத்திய இந்த உவமானம் எல்லா வகையினும் ஒத்திருக்கும் சிறப்பு, இந்தக் கவியிலே அமைந்துள்ள அழகாகும்.

"ஒருவனுக்குப் பொருள் அறத்தின் வழியே வந்திருக்குமானால், அவனை அறஞ் செய்யென்று தூண்ட வேண்டியதில்லை; அவன் தானே அறஞ் செய்வான்" என்று நூல்கள் கூறுகின்றன. ஆதலின் லோபியினுடைய பொருள் பாபவழியினதாகின்றது. பாபவழியில் வந்த பொருள்—

"ஊனமே யெவர்க்குஞ் செய்தே யுறுபொரு டேடிநல்ல
தானமுந் தவமு மின்றித் தான்போசிப் பதுவு மின்றி

ஈனமாய்ப் புதைத்தோ ரத்த மெரிமன்னன் சோரன் தோ
ஆனநால் வகைக்கு மாகி நசித்திடு மறிவுள் ளாரே." [யம்

என்று கூறுகிறபடி அழியுமாகையினால், அப்படிச் சேமித்
தல் பயன்றராதென்பது திண்ணமாம்.

## மேற்கோள்.

"ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்"—
(கொன்றைவேந்தன்.)

உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி.—(நாலடியார்)

## அரும்பதவுரை.

சூரைத்தூறு = சூரைச் செடிகளடர்ந்த புதர்; சூரை - ஒருவகை முட்செடி. ஆரியப் பேய்= உயர்குலத்துப் பிசாசு; எற்றும் = அறையும்; மடற்பனை = மடலோடு கூடிய பனை மரம்; தளர்ந்தோர் = (செல்வப் பெருக்கமற்றுத்) தளர்ச்சி யடைந்தவர்.

## வெண்பா.

நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண். (40)

ஒருநாள் சோழராஜன் "நல்ல வழியிலே செல விடாதவருடைய செல்வம் என்னாகும்" என்று வினவி னன். அதற்கு விடையாக ஔவையார் பாடியதிது.

## கருத்து.

நல்ல வழியிலே செலவிடப்படாத பொருள் கெட்ட வழியில் அழிந்துபோகும் என்பதை இச்செய்யுள்

விளக்குகிறது. இதனால் நல்ல வழியிலேயே பொருளைச் செலவழித்தல் வேண்டுமென்பது வற்புறுத்தலாயிற்று. "தீவினைவிட் டீட்டல் பொருள்" என்று இன்னொரு போதனை யிருக்கிறது. ஆதலின், நல்ல வழியிலேயே பொருளைத் தேடவேண்டுமென்பதும் அறியலானோம்.

நல்ல வழியிலே செலவழிக்காமல் சேமித்து வைப்பவனுடைய பொருள், பம்பு, பேய் என்று சொல்லியபடி கெட்ட வழியில் அழியுங் காலத்தில், அந்தப் பணத்தைத் தேடியவனுடைய நெஞ்சம் படாதபாடு படுமன்றோ? ஆதலின் நல்ல வழியிலே செலவழிக்காமல் சேர்த்து வைப்பதால், மனதுக்குப் பெருங் கவலையும் அதனால் துன்பமுமே பயனாகுமென்பது திண்ணமாம். இது, துன்பமாகின்றமையினால் நல்ல வழியில் செலவிடுவது மனத்திருப்தியையும் இன்பத்தையும் உண்டாக்குமென்றாகிறது. இதனாலேதான்,

"ஈயாதார் செல்வ மிருந்தென்ன போயென்ன ?"
"ஈயாதார் வாழ்ந்தென்ன வாழாமலென்"

என்று பெரியார் இழித்துப் பேசுவாராயினர்.

நம்பனடியவர்க்கு நல்காத்திரவியம் — என்றது, கடவுளின் அடியவர்க்குக் கொடுக்காத - அதாவது அவர்கள் பொருட்டுச் செலவிடப்படாத பொருள் என்று பொருள்படும். கடவுளினடியவர் என்றமையினால் நல்லவர்கள் என்றும், பரிசுத்தர்கள் என்றும் கூறியபடியாம். கடவுளினடியவர்களெல்லாம் நல்லவர்களேயாவர். நல்லவர்களின் பொருட்டு என்றது நல்லவழியிலென்பதனையும் உணர்த்தியதாம். ஆகையினால் இது மந்திரமறிந்து பிச்சையிடல் வேண்டும் என்பதையும் விதித்த வழியில் செலவிட வேண்டுமென்பதையும் உணர்த்துவதாம்.

24284

ஒருவன் பணக்காரனாயிருந்து அவன் பணமெல்லாம் பம்பு, பேய், பரத்தையர் என்று சொல்லிய வழிகளிலே செலவழியுமானால் அந்தப் பணம் நம்பனடியவர்க்கு நல்காத வழியில் வந்து சேர்ந்த பணம் என்பது உணர்ந்து அது பற்றிக் கவலைகொள்ளாமல் நல்லவழியில் நிற்க முயல்வதே அறிவுடைமையாகுமென்பதையும் இஃதுணர்த்தும்.

## அரும்பதவுரை.

பம்புக்காம் = வீண்டம்பத்திலே-அதாவது பிறரிகழத் தக்க டம்ப வழியிலே செலவழியும்; பேய்க்காம் = பேய் பிடித்தலைக்க அதனால் மந்திரவாதிகட்கும் துஷ்டதேவதைகளின் பூசைக்கும் செலவழியும்; பரத்தையர்க்காம் = தாவிகளின் பொருட்டுச் செலவழியும்; வம்புக்காம் = நியாய ஸ்தலத்தில் துர்வழக்கிட நேரிட்டுச் செலவழியும்; கொள்ளைக்காம் = கண் எதிரில் பகைவர் கொள்ளையிட அழியும்; கள்ளுக்காம் = கட்குடிப்பதில் செலவழியும்; கோவுக்காம் = கொடுங்கோலரசர் கட்டாயப்படுத்திக்கொள்ள அதனால் அழியும்; சாவுக்காம் = வீட்டில் மரணம் பல நேரிட்டு அதனால் அழியும்; கள்ளர்க்காம் = திருடர்கள் வஞ்சித்துக் கொள்ள அழியும்; தீக்காகும் = நெருப்பினாலும் சேதப்பட்டழியும்.

## மேற்கோள்.

*துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை—வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும். (நாலடியார்)

---

* துய்த்து = உண்டு; கழியான் = செலவழியான்; துறவோர் = அடியார்; வைத்து = சேர்த்துவைத்து; கழியும் = இறக்கும்; மடவோனை = அறிவீனனை; நகும் = சிரிக்கும்; அருளும் = கருணையும்.

*"செம்மையி லறஞ்செய்யாதார் திரவியஞ் சிதறவேண்டி
நம்மையுங் கள்ளுஞ் சூதும் நான்முகன் படைத்தவாறே."
(விவேகசிந்தாமணி.)

வெண்பா.

சொல்லாம லேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார். (41)

பெரியர், சிறியர், கயவர் என்னு மூவரின் குணத்தை உவமை வாயிலாக விளக்கியதாகுமிது.

கருத்து.

ஒன்றைக் குறிப்பினாலோ அல்லது தமக்குத் தாமாகவோ உணரும் அறிவு பெரியவர்க் குண்டென்பதும் ஒன்றைச் சொன்னவளவில் கண்டுகொள்ளும் அறிவு சிறியவர்க் குண்டென்பதும் சொன்னாலும் உணரும் அறிவு கயவர்க்கிராதென்பதும் இது உணர்த்துகின்றது.

இதில் அறிவீனர், மூடர் என்று பொருள்படுவதாகிய கயவர் என்ற சொல் பிறந்துள்ளமையினால் பெரியர் என்பது பேரறிவினர் என்றும் சிறியர் என்பது சிற்றறிவினர் என்றும் பொருள் தருகின்றன.

"அறிவுடையா ராவ தறிவா ரறிவிலார்
அஃதறி கல்லா தவர்."

என்று வேதங் கூறுகிறபடியால், அறிவுடையார் வரக்கடவதனை முன்னறிய வல்லாரென்றும் அறிவில்லார்

---

* ஒரு தாஸி தன் அன்னையை நோக்கி, "நம்மிடம் வந்து நமக்கிதம் பேசி உபசரணையோடு பலர் பொருளைக் கொடுத்தழிவதேன்?" என்று கேட்டபோது அவள், மறுமொழியாகச் சொன்னதிது.

அதனை முன்னறிய மாட்டாரென்றும் அறியலாகும். ஆதலினால், அறிவு ஒருவனுக்குச் செய்வன செய்யத்தகா தன உணர்த்தும் ஒரு விளக்குப் போல்வது. அந்த விளக்கு விளங்கும் மனமுடையவர்க்குப் பிறர் சொல்ல வேண்டுமென்பதின்றாம். இதனாலேதான் ஔவையார், "சொல்லாமலே பெரியர் செய்வர்" என்றார். சிற்றறி வினர் என்பவர் பேரறிஞரினும் அறிவிற் சற்றுக் குறைந் திருப்பராதலினால் அவர்களிடம் விளங்கும் அறிவாகிய விளக்கு, அழுக்குடைய திரியுடன் கூடிய விளக்கினைப் போல்வது. ஆதலின் அந்த விளக்குக்குத் தூண்டுகோல் இன்றியமையாததுபோல் இவர்கட்குப் பிறர் சொல்லி உணர்த்தலும் இன்றியமையாததாம். ஆகையினாலே தான் "சொல்லிச் சிறியர் செய்வர்" என்றார். அறி வீனருடைய அறிவு எண்ணெய்ப்பசையற்ற விளக்குப் போல்வதாதலின், அது எப்படித் தூண்டினும் பயன் படாதோ அப்படியே இவர்களும் பிறர் உணர்த்தினும் உணருந் தரமிலராவர். ஆகையினாலேதான், "சொல்லி யுஞ் செய்யார் கயவர்" என்றார். "கண்கூடாப்பட்டது கேடெனினும் கீழ்மக்கட்குண்டோ உணர்ச்சி" என்றார் பிறரும்.

இது அறிவின் தாரதம்மியத்தினால் மக்களைப் பெரி யர், சிறியர், கயவர் என்று பிரித்து அறிவுடைமையின் பெருமையையும் அறிவில்லாமையின் இழிவையும் விளக் கியதாகும்.

"ஏவா மக்கண் மூவா மருந்து" என்றும்

"ஏவுதல் மாறா இளங்கிளை முன்னினிதே"

என்றும் நூல்கள், பிறர் ஏவுதலின்றித் தாமே செய்வன தெரிந்து செய்பவர்களைச் சிறப்பித்துப் பேசியிருக்கிற

படியால், அந்த அறிவினைப் பெற்றவர் பெரியார் என்பதி லும் பேரறிஞர் என்பதிலும் ஐயமின்றாம். ஆகவே, அவர்களே மனிதரில் உத்தமராவார்கள். இதனால் ஏவுத லின்மேற் செய்பவர் ஏவுதலின்றிச் செய்பவரிலும் தாழ் ந்தவர் என்பதும் அவர்களைச் சிறியர், சிற்றறிவினர் என் பதும் பொருந்துவனவாம். ஆகவே இவர்கள் மத்திம ராவார். பிறர் ஏவியும் உணருந் தரமிலாதவர் சிறியரினும் தாழ்ந்தவராகின்றமையினால் அவரைக் கயவர் என்பது சாலப் பொருத்தமுடையதாம். ஆகவே இவர்கள் மனித ரில் அதமராவார்கள். உத்தமர், மத்திமர், அதமர் என்று கூறுவதை, தலையாயவர், இடையாயவர், கடையாயவர் என்று விளக்கலாம். கடையாயவர் என்பது இழிந்தவர் என்று பொருள்படும். ஆகவே அறிவிலாதவரே மாந்த ரில் இழிந்தவராகின்றார் என்பது அறியலானோம். இத னாலேதான்,

*"விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்."

என்று கற்று அறிந்தவர்களுக்கும் கல்லாத அறிவீனர்க் கும் வேதம் வேறுபாடு விளக்கியது.

பொதுநோக்கில், கயவர் ஒன்றுக்கும் பயன்படாத வர். அவர்க்குரைப்பது வீண்; ஆகவே அவர்கள் ஒன் றாலும் திருந்தார் என்பன விளக்க உதித்த ஒரு திருவாக் காகுமிது.

இம்மூவர்க்கும் பலா, மா, பாதிரி இம்மரங்களை முறையே உவமானமாகக் கூறியிருக்கிறார். பலா, பூவா

---

* விலங்கொடு நோக்க மக்கள் எத்துணை நன்மை யுடையவர், அத்துணைத் தீமையுடையவர் விளங்கிய நூலைக் கற்றாரோடு நோக்கக் கல்லாதவர்.

மலே பயன் தருவது. அதுபோல் தலையாயவர், ஏவுத லில்லாமலே செய்வர் என்பதாம். மாமரம் பூத்துப் பிறகு காய்விடும். இதுபோல் இடையாயவர் ஒருவர் தூண்டப் பின் செய்வர் என்பதாம். பாதிரிமரம் பூத்த பின்பும் காய்ப்பதில்லை. இதுபோல் கடையாயவர் பிறர் தூண்டி யும் செய்யமாட்டார் என்பதாம்.

### அரும்பதவுரை.

குலாம் மாலை = விளங்குகின்ற பூமாலையை யுடைய, வேல் கண்ணாய் = வேல்போலுங் கண்ணையுடையாளே; கூறுவமை = முறையே சொல்லுதற்குரிய உவமை.

### மேற்கோள்.

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு. (நல்வழி.)

### கலி விருத்தம்.

இலக்கணக் கவிஞர்சோல் லின்பந் தேடுவர்
மலக்குசோற் றேடுவர் வன்கணாளர்கள்
நிலத்துறுங் கழலத்தை நீளும் வண்டதீ
தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல். (42)

இது கல்வியுடையார் இல்லாதார் இவ்வருவரின் தன்மையையும் உவமான வாயிலாக விளக்கியதாம்.

### கருத்து.

நல்லோர் நன்மையையும் தீயோர் தீமையையும் நாடுவர் என்பது இது விளக்குவது.

"இலக்கணக் கவிஞர் சோல்லின்பம் தேடுவர்"
"மலக்குசோல் தேடுவர் வன்கணாளர்கள்" என்று

கூறியுள்ள இவ்விரண்டு தொடரில், இலக்கணக் கவிஞர் என்றது இலக்கண நூல் வன்மையும் கவிபாடுந் திறனும் உடைய வித்துவான்கள் என்று பொருள்படும். வன்க ணாளர்கள் என்றது கற்றறிமூடர்கள் என்று பொருள் படுவது. ஆகவே இது விவேகி அவிவேகி என்னும் இவ்விருவர் தன்மையையும் விளக்குவதாகும். "சொல் லின்பம்," "மலக்குமிசொல்" என்று குறித்திருப்பதனால் இது நூலாராய்வதில் இவர்கட்குள்ள தாரதம்மியம் காட்டுவது என்ற கருத்துந் தருவதாம். கல்வி யறிவு கைவரப்பெற்ற விவேகிகள் எப்பொழுதும் தம் பெருமை கெடாதவழி நின்று உலகம் ஏற்பன செய்து மகிழ்வர். "கல்வி யழகே யழகு" "எண்ணோடு எழுத்தின் வனப்பே வனப்பு", கற்றோர்க்குக் கல்வி நலனே கல னல்லான், மற்றோரணிகலன் வேண்டாவாம்" என்று கூறியுள்ளபடி அவர்களின் உள்ளம் எப்போதும் கல்வி யழகு விளங்குமொரு வழியிலே பாடுபடு மாகையினால், அவர்கள் சொல்லின்பந் தேடுவர் என்றது பெரியராகிய ஔவையாரின் அநுபவமொழியாகும். சொல்லின்ப மென்றபடியால், அவர்கள் பிறர் நூலைக் காண நேரிடின் அதிலுள்ள குற்றங்களை நீக்கிக் குணங்களை மாத்திரம் கொள்வர்; கொண்டவழியி லின்புறுவர் என்பது விளக் கிறதாம். சொல்லின்பம் என்பது நல்ல பொருளும் கருத் தும் பொலிவுறுஞ் சொல் என்று விரியும். நல்ல பொரு ளும் கருத்து மமைந்த சொல்லே அவர்கள் நாடுவதாமா யின், அவர் தம் செய்கையும் நல்ல வழியாகவே அமை தல் திண்ணமாம். விவேகிகள், எவர்க்கும் பணிவுடை யராய்ப் பிறர் சிறுமை புறங்காத்துச் சீரெல்லாந் தூற்று வர்; அதனால் தமது நற்குணம் விளங்க வைத்து எவ ரும் புகழ விளங்குவர். ஆகையினால் அவர் எண்ணம்

எப்போதும் மேன்மையையே நாடும் என்னும் உயர்ந்த கருத்தை விளங்குவது மாகுமிது.

"நிலத்துறுங் கமலத்தை நீளும் வண்டுபோல்"— என்று, வித்துவான்கள் சொல்லின்பந் தேடுவதை உவமித்திருக்கின்றார். வண்டுக்குத் தேன் எப்படியோ அப்படியே வித்துவான்களுக்குச் சொல்லின்பமாம் என்பதும் அது தேனை அவாவி மலர்க்குமலர் செல்லுதல்போல் வித்துவான்களும் சொல்லின்பம் நாடியடைவதில் அவாக்கொண்டு நூல்களை யாராய்வர் என்பதும் இது உணர்த்தும். வன்கணாளர்கள் என்றது கற்றறி மூடர்கள் என்று குறிக்கின்றமையினால், அவர் எப்போதும் பிறர் குற்றங் கண்டு பேசுவதிலேயே விருப்பமுடையவரா யிருப்பர். ஆகையினால் அவருடைய அந்த குணத்தை விளக்கவே, விவேகிகளினுடைய குணத்தை விளக்கவந்த ஔவையார் "மலக்கு சொல் தேடுவர் வன்கணார்கள்" என்றார். மலக்குசொல் என்றது மயக்குதற்கு ஏதுவாகிய சொற்கள் என்று பொருள்படும். மயக்குதற்கு ஏதுவாகிய சொல் எனவே, அவர்களின் செய்கையும் அதற்குத் தக்கவாறு அமையுமென்பது இனிது விளங்குவதாம். ஆகவே, அவர்கள் பிறர் நூலிலும் பேச்சிலும் செய்கையிலும் குற்றங்களைக் கண்டுபிடித்து அக்குற்றங்களைப் பிறரிடம் எடுத்துப் பேசிப் புகழ் பெறவே பார்ப்பர் என்பது இது உணர்த்தும். பிறர் குற்றங்கூறித் திரிபவர் பெருமை பெறுவதின்றாம்; அவர் இழிவையே அடைவர். "பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு" என்றதன்றோ வேதம்? ஆகையினால் அச்செய்கையுடையவர் இழிஞராவர். இதனாலேதான் அவர்களை,—"ஈ, தலைக்குறை கமலத்தைச் சாரும் தன்மைபோல், மலக்கு சொற்றேடுவர்" என்று இழித்துப் பேசினாரென்றுணர்க.

இதனால் விவேகம் ஒருவனை எப்போதும் நல்ல வழியிலேயே செலுத்துமென்பதும் அறிவீனம் ஒருவனை எப்போதும் கெட்ட வழியிலேயே செலுத்தும் என்பதும் அறிதற்குரிய நீதிகளாம்.

ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவரின் பாடல்களிலே அடிக்கடி குற்றங்கூறுவது உண்டென்றும், அப்படி ஒரு சமயம் பேசியது கண்ட ஔவையார், பிறர் மீது குற்றங் கூறுவது இழிந்த குணம் என்பதுணர்த்த இச்செய்யுளைப் பாடினரென்றுங் கூறுவதுண்டு.

அரும்பதவுரை.

நிலத்துறுங் கமலத்தை = உலகத்திலுள்ள தாமரை மலரை; தலைக்குறை கமலம் = முதற் குறையாகிய கமலத்தை, அதாவது முதலெழுத்தொழிந்த கமலம் என்பதாம். அது, கமலம் என்பதின் முதலெழுத்து நீங்கியபோது மலம் என்றாகும். மலம் = நரகல்.

மேற்கோள்.

* "உண்டு குணமிங் கொருவற் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி."—(நன்னெறி)

வெண்பா.

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து. (43)

---

* கீழ் = கீழ்மக்கள், புகல்வது = சொல்வது; மலர்ச் சேக்கை = மலர்ப்படுக்கை; செழும்பொழில் = செழுமையான சோலை;

இது இன்னின்ன நாடு இன்னின்ன சிறப்புடையது என்று பாடியதாம்.

### கருத்து.

சான்ருேரையுடையதே நல்ல நாடு என்பது.

சான்ருேர், நல்ல குணங்களெல்லாம் இயற்கையிலேயே அமையப்பெற்றவராயிருப்பவர். ஆதலினுலே அவர்கள் மேலானவர். மேலோர் நிறைந்திருக்குமிடத்தில் மேலான நன்மைகளெல்லாம் அமைந்திருக்குமென்பதில் ஐயமில்லை. ஆனுல் சான்ருேராகிய செல்வமில்லையானுல் அந்த நாட்டிலுள்ள ஏனைய செல்வங்கள் நல்ல பயனைக் கொடா. நல்ல பயன்களைக் கொடுத்ததற் கேதுவில்லையானுல் அந்தச் செல்வங்களிருப்பதினும் இல்லாதொழிவதேநல்லதாம். ஆகவே, சான்ருேராகிய செல்வம் அமையுமாயின் ஏனைய எல்லாச் செல்வங்களும் தாமே வந்து சேருமென்பதும் அச்செல்வமில்லையானுல் ஏனைய செல்வமெலாம் பயன்படா வென்பதும் இது விளக்குவதாகும். ஆகையினுலேதான் ஔவையார், "நன்னுடு சான்ருேருடைத்து" என்று கூறினர்.

### அரும்பதவுரை.

வேழம = யானை ; மலைநாடு = சேரநாடு ; மேதக்க = மேன்மை பொருந்திய ; பூழியர்கோன் = பாண்டியன் ; தென்னுடு = பாண்டிநாடு ; சான்ருேர் = மேலோர்.

### மேற்கோள்.

"சான்ருே ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்றேர் குறவர் தேய நன்றே"

(வெற்றிவேற்கை)

### வெண்பா.

வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்க முரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் றள்ளுண்டே னீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுண் டிலேன். (44)

பாண்டியனது கல்யாணத்தில் தாம் விருந்துண்டதைக் குறித்துப் பாடியது.

### கருத்து.

பெருங்கூட்டமா யிருந்தமையினால் அந்தக் கல்யாணத்தில் விருந்துண்டு வருவது அவ்வளவு கஷ்டத்தி லிருந்த தென்பதை விளக்குவதிது. அநுபவித்ததைச் சுவையும் பொருளும் பொருந்திய சொற்களினாலே விளக்கியிருக்கும் அழகு இதிற் கவனிக்கத் தக்கதாம்.

### அரும்பதவுரை.

வண்டமிழைத்தேர்ந்த = வளப்பமாகிய தமிழ் நூல்களை ஆராய்ந்த; வழுதி = பாண்டியன்; உண்டபெருக்கம் = விருந்துண்ட பெருமை; நெருக்குண்டேன் = கிட்டி நெருக்கப்பட்டேன்; தள்ளுண்டேன் = தள்ளப்பட்டேன் சுருக்குண்டேன் = இளைக்கப் பெற்றேன் —

### வெண்பா.

ஆலைப்பலா வாக்க லாமோ வருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதவளப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கனைச் சீராக்க லாமோ— (45)

சாத்தியப்படாத காரியங்களிவையென விளக்கியது.

### கருத்து.

மூர்க்கனை நல்ல வழிக்குக் கொண்டுவர முடியா தென்பதாம்.

"மூர்க்கன் கொண்டது விடான்" என்று பழமொழி யுண்டாகையினால், அவன் தான் கைக்கொண்ட ஒன்றிலிருந்து திருந்துவது எளிதில் முடிவதன்றாம். "கீழ் மக்கட்குண்டோ உணர்ச்சி" என்று கூறியுள்ளபடி அவர்கள் உணர்ச்சியற்றவர்கள். உணர்ச்சியில்லையெனின் அங்குப் போதனை யெப்படிப் பயன்றரும்? ஆதலின் "மூர்க்கனைச் சீராக்கலாமோ" என்று கூறினர்.

அரும்பதவுரை.

சுணங்கன் = நாய்; நிமிர்க்க = (வளைந்துள்ள வாலை) நேராக்க; வசமாமோ = முடியுமோ

மேற்கோள்.

*இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்றும்
அடங்காதா ரென்று மடங்கார்—தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்திடினும்
கைப்பறாப் பேய்ச்சுரைக் காய்— (நாலடியார்)

---

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்
உண்ணீ ருண்ணீரென் றுபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும். (46)

ஒரு வித்துவான் ஓர் அரசனிடம் பரிசுபெறுவதற்குச்சென்றான். அரசன் அவனை நோக்கி "நீர் இன்று மாலைக்குள் நாலு கோடிப் பாடல்கள் பாடி வந்தால் பரிசு

---

* இடம்பட = விசாலமாக, குறைவற; மெய்ஞ்ஞானம் = நல்ல ஞானநூல்கள்; தடங்கண்ணாய் = விசாலமான கண்ணையுடையவளே; கைப்பு = கசப்பு; அறா = நீங்கா.

பெற்றுப் போகலாம். இன்றேல் உம்மைச் சிரச்சேதஞ் செய்வேன்" என்று சொன்னான். இதைக் கேட்டதும் வித்துவான், இடிமுழக்கம் கேட்ட ஓர் அரவம்போல் மனங்கலங்கி "ஐயோ! இப்படி முடிந்ததே நமது கதி! நாம் பரிசு பெறவந்த அழகு நன்றாயிருக்கிறது! என்ன செய்வது! ஒன்றா இரண்டா ஒரேமுறையாய் நான்கு கோடியென்றால் எந்தப் பண்டிதன்றான் பாடுவான்?—பரிசுகொடுப்பவன் பேச்சா இது?" என்றெண்ணி, முக வாட்டத்தோடு அரசனைப் பார்த்து "கட்டளைப்படி நடக்கின்றேன்" என்று கூறி விடைகொண்டு வீட்டிற்குத் திரும்பினான். வழியில் தெய்வாதீனமாய் ஔவையாரைச் சந்தித்தான்; அந்தப் பெருமாட்டியைக் கண்டதும் அவர் திருவடியிலே விழுந்து பணிந்து தனக்கு நேர்ந்துள்ள ஆபத்தைச் சொல்லிக் கொண்டான். ஔவையார், அவனைப் பார்த்து, "பயப்படாதேயும்! வித்துவானென்று வெளியே வருபவனுக்குச் சமயோசிதமான புத்தி யிருக்கவேண்டும்! நாலுகோடிப் பாடலுக்கு எத்தனை நாள் வேண்டும்? இரண்டொருவிநாடி போதாதா? இதோ பாடித்தருகின்றேன். எழுதிக்கொண்டு இப்பொழுதே அரசனிடம் திரும்பிப்போய், பரிசுபெற்றுச் செல்லும்" என்று கூறி அவனைத் தேற்றிப் பாடித்தர, வித்துவான் உடனே அரசனிடஞ் சென்று பாடல்களைப் பாடிக்காட்ட, அரசன் மனமகிழ்ந்து, தக்க பரிசு கொடுத்தனுப்பின னென்றும் வித்துவான், "ஆபத்தில் பெரியோரே காப்பாற்றுகிறவராவர்" என்று ஔவையாரை வாழ்த்திக்கொண்டு சென்றனனென்றுங் கதை சொல்வதுண்டு. ஆகவே இன்னொரு வித்துவானைக் காக்குமொரு பரோபகாரத்தின் பொருட்டுப் பாடித்தந்த பாடல்களிவை.

## கருத்து.

இவை நான்கும் நான்கு உயர்ந்த நீதிகளை உணர்த்து கின்றன.—(1) மதியாதாரை மதித்தல் இழிவென்பது; (2) உபசரியார் வீட்டில் உண்பது கூடாதென்பது; (3) எப்போதுங் குடிப்பிறந்தார் தம்மோடு கூடி வாழவேண்டு மென்பது; (4) சொன்னவொருசொல் தவறாம லிருக்க வேண்டுமென்பது.

இந்நான்கும் மக்கட் கின்றியமையாத உயர்ந்த நீதி களிலே அடங்கும். ஒவ்வொன்றும் ஒரு கோடி பெறும் என்றது, ஒவ்வொன்றும் ஒரு கோடிப் பாடலுக்கு நேரா கும் என்று பொருள்படுவது. ஒரு கோடிப் பாட லெனவே, ஒருகோடி நீதிகளென்றாகிறது. ஒவ்வொன்றும் ஒருகோடிப் பொன் பெறுமென்றும் கூறலாம். ஆனால் அரசன் கேட்டது நான்கு கோடிப் பாடல்களாகையினால் பாடல்களென்று கொள்வதே ஈண்டுப் பொருந்தும்.

இந்த நான்கினுள் முதலிரண்டும் மதியாமை, உப சரணை செய்யாமை ஆகிய இரண்டு செய்கைகளைப்பற் றிப் பேசுவன. மதியாத இடத்திற்குச் செல்வதும் உப சரணையில்லாத இடத்திற் புசித்தலும் மானக்கேட்டையே தருவனவாம். ஆகையினால் இவை யிரண்டும் மானங் கெடாமற் காப்பாற்றக்கூடியன. எஞ்ஞான்றும் தந்நிலை யிற் றாழாமையும் தாழ்வு வந்தபோது உயிர் வாழாமை யுமே மானமென்பது.

"சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்."

என்று வேதங் கூறுகின்றபடியால், மானமே ஒருவனை இழிதொழில் செய்யவொட்டாமல் தடுப்பதென்பதும் மானங் காத்தலே ஒருவனுக்குச் சீரும் பேராண்மையும்

கொடுப்பதென்பதும் அறியலானோம். ஆதலினாலே இது குடிப்பிறந்தார்க்குரிய குணங்களிலே முதன்மையான தாம். "உடம்பு அழியும். மானம் நிலையுடையது. ஆகையினால் இறந்தாயினும் மானங் காத்தலே மதியாகும்" என்பர். இதனாலேதான் "மானங் கெடவரின் வழாமை முன்னினிதே" என்றும், "எத்துணைச் சிறப்பு வருவதாயினும் தன் மானத்துக்குக் கேடுவருஞ் செயல்களை விடல்வேண்டும்" என்றும் நூல்கள் கூறுகின்றன.

இத்துணைச் சிறப்பினதாகிய மானத்தைக் காக்கக் கூடிய இவ்விரண்டு நீதிகளையும் ஔவையார் இரண்டு கோடி பெறும் என்று பேசியிருப்பது நாம் எத்தனைகோடி கொடுப்பினும் கிடைக்காத பேச்சாகும். இது அத்துணைச் சிறப்பினை யுடையதென்பதி லையமில்லை. கேட்டதில்லையா—"மனிதனுக்கு மானமே பெரிது" என்றும், "மானம் போனபின் வாழ்ந்தென் வாழாமலென்" என்றும் "மானம் பெரிதோ பிராணன் பெரிதோ" என்றும் "மானம் போனபின் கோடி வந்தென்ன கோடி போயினென்ன" என்றும் உலகத்தில் பழமொழிகள் வழங்குவது.

மூன்றாவது குடிப்பிறந்தார் தம்மோடு கூடி வாழ வேண்டு மென்பது—குடிப்பிறந்தார்,

"ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்."

என்று வேதங் கூறுவதற்கேற்ப ஒழுக்கம், வாய்மை, நாணம் இம்மூன்றினும் தவறாநெறி கடைப்பிடித்தொழுகுவோர். ஒழுக்கம் (நல்ல நடத்தை) உடம்பிற்

குரியது. வாய்மை (மெய் பேசுதல்) வாக்கிற்குரியது. நாண் (பழி பாவங்கட்கு நாணுதல்), மனதிற்குரியது. ஆகவே இவை மூன்றும் மனம், மொழி, மெய் மூன்றிற் குந் தூய்மை தருவனவாம். மூன்றினுந் தூய்மை பெற் றார் பெரியோராவரன்றோ? ஆதலின் இது பெரியாரைத் துணைக்கொள்" (ஆத்திசூடி) என்றீ போதனையாம்.

நான்காவது - சொன்ன ஒரு சொல் தவறாம லிருக்கவேண்டுமென்பது. இது எல்லோர்க்கும் எளி தல்ல. ஏனெனில், "சொல்வதெளிது சொல்லியபடி செய்வதரிது" — என்பது பெரியார் அநுபவமொழி யல்லவா? ஆதலின் சொல்லியவண்ணஞ் செய்பவனே பெரியவனாவான்; அவனே மக்களில் அறிவுடையவன். அவனை நாநலமுடையவனென்று சொல்லுவர் பெரியோர். நாநலமென்பது நாவாலுளதாகிய நலம் என்று விரியும். இந்த நலம் —

*"நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று" —

என்று வேதங் கூறியுள்ளபடி, கல்வியுடைமை, பொரு ளுடைமை, ஆண்மையுடைமை, அழகுடைமை -- என்னும் ஏனைய நலங்களிளெல்லாம் இது சிறந்ததாம். இந்நலமுடையார், ஒன்றைச் சொல்லுமுன் தீர யோசித் துச் சொல்வர். தீர யோசித்தலாவது "சொல்லுகின் றோமே, இது செய்கையில் முடியுமா?" என்று உள் ளுக்குள் ஆய்ந்தபின் வெளியிடுவர். வெளியிடுவா ராயின் அதனை எவ்வாறேனும் முடிக்கப் பார்ப்பர். இந்த நலத்தையுடையவரை "நல்ல நாணயமுடையவர்" என்

* நாவினாற்சொல்லி சொல்லியபடி முடிக்கும் வல்லமை யாந்து, எல்லா நலத்தினும் மேலானதாம்.

றுங் கூறுதலுண்டு. நாணயமுடையவரென்றால், சொன்ன கெடுப்படி வாங்கியதைச் செலுத்தும் தன்மையுடையவர் என்று பொருள்படும். இது பொருள் கொடுக்கல் வாங்கலின் மேல் வந்ததாயினும் உலகம், இதனை நாநலத்தின் பொருட்டு வைத்துப்பேசுகின்றது. இதனை வாய்மையென உருவப்படுத்தி வேதம்,

"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்"

என்று கூறுகிறது. இதன் எதிரிடைப்பதம் பொய்மை. இது உள்ளமறிந்த ஒன்றை மாற்றிச் சொல்வது. ஆனால், நாநலம் என்பது, சொன்னசொல் தவறாமல் காப்பதென்பதாம். அது தான் "நாக்கோடாமை" என்பது. நாக்கோடாமையானது, கோடிபெறும் என்பதோடு நில்லாமல், கோடானுகோடி கொடுப்பினும் என்று அடைமொழிகள் சேர்த்துச் சொல்லியிருக்கிறபடியால் இது மக்களிடத்திற்காணும் நல்ல குணங்களுக்கெல்லாம் மேலான குணமென்றாகிறது. இது பொருந்துமாயின், மானம், குடிப்பிறப்பு முதலிய நல்லவை யாவும் தாமேயமையும். "நாக்கு ஒன்றா இரண்டா?" "மனிதனுக்கு நாணயமல்லவா பெரிது?" "நாக்குக்கு எலும்பில்லை அது எப்படிப் புரட்டினாலும் அப்படிப் புரளும்" என்ற பழமொழிகள் வழங்குவதுண்டு. ஆகையினால் அதனைக் கோடாவழி அடக்கியாள்வது பெரிதாம்.

## மேற்கோள்.

(1) மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்.

(உலகநீதி)

(2) விருந்து விருப்பிலார் முற்சாம்-(நான்மணிக்கடிகை)

* (3) வாய்ப்புடையாராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது"—
(இனிது நாற்பது)

† (4) யாகாவா ராயினும் நாகாக்கக் காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (வேதம்)

வெண்பா.

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகின்றாள்—மெத்த
வெறும் பந்தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண். (47)

கல்விக்கு ஓர் எல்லையில்லை. ஆதலால் நீர் செருக்கடைய வேண்டாம் என்று புலவரை நோக்கிக் கூறியது.

கருத்து.

"கல்விகரையில" என்று விளக்குவதிது.

"ஓதுவதொழியேல்" என்றும், "பாடமேறினு மேடவிழ்தைவிடேல்" என்றும் கூறியுள்ள போதனை, "கல்வி கரையில" ஆதலின், அதனைச் சோம்பலின்றி நாடோறும் ஓதிவரினல்லால் அதில் தேர்ச்சி பெறுவது முடியாதென்பதனை விளக்குவதாம். அப்படி யிடையீடின்றிக் கற்பினும், "கற்பவர் நாள் சில, மெல்ல நினைக்கிற் பிணி பல" என்பதனால், முற்று முணர்தற் கியலாதென்பது அறியலாகிறோம். இதனாலே தான் —

---

* யாவையும் காக்கமாட்டாராயினும் நாவொன்றையேனுங் காக்கக்கடவர்; காக்கமாட்டாராயின் சொற் குற்றப்பட்டுத் துன்பப்படுவர்.

† நற்குணங்கள் பலவும் பொருந்தியவர்களாகி நாணவேண்டியவற்றில் நாணுங் குணமுடையவர்களாயிருப்பவர்களை, ஒருவன் தனக்குக் காவலாகப் பொருந்தும்படி கொள்ளுதலினிதாம்.

*"வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்"

(நீதிநெறி விளக்கம்)

என்று பெரியார் கூறினர். ஆதலால், கற்கவேண்டியவற்றைக் குருமுகமாக ஐயமில்லாமற் கற்றுப் பின் அவ்வழி நின்று அடங்கி நடப்பதே புலமைக்கழகு என்பதும் இது விளக்குவதாம்.

## மேற்கோள்.

முற்று முணர்ந்தவரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க— (நீதிநெறி விளக்கம்)

ஒரு புலவன் கையில் மண்ணை வைத்து மூடிக்கொண்டு, இஃதென்ன என்று கேட்டபோது பாடியதாகவும் கூறுவதுண்டு.

## வெண்பா.

காவலயிலோன் றுவர் கடும்பகலி லொன்றுவர்
மாவலயிலோன் றுவர் மனிதரெல்லாம்—சாலவே
முல்லாவணப் போல முகமுமக மும்மலர்ந்த
நல்லாவணக் கண்டறியோம் நாம். (48)

---

* ஓம்பாது = காப்பாற்றாமல்; மற்றுஞ்சில = வேறு சில நூல்களை; பரிந்து = வருந்தி; கற்பான் தொடங்கல் = கற்க ஆரம்பித்தல்; கைத்தலத்த = கையிலிருக்கிற; கருந்தனம் = பெரும்பொருளை; உயர்த்துச் சொரிந்திட்டு = கொண்டுபோய் எறிந்துவிட்டு; அரிப்பரித்து = அரிப்பைச் செய்து; எய்த்து = வருந்தி; பொருள் செய்திடல் = பொருளைச் சம்பாதித்தல்.

அன்பாய் உபசரிக்குந் தன்மை வாய்ந்த முல்லா னென்பவனைப் புகழ்ந்து பாடியதிது.

### கருத்து.

எப்போதும் ஒரு தன்மை யுடையவராயிருந்து உப சரிக்கும் தன்மையே சிறப்புடையதென்றுவிளக்குவதிது.

மக்கள் சாத்விகம், இராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்களையுடையவர்; சாத்விகம்,—அடக்கம், அன்பு அருள், ஞானம் முதலியவற்றிலே சிந்தையோ டிருத்தல், இராசதம் - மந்தமாயிருத்தல் முதலியவற்றிலே சிந்தைகொள்ளல், தாமதம்-அஞ்ஞான மேம்பட்டிருத்தல். ஆகவே இம்மூன்றனுள் சாத்விக குணமே சிறந்தது. ஆதலால் அதனையே பெரியோர் விரும்புவர். அந்த குணமுடையவர்க்கே உலகத்தில் மரியாதையுண்டாகும். ஆனல் அந்த குணம் அமைவதரிது. குணங்கள் மூன் றும் யாவர்க்கும் மாறி மாறி வரும். அதனலே தான், "காலையிலொன்ருவர் கடும்பகலிலொன்ருவர், மாலையி லொன்ருவர் மனிதரெல்லாம்" — என்ருர். இப்படிக் குணங்கள் மாறுவதற்குத் தக்கபடி நடத்தையிலும் செய் கையிலும் மக்கள் மாறுபடுவர். மாறுபடுங்கால், உயர்ந் தோரிடம் இழிந்தசொல்லும் இழிந்த செய்கையும் காண லாம். தாழ்ந்தோரிடம் உயர்ந்த சொல்லும் உயர்ந்த செய்கையும் காணலாம். இதனலே தான் —

*"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று கூறிற்று வேதம் - அன்றியும்,

---

* யாதொரு பொருள் யாவர் யாவர் சொல்லக் கேட்பி னும் அப்பொருளின் மெய்யாய பயனைக் காணவல்லது அறிவு.

காலைச் செய்வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச் செய்வாரே தலைப்படுவர்—(அறநெறிச்சாரம்)

என்றும் அறம்புரிதற்கு முறையும் கூறியது. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழியும் இக் கருத்தை விளக்கும்.

குணம் இப்படி மாறுமியல்பினதாயினும், எப்போதும் ஒரு தன்மையாயிருந்து அதாவது சாத்விக குணம் மிக்கவனாயிருந்து யாவரையும் உபசரித்து வருபவன் எல்லா நன்மைகளும் அடைதற்குரியவனாவான். அவனுடைய முகமும் அகமு மலர்ந்திருக்கும். இங்குக் குறித்த முல்லானென்பவன் சாத்விக குணமுடையவன். அதனாலேதான் அவ்வை "முகமு மகமு மலர்ந்த நல்லான்" என்று புகழ்ந்ததாம். புகழ்ந்ததோடு நில்லாமல், "நல்லானைக் கண்டறியோம் நாம்" என்று சிறப்பித்தும் பேசினார். ஏனெனில்,

*"உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையுஞ் சஞ்சலமே தரும்."—(நல்வழி.)

என்று கூறும் மானிடரின் தன்மையை நோக்கியேயாம்.

**மேற்கோள்.**

†"நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மை குடிக்கு"—குறள்.

---

* நாழி = ஒரு படியளவும்; கண் புதைந்த = (அஞ்ஞானத்தால்) குருடாயிருக்கிற; கலம்போல = பாத்திரம் போல; சாந்தனையும் = சாகுமளவும்.

† உயர்குடியிற் பிறந்தவர்க்கு நகை (முகமலர்ச்சி) ஈகை இன்சொல் இகழாமை என்னும் நான்கு முரிமையாயிருக்கும்.

### கலித்துறை.

மேற்பார்க்க மைந்தரும் மூவாவெருதும் விளங்குகங்கை
நீர்ப்பாய்ச் சலும்நன் னிலமுமுண் டாகியு நின்னிடத்தின்
பாற்பாக் கியவதி நீங்கா திருந்தும் பலிக்குழன்றீர்
ஏற்பார்க் கிடாமலன் றேபெருங் கோவி லிறையவனே.

பரமசிவனுடைய பிக்ஷாடனத் திருக்கோலத்தை அலங்கரித்துப் பாடியதிது.

### கருத்து.

தம்மை யாசித்தவர்க்குக் கொடாதபோது சம்பூர்ண மான செல்வமுடையவர்க்கும் குறைவு நேரிடும் என்னும் நீதியை விளக்குவதிது.

சிவபிரானுடைய பிக்ஷாடன கோலத்தை நிந்தாஸ்துதியாக வைத்து ஏற்பவர்க் கிடாதவர்க்குக் குறைவு நேரிடும் என்னும் நீதியை விளக்கியது இதிலமைந்துள்ள அழகாகும். "ஏற்பார்க்கு இடாமலன்றோ" என்றது, அவரே பிச்சைக்குப் புகுந்து விட்டமையினால் அவரை ஏற்பவரும் ஏற்பவர்க்கு அவர் இடுவதும் இல்லையென் பதைக் குறிக்கும்.

### அரும்பதவுரை.

மேல் பார்க்க மைந்தரும் = மேற்பார்வை பார்த்துவர, விநாயகர், முருகர் என்னும் இருபுதல்வரும்; மூவா எருதும் = முதிராத எருதும்; பால் பாக்கியவதி = பார்வதி தேவியாகிய உமாதேவி; பலி = பிச்சை.

### வெண்பா.

காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம்
பேசு முலாவிற் பெதும்பைபுலி—ஆசு
வலவர்க்கும் வண்ணம் புலியாமற் றெல்லாப்
புலவர்க்கும் வெண்பாப் புலி. (49)

புலவர்கள் பாடுதற்கரியவை யிவையென்றது.

### கருத்து.

பாடல்களில் வெண்பா என்னும் பாவைப் பாடுவதே பெரிது என்னுங் கருத்தை விளக்குவதிது.

### அரும்பதவுரை.

காசினியில் = உலகத்தில்; பிள்ளைக்கவி = பிள்ளைத் தமிழென்னும் பிரபந்தம்; அம்புலி = அம்புலிப்பருவம்; புலியாம் = சிறந்ததாம்; (அம்புலிப்பருவம் குழந்தைகளோடு விளையாட வருமாறு சந்திரனை யழைத்தல்) உலா = உலா என்னும் பிரபந்தத்தில்; பெதும்பை = பெதும்பைப் பருவம்; புலி = சிறந்ததாம்; (பெதும்பையென்பது பதினொரு வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்குரிய பருவமாகும். இவர்களின் மனநிலையை விளக்கிப் பாடவேண்டியது) ஆசு வலவர்க்கு = ஆசு கவியிலே வல்லவர்க்கு; வண்ணம் = சந்தக்கவி; புலியாம் = சிறந்ததாம்; வெண்பாப் புலி = வெண்பா வென்னும் செய்யுள் பாடுவது சிறப்பாம்.

### வெண்பா.

கருங்காலிக் கட்டைக்கு நாணாக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காவளக்கு நான்றோற்ற
தீரிரவுந் துஞ்சாதென் கண். (50)

ஔவையாரிடம் பாடல்பெற விரும்பிய முருகக் கடவுள் ஒரு சமயம் அவர் காட்டு வழியே வரும்போது தாமொரு மாடு மேய்க்கும் பையலாகி ஒரு நாவல் மரமீது தங்கியிருந்தனர். அப்போது கோடைக்காலமாகையால் வெப்பத்தால் தாகவிடாய் மேலிட்டு எங்கும் ஜலங் காணாமல் வருத்தத்தோடு வரும் ஔவையார் அந்த நாவல் மரத்தடியில் தங்கிப் போக உட்கார்ந்தார். உட்கார்ந்தவர் மரத்

தை அண்ணாந்துபார்க்க அதில் மாடுமேய்க்கும் பிள்ளை யொருவன் நாவற்பழந் தின்றுகொண் டிருப்பதைக் கண்டார். உடனே அவனை நோக்கி "தம்பி! எனக்கு மெத்தவும் தாகமாயிருக்கிறது. இரண்டொரு பழம் பறித்துப் போடு" என்று வேண்டினள். அதற்கிசைந்த முருகன் "பாட்டி, உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டனர். இதனைக் கூர்ந்தறியும் இடம் அதுவா யிராமையாலும், தாகவிடாயின் "தூண்டுதலாலும்,பழத்தில் சுட்டதும் சுடாததுமுண்டோ; இப்பையன் நம்மைப் பரிகசிக்கிறான்; நல்லது இவனை நாம் ஏமாற்றுவோம்" என்றெண்ணி "அப்பா, சுட்ட பழமே போடு, பார்க்கலாம்" என்றார். அவர் உடனே கனிந்த பழமொன்றை எடுத்து மணல் தரையில் மணலேறும்படி போட்டார்.

அதை ஔவையார் எடுத்து அதிற் படிந்துள்ள மணலை அகற்ற வாயால் ஊதினார். அப்போது பெருமான் "பாட்டி, பாட்டி, என்ன ஊதுகிறாய்; அதிகமாகவா சுடுகிறது?" என்று கேட்டார். உடனே கிரகித்துக்கொண்ட ஔவையார் பாடியது இது.

### கருத்து.

ஒருவரது குணநலத்தைத் தெரிந்துகொள்ளாமல் உருவத்தை மாத்திரங் கண்டு ஏளனஞ் செய்யலாகாது என்பதை விளக்குவதிது.

### அரும்பதவுரை.

இருங் கதலித் தண்டுக்கு = பெரிய வாழைத்தண்டுக்கு; நாணும் = அஞ்சும்; காளைக்கு = சிறுவனுக்கு; ஈரிரவும் = இரண்டு இரவும்; துஞ்சாது = நித்திரை கொள்ளாது.

மேற்கோள்.

—"சிற்றுளியால்
கல்லுந் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தினால்"—(நீதிநெறி விளக்கம்)

அகவல்.

கோடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனிலுங் கொடிது இளமையில் வறுமை
அதனிலுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனிலுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனிலுங் கொடிது
இன்புற அவர்கையி லுண்பது தானே. (51)

முருகப்பெருமான் கொடியது எதுவென்று கேட்டனர். அப்போது பாடியதிது.

கருத்து.

அன்பிலாப்பெண்டிர் கையிலுண்டபதே கொடியவற்றிற் கொடிதென்பதாம்.

"வறுமை கொடிது" என்றார். வறுமையுற்றால்,

"தாங்கொணா வறுமை வந்தாற் சபைதனிற் செல்ல நாணும்
வேங்கைபோல் வீரங் குன்றும் விருந்தினர்க் காண நாணும்
பூங்கொடி மனையாட் கஞ்சும் புல்லருக் கிணக்கஞ் செய்யும்
ஓங்கிய வறிவு குன்றும் உலகெலாம் பழிக்குந் தானே."
—(விவேகசிந்தாமணி)

என்றபடி எல்லாத் துன்பமும் இழிவுமுண்டாகு மாதலால் அதனைக் கொடிதென்றார். "அதனிலுங் கொடிது இளமையில் வறுமை" என்று கூறினார். மக்களுக்கு இளமையானது, இம்மை மறுமைக்குரிய சாதனங்களைத்

தேடுவதன்பொருட்டு. உழைக்கவேண்டிய பருவமாகும். இதனாலேதான் ஔவையார் "இளமையிற்கல்" என்றார். இந்த இளமைப் பருவத்தில் வறுமை வருமாயின், "வித்தைக்குச் சத்துரு விசனம் தரித்திரம்" என்பதுபோல் அது ஒருவர்க்குப் பெரியபகையாகுமாகையினால் அதனை, அதனிலுங் கொடிது என்றார்.

"அதனிலும் கொடிது ஆற்றொணப் பெருநோய்" என்றார். அந்தோ! நோய் என்பது மக்களுடைய வாழ்வுக்குப் பெரும்பகை. நோய்க்காளானவன், பெரிய தனவந்தனாயிருந்தாலும் வாழ்வில் அவனுக்குச் சுகமிராது. சரீர திடமிருந்தாலன்றி ஒன்றையு மநுபவித்தற்கியலாது. சரீரதிடம் பெற்றவனே சகல ஐசுவரியமும் பெற்றவனாகிறான். அவனுக்கே சகல சுகங்களும் உரியவை. இதனாலே தான், "நோய்க் கிடங்கொடேல்" என்றும் "நோயற்ற வாழ்வே வாழ்வு" என்றும் கூறியிருக்கின்றன நூல்கள். இப்படி யிருக்கின்றமையினால் இதனோடு வறுமையுஞ் சேருமாயின் ஒருவருடைய கதியாதாம்?— பெருங்கேட்டுக்கிடமாமன்றோ? இதனாலேதான் "அதனிலும்கொடிது ஆற்றொணப் பெருநோய்" என்றார்.

"அதனிலும் கொடிது அன்பிலாப் பெண்டிர்" என்றார். அன்புடைய மனைவியே ஒருவனுடைய வாழ்வுக்கு ஆதாரமென்றும் அன்பில்லா மனைவியே ஒருவனுடைய தாழ்வுக்கு ஆதாரமென்றும் அறிந்திருக்கின்றோம். ஒருவன் எவ்வளவோ கவலையுடையவனா யிருந்தாலும் அவன் தன்னுடைய மனைவியின் முகமலர்ச்சியைக் காண்பானாயின், அந்தக் கவலையெல்லாம் சூரியனிடம் பனிபோல் விலகுமென்பது அநுபவமாகும்.

அந்த மனைவி தீயவளாயின், அவனைக் கொல்ல வேறு நமன் வேண்டுமோ?—“கூற்றமே இல்லிற் கிசைந்தொழு காப் பெண்” என்றும்,

“தன்னுரைகொ ளாதமனை வாழ்க்கையது தன்னின்
வெந்நிரயம் வீழும்வகை யேவிழுமி தம்மா
வன்னரொடு மேவியம ராடவர் தமக்குப்
பின்னுமொரு கூற்றுமுள தோபிணியு முண்டோ.”
—(கந்தபுராணம்)

என்றும் நூல்கள் கூறுவதனால், வறுமை, நோய் இவ் விரண்டு நமனோடு அன்பிலாப் பெண்டிராகிய நமனுஞ் சேர்ந்தால், ஒருவன் எப்படிப் பிழைப்பான்? ஆகையி னாலேதான் “அதனினுங் கொடிது அன்பிலாப் பெண் டிர்” என்றார்.

“அதனினும் கொடிது இன்புற அவர்கையில் உண் பதுதானே”—என்று கூறி முடித்தார்.

அன்பிலார் இடும் அமுதமே விஷமாகு மென்பர். மனமார்ந்த அன்பு பூண்டு கணவனை எந்தக் காலத்திலும் ஆதரிக்கவேண்டிய மனைவி அன்பில்லாதவளானால் அவ ளிடும் உணவை எப்படி யுண்பது! அந்தோ! இது பெருஞ் சங்கடத்தை விளைக்கக்கூடியது. பொறுத்தற் கரிய துயரந் தருவது. ஆகையினாலே தான், இதனை எல்லாவற்றினும் கொடிதென்று கூறியதாம்.

மேற்கோள்.

*இன்மையி னின்னாத தியாதெனின்
இன்மையி னின்மையே யின்னாதது—(குறள்.)

---

* ஒருவனுக்கு வறுமைபோல் துன்பந் தருவது யாதென்று கேட்டால் வறுமைபோல் துன்பந் தருவது வறுமையேயாம்.

அகவல்.

இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள் ளோரைக்
கனவிலு நனவிலுங் காண்பது தானே. (52)

முருகப் பெருமான் இனியது எது என்று கேட்கப் பாடியதிது.

கருத்து.

அறிவுடையோர் பெருமை விளக்கியதாகுமிது.

1. இனிது இனிது ஏகாந்தமினிது — என்றார். ஏகாந்த மென்பது தனித்திருத்தலாம். மனத்தைச் செலுத்தி ஒன்றைச் சிந்தித்தற்கும் கடவுளைத் தியானித்தற்கும் ஏகாந்தமே இனிதாம். அன்றிக் காலத்தைத் தனக்கோ உலகத்திற்கோ பயன்படும் வழியிலே செலுத்துவதற்கும் ஏகாந்தமே இனிது. அறிவு சிதையாமல் நின்று அரிய பெரிய கருத்துக்களை விளைப்பதற்கு ஏதுவாவது ஏகாந்தந்தான். ஆதலால், ஏகாந்தம் என்பது இடையூறில்லாதது என்றும் கொள்ளலாகும். இடையூறற்றதாயின் அது இனிதாமாதலின் "இனிது இனிது ஏகாந்தமினிது" என்றார்.

2. அதனினு மினிது ஆதியைத் தொழுதல்—என்றார். ஆதியை என்பது கடவுளை என்று பொருள்படும். கடவுளைத் தொழுதல், மக்களுக்குரிய கடமையாதலின் அது செய்வது இனிதேயாம். கடவுளைத் தொழுதல்,

*"இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

என்று வேதங் கூறுகின்றமையினால், இனிதேயாம்.

3. அதனினுமினிது அறிவினர்ச் சேர்தல் - என்றார். அறிவினர், இயற்கையறிவாலும் கல்வியறிவாலும் மேன்மையுற்றவராவர். அவர், தம்மை யடுத்தவரைத் தீய வழியிலே செல்லவிடாமல் தடுத்து நல்ல வழியிலே செல்லுமாறு மதிபுகட்டி ஆதரிப்பர். பகைவர், உறவினர், பகையும் நட்புமில்லாதவர் ஆகிய முத்திறத்தாரிடத்தும் எப்பொழுதும் நடு நிலைமையுடையவராயிருப்பர். அவர், "காலையிலொன்றுவர்" என்று கூறியபடி குணவேறுபாடடையாமல் மெய்ப்பொருள் கண்டுய்யும் ஒரு சிறந்த வழியிலேயே சிந்தை செலுத்துவர். இதனாலே தான்,

"ஆக்கு மறிவா னலது பிறப்பினான்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க"—

(நன்னெறி.)

என்று கூறினர் மேலோர். அன்றியும் "அறிவே ஆற்றல்" "அறிவே அரண்" "அறிவே ஆவதுணர்த்துவது" "அறிவே உண்மையைக் காட்டுவது" என்றும் பேசுகின்றன நூல்கள். ஆகையினாலேதான், "அறிவுடையார் எல்லாமுடையார்" என்றது வேதம். இதனாலேதான்- "அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்" என்றார் ஔவையார்.

"அதனினும் இனிது அறிவுள்ளோரைக் கனவினும் நனவினும் காண்பது தானே" என்றார். இது அறி

*மயக்கத்தைப்பற்றி வருகிற நல்வினை தீவினை இரண்டும் உண்டாகாவாம்; கடவுளுடைய மெய்ம்மை சேர்ந்த கீர்த்தியை விரும்பியவரிடத்து.

வினர்ச் சேர்தலே அறிவுடைமைக்கழகு என்றதை உறுதியாக்குவதன் பொருட்டெழுந்த திருவாக்காகும். கனவினும், நனவினுமென்றதனுல். எப்போதும் என்றுகிறது. "எப்போதும் அறிவினரைக்காணல் நல்லது" என்பது, அறிவுடையவரோடு எப்பொழுதும் பழகவேண்டுமென்பதும் அவர்போதிக்கும் ஒழுக்கங்களைச் சிந்தித்தல்வேண்டுமென்பதும் உணர்த்துவதாம்.

ஆகையினுல் இது, அறிவுடையவரின் பெருமை விளக்கிய வழி அவரை யடுத்து அன்பு கொண்டவர்க்கே இகபர நன்மையுண்டாகுமென்பதும் போதித்ததாம்.

மேற்கோள்.

*"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்". —(குறள்)

அகவல்.

பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவன மோநான் முகன்ப டைப்பு
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி யங்கையி லடக்கம்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலச மோபு வியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே. (53)

* பெரியார் மகிழத்தக்கவற்றை அறிந்து செய்து அவரைத் தமக்குச் சிறந்தவராகக் கொள்ளுதல் ஒருவனுக்கு அரிய பேறுகள் பலவினும் அரிதாம்.

முருகப்பெருமான் பெரிதெது என்று கேட்கப் பாடியது.

கருத்து.

இது தொண்டருடைய பெருமையே பெரிது என்னும் பெரியதொரு கருத்தை விளக்குவது.

தொண்டர் என்பதன் பொருள் கடவுளுக்குத் தொண்டு செய்யும் அன்பர் என்பதாம். இவரை அடியார் என்றுங் கூறுவதுண்டு. "நம்பனடியார்" என்ருரன்றே? கடவுளொருவருண்டு; அவர் தவறு செய்பவரைத் தவருமல் தண்டிப்பவர்; தம்மை அன்போடு வழிபடுகிறவர்கட்கு அவர் விரும்பியவற்றை யெல்லாந் தகுதியறிந்து தருபவர் என்னுந் தீர்மானத்தோடு அவரை மனம் வாக்குக் காயங்களால் சிந்தித்துத் துதித்துத் தொழுது தொழும்வழி உள்ளமுருகி நிற்பவரே அடியவராவர். மானிட சரீரந்தாங்கியவர்,

"உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண்"—(ஔவை குறள்)

"உடம்பினாற் பெற்ற பயனாவ தெல்லாம்
திடம்பட வீசனைத் தேடு"—(ஔவை குறள்)

என்றும் வெளிவந்துள்ள திருவாக்குகளின்படி, ஈசனைத் தேடியறிந்து உடம்பிலேயே அவனைத் தரிசிக்கவேண்டிய கடமையை மேற்கொண்டவராவர். இந்தக் கடமையை எப்படி நிறைவேற்றி இன்புறுதல் கூடுமெனில்-அதற்கும்,

"மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு"—(ஔவை குறள்)

என்ருர். மாசற்ற கொள்கை என்பது குற்றமற்ற கொள்கை என்று பொருள்படும். இது கடவுளினிடத்திற்

கொள்ளுமொரு அன்பினாலேயே அமைவதாம். ஈசனிடத்துச் செலுத்தும் அன்பிற்குப் பக்தி என்று கூறுவர்.

"அன்பா லழுதும் அலறியும் ஆள்வானை
என்புருகி உள்ளே நினை"—(ஔவை. துறவு)

என்று கூறியுள்ளபடி அன்பில்லாமற் போனால் கடவுளை நினைத்தற்கும் முடியாதென்பது தெரிகிறது. கடவுள் பரிசுத்தமானவர். அவரை வழிபடுபவரும் சுத்தமாகவே யிருத்தல் வேண்டும். சுத்தமுடையா ரொருவர்க்குச் சுத்தமுடையாரே நண்பராவதன்றி அசுத்தமுடையார் நண்பராவதில்லையல்லவா?—கடவுளிடத்து அன்பு பெருகும்படியான சுத்தம் பெருக வேண்டுமாயின், ஒருவன்,

"பூசனை செய்து புகழ்ந்து மனங்கூர்ந்து
நேசத்தால் ஈசனைத் தேடு"—(ஔவை துறவு)

என்ற கட்டளைப்படி நடத்தல்வேண்டும். அப்படி நடப்பது எளிதிலமைவதல்ல, நெடுங்காலப் பழக்கத்திலே அமைவதாம். அந்தப் பழக்கம் கைவரப்பெற்றவரே அடியராவர் அதாவது தொண்டராவர். தொண்டர்க்கு—"அடியார்க்கு எளியவன் அம்பலவாணன்" என்றபடி கடவுள் எளியராவர். ஒருவர்க்கு எல்லாம் வல்ல கடவுள் எளியவராவரெனில் அவர் தம் பெருமை எளிதெனச் சொல்வது கூடுமோ? அவர்க்குக் கிட்டாதது முண்டோ? அவரே கடவுளாவார் என்பதே பொருத்தமான பேச்சாகும். ஆகையினாலேதான் "பெரிது பெரிது புவனம் பெரிது" என்று தொடங்கி, முறையே ஒன்று ஒன்றில் அடக்கமென்று தாழ்மை காட்டி முடிவில் அண்ட பிண்ட சராசரங்கள் யாவுமாயும் அவை கடந்தும் அணுவுக்கு அணுவாயும் மகத்துக்கு மகத்தாயும் விளங்கும் இறைவனும் தொண்டருள்ளத் தொடுக்க மென்பதுணர்த்தித்

தொண்டர் பெருமை விளக்கினர். இந்த அழகு இதில் கவனிக்கத்தக்கதாகும்.

### அரும்பதவுரை.

புவனம் = உலகம். நான்முகன் = பிரமதேவன், கரிய மால் = மகாவிஷ்ணு; குறுமுனி = அகஸ்தியமுனி; அரவு = ஆதிசேஷனென்னும் பாம்பு; உந்தி = கொப்பூழ்; நான் முகன் காரியமால் உந்தியில் வந்தோன் என்பது மகா விஷ்ணுவினுடைய உந்தியில் பிரமதேவர் தோன்றினர்; அந்த வரலாறு விளக்குவதாம். பிரமதேவருக்கு உந்தி பூத்தோன் என்று ஒரு பெயர். கரியமாலோ அலைகடல் துயின்றோன்—இது மகாவிஷ்ணு பாற்கடலிலே பள்ளி கொள்வது விளக்கும். க்ஷீராப்திசயனன் என்று மகா விஷ்ணுவுக்கு ஒரு பெயர்; அலைகடல் குறுமுனி அங்கையி லடக்கம்—இது கடலிலே ஒளிந்துகொண்ட ஓர் அசுரனி னிமித்தம் அகஸ்தியர் கடலை அங்கையிலேற்றுக்குடித்ததை யுணர்த்துவது. குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன் —இது, ஒரு ரிஷியின், இச்சைப்படி அகஸ்தியர் கும்பத் திலே தோன்றியதுணர்த்தும். அகஸ்தியர்க்குக் கும்பமுனி யென்றொரு பெயருண்டு. புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்—இது ஆதிசேஷன் என்னும் அரவரசனாலே புவி தாங்கப்படுவதுணர்த்தும். அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்-இது பரமசிவனும் பார்வதியும் ஸர்ப்பாபரணம் அணிந்துள்ள துணர்த்தும். உமையோ இறையவர்பாகத் தொடுக்கம்—இது உமாதேவி பரமசிவனுடைய இடது பாகத்திலிருப்பது விளக்கும். இறைவனோ தொண்டருள் ளத் தொடுக்கம்—இது,

* "போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை
ஓதுவா ருள்ள மெனவுரைப்பாம்—நீதியார்

---

* போதுவார் = வழிபடுவோராய்; நீறணிந்து = விபூதி தரித்து; பொய்யாத = ஸத்தியமான; ஐந்தெழுத்தை =

பெம்மா னமரர் பெருமா னொருமான்கை
அம்மானின் றாடு மரங்கு"—(நளவெண்பா)

என்னும் பெரியார் திருவாக்கை யுணர்த்தும்.

மேற்கோள்.

*"இயங்கு முலகினி லீச னடியார்
மயங்கா வழிசெல்வர் வானுல காள்வர்"

†"அகம்படி கின்றநம் ஐயனை யோரும்
அகம்படி கண்டவர் அல்லலிற் சோரார்"

(திருமந்திரம்)

அகவல்.

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிட ராத லரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையும்
தானமுந் தவமுந் தான்செய லரிது

---

பஞ்சாக்ஷரத்தை; ஓதுவீர் = ஜபிக்கின்றவர்; உள்ளம் = மனம்; நீதியார் பெம்மான் = தருமமார்க்கத்திலுள்ளவரிடம் விளங்கும் கடவுள்; அமரர்பெருமான் = தேவர் தேவன்; ஒருமான்கை அம்மான் = ஒருமானைக் கையிலேந்திய இறைவன்; நின்று ஆடும் = நின்று நிர்த்தமிடும்; அரங்கு = இடம்.

* இயங்கும் = நடையாடாநின்ற; மயங்காவழி = மயக்கமற்ற வழியில்; வானுலகு = தேவருலகு; ஆள்வர் = ஆட்சி செய்வர்.

† அகம்படிகின்ற = அகத்திலுறைகின்ற; ஐயனை = கடவுளை, ஓரும் = உணரும்; அகம்படி = இச்சைப்படி; அல்லலில் = துன்பத்தில்.

தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே. (54)

முருகப்பெருமான் அரியதேதுவென வினவியதற்குப் பாடியதிது.

கருத்து.

அரிதாகிய மானிடப் பிறவி பெற்றவர் தானமும் தவமுஞ் செய்யவேண்டுமென்பது இது விளக்குகிறது.

அரிதரிது மானிடராதலரிது—இதனால் உலகத்திலுள்ள ஜீவராசிகளிலெல்லாம் மானிடப்பிறவியே மேலானதென்றாகிறது. மானிடர் *ஆறறிவுடையவராவர். ஆறாவது அறிவாகிய மனம் என்பது அவர்கட்கு இது நன்மை, இது தீமை, இது செய்யத்தக்கது இது செய்யத் தகாதது என்று உணர்த்தக்கூடியதா யிருக்கிறது. இதுபற்றியே —

"எப்பிறப் பாயினு மேமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை"—
(அறநெறிச்சாரம்)

"எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான்
யாதினு மரிதரிது காண்" (தாயுமானவர்)

என்று பிறரும் மானிடப் பிறவியை வியந்து பேசியிருக்கின்றனர். அந்தப் பகுத்தறிவைக் கொண்டே மானிடர் இம்மை அம்மைப் பயனைத்தேடி யடைகின்றனர்.

"அன்னத்தா லாய உடம்பின் பயனெல்லாம்
முன்னோனைக் காட்டி விடும்"—(ஔவை குறள்)

என்று கூறியுள்ளபடி இந்த மானிட உடம்பு முழுமுதற் கடவுளை யறிந்து உய்வதற்குச் சாதகமானதென்றாகிறது.

---

* சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், மனம், ஆக ஆறு.

ஆதலினாலேதான் இதனை, "அரிது அரிது மானிடராத லரிது" என்றார்.

மானிட ராயினுங் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது—

கூன், குருடு, செவிடு, பேடாய்ப் பிறப்பவர்கள், தாங்களெடுத்த அந்தப் பிறவியினாலடையத்தக்க பயனை அடைதற்குரிய சாதகங்களைத் தேடிக்கொள்ள முடியாமல் உலகத்துக்குப் பாரமாயிருந்து வருந்துவராகையினால் அவை நீங்கிப் பிறத்தலே அரிதென்றார்.

பேடு நீங்கிப் பிறந்த காலையில்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது—என்றார்.

அவயவப் பழுதின்றிப் பிறப்பினும் மக்கள், ஞானமுங் கல்வியுமடையாமற்போனால்,

"விலங்கொடு மக்க ளனைய ரிலங்கு நூல்
கல்லாரோ டேனை யவர்"—(வேதம்)

என்றபடி மிருகத்திற்கு ஒப்பாவராதலின், ஞானமுங் கல்வியு மடைதலே மக்கட்பிறப்பில் தேடக்கூடிய செல்வம் என்பது விளங்க, ஓதியதாம்.

ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தான்செய லரிது—என்றார்.

ஞானமுங் கல்வியும் பெற்றிருந்தும் தானமும் தவமும் செய்யாதொழிவானாயின் அப்பிறப்பினால் பயனில்லையென்பதை விளக்கியதாகுமிது. தானம் என்பது ஈதல் என்று பொருள்படும். ஈதல் அறமாம். ஆகவே தானஞ் செய்யவேண்டுமென்பது அறஞ் செய்யவேண்டுமென்றுணர்த்தியதாம். தவம் என்பது, விரதமாம். விரதம்

மாந்தர்க்கு ஞானத்தைக் கொடுப்பதாம். ஞானமே அறத்திற்குத் துணையாய் நிற்கும். ஆதலினாலேதான் இவ்விரண்டையும் குறிப்பிட்டார். இதனை, ஆத்திசூடியில், "அறஞ்செய விரும்பு" "ஆறுவது சினம்" என்று கூறியது காண்க.

"தானமும் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே"—

இது தானமும் தவமுஞ் செய்வதாலடையத்தக்க பயனை விளக்கியதாகும். வானவர்நாடு வழிதிறந்திடுமே — என்றமையினால், வானவர்நாடு (ஸ்வர்க்கபதவி) யடைதல் திண்ணமென்பதாம். இவ்வாறு நற்கதிபெற முயல்வதே மானிடர் கடனென்பதும் உணர்த்தியதாகுமிது.

அரும்பதவுரை.

பேடு = ஆணும் பெண்ணுமல்லாதது; நயத்தல் = விரும்புதல்.

மேற்கோள்.

* மக்க ளுடம்பு பெறற்கரிது பெற்றபின்
மக்க ளறிவும் அறிவரிது—மக்கள்
அறிவ தறிந்தா ரறத்தின் வழுவார்
நெறித்தலை நின்றொழுகு வார்—(அறநெறிச்சாரம்)

வெண்பா.

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு

*மக்கள் உடம்பு = மானிடதேகம்; மக்கள் அறிவு = நன்மை தீமை யுணரும் நல்லறிவு; அறிவு அரிது = அறிதல் அரிது; அறத்தின் = தருமத்தின்; வழுவார் = தவறுபடார், நெறித்தலை = நல்ல ஒழுக்கத்தில்.

பட்டதே யின்பம் பரவனிவனந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு. (55)

இது அறம் பொருள், இன்பம் என்கிற முப் பாலேயும் ஒரு வெண்பாவில் அடக்கிப் பாட முடியுமோ என்று கேள்வி பிறந்த காலேயில் வீட்டையுஞ் சேர்த்து நான்கும் வரப் பாடக்கூடுமென்று பாடியது.

கருத்து.

புருஷார்த்தம் நான்கையும் சுருங்கச்சொல்லி விளங்க வைத்ததாம்.

இந்நான்கையும் பற்றி முன்னரே இந்நூலில் பல இடங்களில் விளக்கியுள்ளது. ஆனுல் இதில் வீடு என்பதீ, அறம், பொருள், இன்பம் என்னும் இம்மூன்றை யும் விட்டபோதே கிட்டுவதென்று காட்டியிருப்பது கவனிக்கத்தக்கதாம். மூன்றையும் விடுதலாவது, மூன்றி லுள்ள பற்றையும் ஒழிப்பதாம். ஆகவே ஒருவிதமான பற்றும் அற்ற நிலேயே வீடென்பது விளக்கியதாம்.

அரும்பதவுரை.

ஈதல் = தருமஞ் செய்தல் (கொடுத்தல்) ஈட்டல் = சம்பாதித்தல்; கருத்து = மனம்; ஒருமித்து = ஒன்றுபட்டு, ஆதரவு = அன்பு; இம்மூன்றும் = அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும்.

வெண்பா.

வெண்பா விருகாலிற் கல்லாவனை வெள்ளோவல
கண்பார்க்கக் கையா லெழுதாவனப்—பெண்பாவி
பெற்றுளே பெற்றுள் பிறர்நகைக்கப் பெற்றுளே
எற்றேமற் றெற்றேமற் றெற்று. (56)

ஓர் இராஜகுமாரி தான் மணந்துகொள்ள விரும் பிய ஓர் இராஜகுமாரனை ஒரு சத்திரத்தில் வந்திருக்கும்

படி ஒரு கடிதமெழுதியனுப்ப, அவன் படியாத கயவனு தலினால் அக்கடிதத்தை அங்குவந்த ஒரு குஷ்டரோகியி னிடங் காட்டிச் செய்தி யென்னவென்று கேட்டான். குஷ்டரோகி அக்கடிதத்தின் கருத்தைப் படித்தறிந்து கொண்டு இராஜகுமாரனைப் பார்த்து, "இவ்விடத்தி லிராதே! இருந்தால் நீ தண்டனையடைவாய்! ஓடிப்போ! உன்னை அரசன் சிரச்சேதஞ் செய்வான்" என்று சொல்லி அவனைத் துரத்திவிட்டுத் தான் போய் அச்சத் திரத்திலிருந்தான். இராஜகுமாரி தன் கடிதத்தில் குறித்திருந்தபடி அவ்விடத்திற்குவந்து தான் விரும்பியவ னில்லாமல் குஷ்டரோகி யிருக்கக் கண்டு ஏமாற்றமடைந் ததை யெண்ணி மனம்நொந்து உயிர்துறந்தாள். அகால மரணத்தினாலே அவள் பேயாய் அங்கு வருபவரை யெல் லாம் எற்று எற்று என்று பயப்படுத்திக்கொண் டிருந் தாள். இப்படித் தன்பொருட்டு இராஜகுமாரத்தி உயிர் துறந்ததை யறிந்த இராஜகுமாரனும் அங்கேவந்து உயிர் துறந்து பேயானான். இப்படியிருக்கையில் அங்கு ஒரு சமயம் வந்து தங்கிய ஔவையாரையும் அப் பெண் பேய் பயப்படுத்தியது. அப்பொழுது ஔவையார், விழித் துப் பார்த்து நடந்ததுணர்ந்து இந்த வெண்பாவைப் பாடினார்.

இரண்டு தடவை சொன்ன வளவில் ஒரு வெண் பாவைக் கற்றுக்கொள்ளத் திறமையில்லாதவனும் வெற் றோலையைக் கண்பார்க்கக் கையாலெழுதத் தெரியாத மூடனுமான ஒருவனைப் பிறர் நகைக்கும்படி ஒரு பெண் பாவி பெற்றாள். அந்த மூடனைப் போய் அறை அறை என்று இங்கப்பாடல் பொருள் தருகின்றமையினால் இதைக் கேட்டதும் அப்பேய் "நம்முடைய வரலாறு தெரிந்து சொன்ன இவள் தெய்வமே! இவளை ஒன்றுஞ்

செய்ய முடியாது" என்று அஞ்சிச் சென்றது. இது முதல் ஜாமத்தில் நடந்தது. பிறகு இரண்டாவது ஜாமத்தில் ஆண்பேய் எற்று எற்று என்று சொல்லிக்கொண்டு வந்தது. ஔவையார்,

வெண்பா.

கருங்குளவி சூரைத்தூ றீச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை—அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே
எற்றோமற் றெற்றோமற் றெற்று. (57)

என்று பாடினார். இதைக்கேட்டவுடன் அப்பேய் அஞ்சி ஓடிப்போகப் பிறகு மூன்றாவது யாமத்தில் பெண்பேய் எற்று எற்று என்று வந்தது. ஔவையார்,

வெண்பா.

வான முளதால் மழையுளதால் மண்ணுலகில்
தான முளதால் தடமுளதால்—ஆனபொழு
தேய்த்தோ மிளைத்தோமென் றேமாந் திருப்பாரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று. (58)

என்று பாடினார். இதைக்கேட்டதும் அப்பேய் பயந்து ஓடிப்போயிற்று. நான்காவது யாமத்தில் ஆண்பேய் வந்தது. ஔவையார்,

வெண்பா.

எண்ணு யிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீரம் பற்றாக் கிடையேபோல்—பெண்ணாவாள்
பொற்றொடி மாதர் புகழறங் கொள்ளாரை
எற்றோமற் றெற்றோமற் றெற்று. (59)

என்று பாடினார். இதைக் கேட்டவுடன் பெண்பேய் ஒடுங்கி வந்து ஔவையார் முன் நின்றது. ஔவையார் மனமிரங்கி, "உனக்கு வேண்டும் வரமென்ன?" என்று கேட்க, அப்பேய், நான் மானிடப் பிறவியடைந்து, முன்

நானிச்சித்த புருஷனை மணந்து இல்லறம் நடத்திப் பிறகு நற்கதி பெறுமாறு அநுக்கிரஹஞ் செய்தல் வேண்டும்" என்றது. ஔவையார் "பேயே, உன் விருப்பப்படி நீ மானிட ஸ்திரீயாவாய்! கல்வி யறிவுடையவளாயிருப்பாய்! நீ இச்சித்த புருஷன் ஒரு விறகு தலையனாய்ப் பிறந்து உன்னை மணப்பான். பிறகு நீ நற்கதியடைவாய்" என்று வரந்தந்தாள். உடனே பேய்களிரண்டும் மறைந்தன. பிறகு அவர்கள் அங்ஙனமே பிறந்து மணஞ் செய்துகொண்டு வாழ்ந்து நற்கதி பெற்றனர்.

## பொதுக்கருத்து.

ஔவையார், பேயாயிருந்த ஸ்திரி கேட்டுக்கொண்டதற்கிரங்கி அவளையும் அவள் இச்சித்த புருஷனையும் மானிடராய்ப் பிறந்து வாழ்வெய்துமாறு அநுக்கிரஹஞ் செய்தது, புலவர் சாபாநுக்கிரஹ சக்தி வாய்ந்தவர் என்பதில் கருணையின் பாலதாகிய அநுக்கிரஹ சக்தியைக் காட்டியதாகும்.

பாட்டு (1) படிப்பில்லாதவனை எற்று என்றமையினால், படிப்பில்லாதவன் இகழ்ச்சியடைவான் என்பது விளக்கியதாயிற்று. "ஓதாதார்க்கில்லை உணர்வொடொழுக்கம்" என்ற போதனையை விளக்குவதிது.

பாட்டு (2) கருங்குளவி மொய்த்த சூரைப்புதரிலுள்ள ஈச்சமரத்தின் கனியைப்போல், வருந்தியவர்க்கு ஒன்றுங் கொடாதவனுடைய வாழ்க்கையில் அவன் விரும்பிச் சேர்த்துவைத்த பொருளையெல்லாம் பங்காளிகள் கொண்டுபோவாராகையினால் அந்தமூடனை அறை அறை என்பது பொருள்.

இங்கு இது ஆண்பேயை நோக்கிக் கூறியதாகையால், இது, "லோபியின் பொருளை எப்படி தாயத்தார்

கொள்வரோ அப்படியே, நீ மணங்கொள்ளாத பெண்ணைப் பிறன் கைக்கொள்வான். ஆதலால் உன்னைப் போல் மூடனில்லை" என்று அறிவுறுத்தியதாம். இது உலோபியின் செல்வம் பிறர்கொள்ள அழியுமென்பது விளக்கும்.

"ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்"—

கொன்றை வேந்தன்

பாட்டு (3) மேகம், மழை, பூமியிலே நல்ல நிலம், நீர் நிலைகள் இவையிருக்கின்றன. அப்படியிருந்தும் ஏமாந்து இளைத்தோம் மெலிந்தோம் என்று அலைபவரைப் போய் அறையென்று பொருள்படுவது.

இது பெண்பேயை நோக்கிக் கூறியதாகையினால் உழுது பயிர்செய்து ஜீவிக்கச் சகல சௌகரியங்களைக் கொடுத்திருந்தும் நன்முயற்சிசெய்து பயனையடைந்து வாழாத சோம்பேறியைப்போல், தன்னை விரும்பி ஒரு பெண் வந்தும் அவளை மணந்துகொள்ள மதியில்லாமல் ஏமாந்தோமென்றலையும் மூடனை அறை என்று இராஜகுமாரனை இழித்துப் பேசியதாம். இதனால், முயற்சியில்லாச் சோம்பேறி உலகத்தில் இழிவையே அடைவான் என்பது விளக்கியதாயிற்று.

"சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்"—

(கொன்றைவேந்தன்)

பாட்டு (4) எண்ணாயிர வருஷங்களாக நீரிலே கிடந்தாலும் உள்ளே ஈரம் பற்றாத கல் முதலிய பொருள்களைப்போல், அழகிய வளையலணிந்த பெண்ணினது அழகிய புகழத்தக்க மணங்கொள்ளாதவரை அறை என்பது பொருள்.

இது, ஆண்பேயை நோக்கிக் கூறியது, ஆகையினுல், "ஏமூடா உன்னை இச்சித்த பெண்ணும் நீயும் ஓரிடத்திலே இருந்தும், நெடுங்காலம் நீரில் கிடந்தாலும் ஈரம் பற்ருத கல்லைப்போல், அவளை மணந்து கொள்ளாமல் அலைகின்ருயே உன் மதி என்ன மதி? என்றறிவுறுத்தவே, அவனைப்போய் அறையென்று பட்சர்க்கையிடத்திற் பேசியதாம். இது தன்னை இச்சித்து வந்த பெண்ணை மணங்கொள்ளாமல் வழிதவறியலைபவன் வாழ்வு இழிவானது என்று கூறுவதாம். இது "இல்லறமல்லது நல்லறமன்று" என்ற போதனை.

## அரும்பதவுரை.

பாட்டு (4) உள் நீரம் பற்ரு = உள்ளே ஈரம் கொள்ளாத; கிடை = கிடக்கும் பொருள் (கல் முதலியன) பெண்ணுவாள் பொற்ருெடி = அழகிய வளையலணிந்த பெண்ணினது; மாதர் = அழகிய 1, 2, 3—பாட்டுகள் எளியதிற் பொருள் தருவன.

## வெண்பா.

தாயோ டறுசுவை போம் தந்தையோடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்
வுற்ரு ருடன்போ முடற்பிறப்பாற் ருேள்வலிபோம்
பொற்ருவி யோடெவையும் போம். (60)

இன்ருரோடு இன்ன நன்மை நீங்குமென்றதிது.

## கருத்து.

மனைமாண்பில்லையெனின் இங்கு ஒரு நன்மையுமில்லை யென்பது.

இதில் தாய், தந்தை, சேய், உற்ருர், உடன் பிறந்தார், மனைவி ஆகிய அறுவரில் இன்ருரில்லாமற் போனல் இன்னதில்லாமலொழியும் என்று சொல்லி அவ்வறுவ

ரால் அடையத்தக்க நன்மையின்னின்னதென்று விளக்கி யிருக்கிறது. முதலில் தாயோடறுசுவைபோம்—என்றார். அறுசுவை—கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்னுமிவையாறுமாம். இவையாறும் தாயோடு போம் என்றால், தாய்க்குப் பிறகு அறுசுவை யுடன் கூடிய உண்டியில்லாமற் போகும் என்பதாம். உண்டி யில்லாமற்போகு மெனவே, மாறாத அன்புடன் உண்டி யிடுவா ரிலராவார் என்று கூறியதாயிற்று. சுவையோடு கூடிய உண்டியிடுவது அன்பின் காரணமாக உண்டாவதா கையினால், தாயினுஞ் சிறந்த அன்புடையாரில்லை யென்று விளக்கியதாயிற்று. அன்போடிடுவது எதுவும் அமுத மாகுமாகையினால் "தாயோடு அறுசுவைபோம்" என்று அவளிடும் உண்டியைச் சிறப்பித்துப் பேசியதாம். குழந்தை வயிற்றிலிருக்கும்போதும் பிறந்தபிறகும் தாய் அதன் சுகத்தை நாடி எவ்வளவோ கஷ்டங்களைப்பொறுத் துக்கொண்டு பாலூட்டித் தாலாட்டிச்சோறூட்டிச் சீராட் டிக் காப்பாற்றுகின்றாள். பிள்ளைசெய்யுங் குற்றமொன்றை யும் பொருட்படுத்துவதில்லை. பிள்ளை அன்பில்லாதவனாயி னும் அவளுக்குப் பிள்ளையினிடத்தில் அன்பு குறைவ தில்லை. இப்படிப்பட்ட அன்பு எவருக்குமிராது. ஆதலி னாலே தான், "தாயோடறுசுவைபோம்" என்றுணர்த்திய தாம். இது கொண்டுதான் —

"தாயிற் சிறந்த கோயிலில்லை" "தாய்சொற்றுறந் தால் வாசமில்லை" என்று மூதுரைகள் வழங்குகின்றன. அன்றியும், "தாய்க்குச் சமானமான ஆதரவு வேறில்லை, அவளுக்குச் சமானமான கதி வேறு இல்லை, அவளைப் போல் காப்பாற்றக் கூடியவரு மில்லை, அவளுக்கொப் பாகப் பிரியமுடைய வருமில்லை" என்று பாரதம் சாந்தி பர்வம் கூறுகின்றது.

தந்தையொடு கல்விபோம் — தந்தைக்குப் பிறகு மைந்தனுக்குக் கல்வி இல்லாமற்போகும் என்பதித்ன் பொருள். கல்வியில்லாமற் போமெனவே, பிள்ளையினுடைய கல்வியின் பொருட்டுச் சிரத்தை யெடுத்துக் கொள்வாரிலராவர் என்பதாம். ஆகவே தந்தையினும் பிள்ளையை அபிவிருத்திக்குக் கொண்டுவருவதில் அன்புடையவரில்லை யென்பது அறியலானேம். தாய் பிள்ளையின் சரீர சுகத்தைக் காப்பாற்றுவதில் சிரத்தையும் அன்பும் கொள்வதுபோல் தந்தை பிள்ளையினுடைய கல்வியினபிவிர்த்தியில் சிரத்தையும் அன்பும் கொள்ளக் கடமைப்பட்டவனுகின்ருன். * "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்" என்று வேதங் கூறுகிறதன்ருே? இந்தக் கடமையை அவன் செய்யத் தவறிஞல் அவனைப் பிள்ளைக்குப் பகைவன் என்று உலகம் ஏசும். ஆகையிஞல் பிள்ளையைக் கல்வியறிவொழுக்கங்களில் மேன்மையடையச் செய்வதில் தந்தையினும் சிரத்தை கொள்வாரிரார் என்பது திண்ணமாம். இதனுலேதான் — "தந்தையொடு கல்விபோம்" என்றுணர்த்தியதாம். "தந்தைசொன் மிக்க மந்திரமில்லை" என்பதும் "தந்தை தன்னின் ஏய நற்குருவுமில்லை" என்பதும் இதனை நன்கு விளக்குவனவாம்.

சேயோடு தான் பெற்ற செல்வம் போம் — இது, பிள்ளை போனுல் பெற்ற செல்வமும் போய்விடும் என்று பொருள்படும். பிள்ளையில்லாதார் பெற்ற செல்வம் தாயத்தார் கொள்வர்; இல்லையேல் அரசரேனுங் கொள்வர்; இப்படியழியும்; பிள்ளையிருப்பானேல் அவன் அதனையேற்றுப் பரிபாலிப்பான்; தந்தைபெயர் விளங்கவைப்

---

* பிதா பிள்ளைக்குச் செய்யும் உதவி சபையிலே கல்வியில் வல்லவனென முற்பட்டிருக்கச் செயல்.

பான். இதனாலேதான் "சேயோடு தான் பெற்ற செல் வம் போம்" என்று கூறியதாம் —

"பொன்னுடைய்ரேனும் புகழுடையரேனுமற்
றென்னுடையரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்"—(நளவெண்பா)

என்னும் இத்திருவாக்கும் இதனை விளக்குவதாம். இதனாலே தான் —

*"பெறு மவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"—

என்று மக்கட் பேற்றைச் சிறப்பித்துப் பேசியது வேதம்.

ஆய்வாழ்வு உற்றாருடன் போம் — இது, உறவின ரில்லையேல், ஒருவனுக்குண்டான சுகவாழ்வு நீங்கும் என்று பொருள்படும். ஒருவனுடைய சுகதுக்கங்களி லீடுபடுவோர் அவனுடைய உற்றாரே யாவர். ஏனையோ ராகார். உற்றார் இரத்தக்கலப்புடையவராதலின், அவர் கள் எவ்வளவு பகை மூண்ட காலத்திலும் தங்களைச் சேர்ந்தவன் ஆபத்திலகப்பட்டானென்று கேட்பாராயின் மனங்கலங்காமலிரார். அவர் மனத்தில் அன்பு பிறவாமலிராது. † ஆகவே அவர் பரிந்து நிற்பவராவர். அவர் இலராயின் பரிந்து நிற்பாருமிலராவர். அதனாலே தான் "ஆயவாழ்வு உற்றாருடன் போம்" என்றார்.

---

* ஒருவன் பெறும் பேறுகளுக்குள் அறியவேண்டிய வற்றை அறிந்த மக்கட்பேற்றை யல்லது பிறபேற்றை நாம் மதிப்பதில்லை.

† அர்ஜுனன் யுத்தத்தில், தன் உறவினரை அழிக்க மனங்கலங்கியது இதனை உணர்த்தும்.

ஆகவே இது உற்றாருடன் கூடி வாழவேண்டும் என்றுணர்த்தியதாம். "சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்" "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை" "எடுப்பின்கிளையுட் கழிந்தாரை யெடுக்க" என்பன இதை நன்கு விளக்கும்.

உடன்பிறப்பால் தோள்வலிபோம் — சகோதரனோடு புஜபலம் நீங்கும் என்பது இதன் பொருள். சகோதரனில்லாதவனை ஒரிப்பிறப்பு என்று உலகம் ஏசுவதுண்டு. அதாவது சகோதரனில்லாதவன் பக்க பலமற்றவன் என்பதாம். தவிர, ஒரு பிள்ளையுடையவனையும் உலகம் பிள்ளையில்லாதவனிலேயே சேர்த்துக் கூறும். "உடன்பிறப்பில்லா உடம்புபாழ்" "தம்பியுள்ளான் படைக்கஞ்சான்" என்று வழங்கும் பழமொழிகளும் இதனை நன்குணர்த்தும். ஒருவனுக்கு உடன்பிறப்பைப்போல் உதவுவோர் வேறெவருமிரார். * அவர்களினுடைய பலத்தையிழந்தவன் தன்னையே இழந்தவனாவான். ஆதலினால் "உடன்பிறப்பால் தோள்வலி போம்" என்றார்.

பொற்றாலியோடு எவையும் போம் - பொற்றாலியையுடையவளாகிய மனைவியோடு எல்லா நன்மைகளும், நீங்கும் என்பது இதன்பொருள். மனைவியோடு எல்லா நன்மைகளும் நீங்கும் எனவே, மனைவியே எல்லா நன்மைகளுக்கும் ஆதாரமானவள் என்றாயிற்று. ஆகவே இந்தக்கவி மனைமாட்சியை விளக்கப் பிறந்ததொரு போதனையாம். மனைமாட்சியைப்பற்றி முன்னரே விளக்கியுள்ளது காண்க.

---

* விபீஷணனுடைய பலத்தை இழந்த இராவணன் கதை இதை விளக்குவதாம்.

### அரும்பதவுரை.

*சேய் = மக்கள்; ஆய வாழ்வு = பொருந்திய வாழ்வு; உற்றார் = உறவின்முறையோர், பொற்றாலி = மனைவி (இது ஆகு பெயர்)

### மேற்கோள்.

* மேனவியல் பால்வரையு மெல்லியலை மேவிற்
றானமுள தாகுமரி தானதவ மாகும்
வானமுள தாகுமிவண் மண்ணுமுள தாகும்
ஊனமில தாகுமரி தொன்றுமிலை யன்றே.

—(கந்தபுராணம்)

### வெண்பா.

ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்— பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு. (61)

சோழமகாராஜன் நான்கு பொற்கிழிகள் (பொன் முடிப்புகள்) கட்டி அவையற்றுவிழப் பாடும்படி கேட்க, அவை நான்கும் அற்றுவிழ ஔவையார் இது முதல் நான்கு பாடல்கள் பாடினர்.

### கருத்து.

யோக்கியதையிலே பெரியவன், புலமையிற் பெரியவன், வாக்சாதுரியத்திலே பெரியவன், கொடுப்பதிற் பெரியவன் ஆகிய இவர் நால்வரும் அரியவராவரென்பது இதில் விளக்கியுள்ளது.

---

* மேன இயல்பால் = முறைப்படி; வரையும் = மணந்த; மேவில் = அடைந்து வாழ்ந்தால்; இவண் = இங்கு; மண்ணும் = இகவாழ்வும்; வானம் = ஸ்வர்க்கமும்; ஊனம் = குற்றம்.

ஆர்த்தசபை நூற்றொருவா—இது, சபை மெச்சத் தக்க யோக்கியதையுடையவன் நூறு பேரிலொருவன் றான் கிடைப்பான் என்று பொருள்படும். யோக்கியதை ஒருவனுக்கு அமைவது, கல்வி, கேள்வி, நல்லொழுக்கங் களினாலேயன்றி வேறெதனாலுமல்ல. இதனை —

* கடை நிலத்தோ ராயினுங் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்—(நாலடியார்)

† எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்—(வேதம்)

‡ ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி—(வேதம்)

என்னும் இத்திருவாக்குகள் நன்குணர்த்துவனவாம். ஆகையினாலே, "ஆர்த்தசபை நூற்றொருவர்" என்று கூறியது, மக்கள் கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிலே சிறந்து நின்று பெருமை பெறவேண்டுமென்ற ஒரு போதனையாம். இது,—

"தந்தை மகற்காற்று முதவி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"—(வேதம்)

என்னும் போதனையிலடங்கும். கல்வி, கேள்வி, ஒழுக்கம் மூன்றிலும் சிறந்து நிற்பவர் அரிதாவராகையினால் "ஆர்த்தசபை நூற்றொருவர்" என்றார்.

---

* கீழானவரே யானாலும் கற்று உணர்ந்தவராயிருப் பாராளுல் அவர்களை உயர்ந்த பதவியில் வைத்துப் பெருமைப்படுத்தும் உலகு.

† ஒருவன் சிறிதேனும் உறுதி தருவனவற்றைக் கேட்கக்கடவன். அது அவனுக்குப் பெரிய பெருமை தரும்.

‡ நல்ல ஒழுக்கத்தினாலே மேன்மையும் கெட்ட ஒழுக்கத்தினாலே, அடையத் தகாத பழி தருவதாகிய இழிவு முண்டாம்.

ஆயிரத்தொன்றும் புலவர்—புலவர் என்பவர் கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிலே சிறப்புடையவராயும் தெய்வத் தன்மை வாய்ந்தவராயும் விளங்குவரென்பது முன்னரே விளக்கியுள்ளது. அவர்க்குச் சாபாநுக்ரஹ சக்தியு முண்டு என்பதும் விளக்கியுள்ளது. இவையன்றி, புல வர் தாம் நல்வழியிலே நடந்து பிறங்குறுதி கூறும் தன் மையுமுடையவராய் விளங்குவர். அவரிடம் நல்லொ ழுக்க மிருப்பதனாலும் அவருடைய இனிமையும் உறு தியுமான சொற்கள் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் இன்பந்தருமானதினாலும் அவர்களை யாவரும் விரும்புவர்; அவரிடம் அன்புடையவராயிருப்பர். இத்தகைய புலவர் பெருமையை —

* சம்பந்தர் நாவரசர் பாற்கண்டோஞ் சார்ந்துவப்ப
தும்பிரிவி னுள்ளுவதுஞ் சோமேசா—நம்பி
உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்

—(சோமேசர் முதுமொழி வெண்பா)

இந்தத் திருவாக்கு விளக்குவது காண்க. இதில் பின்னிரண்டடி வேதம்; முன்னிரண்டடியில், சம்பந்த ஸ்வாமிகள் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் இவர்களிருவரை யும் உதாரணங் காட்டியிருக்கின்றபடியால் புலவர் என்

---

* யாவரையும் அவர் மகிழும்படி சேர்ந்து இனி நாம் இவரை எப்போது கூடுவோம் என்று நினைக்கும்படி நீங்குதலாகிய அத்தன்மையே கற்றறிந்த புலவருடைய செய்கையாம். அப்படி உடனிருந்தபோது மகிழ்வதும், பிரிய நேர்ந்தபோது எப்படிப் பிரிவதென்று நினைந்து பிரி வதுமாகிய தன்மையை, ஏ! சோமேசா! நாம் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரையர் என்னும் மகான்களிடம் விளங்கக் கண்டோம்.

பவர் அத்தகையினர் என்பது இனிது விளங்குவ தாயிற்று. அத்தகையர் தோன்றுவது அரிதாமாகையி ஞல், "ஆயிரத்தொன்முரும் புலவர்" என்றதாம்.

வார்த்தை பதிஞயிரத் தொருவர் — தன்னுடைய பேச்சினுலே பிறரை வசப்படுத்தத்தக்க சக்தியுடைய வன் பதிஞயிரம்பேரி லொருவனவன் என்பது இதன் பொருள். பிறரை வசப்படுத்துவது எளிதிலமைவ தன்று. கல்வி, கேள்வி, ஒழுக்கம், புலமை இவை யொருங்கே அமைந்தவர்க்கல்லது ஏனையோர்க்கியலாத விஷயமாகுமிது. ஏனெனில், சொல்வன்மையுடையவ னென்று வெளிவருமேவான், சொல்லுதலிற் சோர்வின்மை யும் சபைக்கஞ்சாமையும் சொல்லை ஒழுங்குப்படக் கோத் துப் பிறர் மறுத்தற்கிட்மிராமல் அறமும் பொருளுமினி தமையத் தன்னிடம் நட்புக்கொண்டவர் வேறுபாடடையா மல் கட்டுப்படவும் தன்னை அங்கீகரியாதவர்களும் தன் நட்பை விரும்பவும் ஏற்ற வழியில் பேசும் சக்தியுடையவ ஞயிருத்தல் வேண்டுமென்று நூல்கள் கூறும். இன் றேல் வீண் வார்த்தையினுல் ஒருவன் பிறரை வசப் படுத்த முடியாது. இப்படி எல்லாவன்மையும் அமையப் பெற்ற ஒருவன் அரிதென்பதை விளக்கவே வார்த்தை பதிஞயிரத்தொருவர் என்ருர். இதனை —

* எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந் [தும்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்

---

* நல்லாசிரியனை யறிந்து எவ்வளவாகிலும் கல்வியை ஆராய்ந்தறிதல் இல்லையானல் கல்வியறிவில்லாததாம். அவ்வாறு ஆராய்ந்தறிந்தும் பேசுந்திறமை இல்லாவிடின் அக்கல்வி என்ன பயன்படும்? அத்திறமுண்டாயிருந்தால் அது பொன்னுற் செய்த பூ மணம் பெற்றதுபோலாம்.

சொல்வன்மை யின்றெனி னென்னும் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து—(நீதி நெறிவிளக்கம்)

இந்தத் திருவாக்கு விளக்கும்.

தாதாகோடிக்கொருவர் — கோடிப்பேரில் ஒருவன் கொடையாளியாயிருப்பான் என்பது இதன் பொருள். கொடையையும் கொடையாளியையும் பற்றி முன்னர் விளக்கியுள்ளது. அடுத்த செய்யுளும் இதனை நன்கு விளக்கும்.

வெண்பா.

தண்டாம லீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை—அடுத்தடுத்துப்
பின்சென்று லீவது காற்கூலி பின்சென்றும்
ஈயானைச் சம்போ லவு. (62)

கருத்து.

தருமஞ் செய்வதில் ஆசைகாட்டி மோசஞ் செய்ப வன் சந்ததியில்லாமலொழிவன் என்பது விளக்குவதிது. ஈகையின் இலட்சணமும் கூறியதாம்.

இதில் கொடையை மூவகையாய் வகுத்து உலோபத்தின் இழிவைக் காட்டியிருக்கும் அழகு கவனிக்கத் தக்கதாம்.

தண்டாமல் ஈவது தாளாண்மை — என்றார். இதில் தாளாண்மை என்னுஞ் சொல் முயற்சி, ஊக்கம் என்று பொருள்படுபவதாகையினால் இது பிறருடைய குறிப் பறிந்து அவருக்குத் தானாகவே அவர் விரும்புவதைக் கொடுப்பது ஊக்கமாம் என்று பொருள்படும். ஊக்கம் என்பது உள்ளத்திலெழுமொரு குணம். இதனை உள்ள முடைமை என்றுஞ் சொல்வர்.

*"உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்"—

என்று வேதங் கூறியது. இதனால், பொருள் நில்லாது நீங்கும்; உள்ளமுடைமை நிலையான உடைமையாகும் என்று விளங்குகிறது. உள்ளமுடைமையாகிய ஊக்கம், உள்ளத்தின் பண்பாதலின் இது உடம்புள்ள வரையில் ஒருவனோடிருக்கும். பொருள் உடம்பினும் வேறானது. அதனால் அது உடம்புள்ளவரையிலிருக்குமென்று சொல்வதற்கின்று. ஆகையினால், உள்ளமுடைமை அதாவது ஊக்கம் ஒருவனுக்கிருக்குமானால், அவனிடம் பொருள் தானே வந்து குவியும். பொருளினால் கொடையும் எளிதில் அமையும். ஆகவே ஊக்கம் அதாவது தாளாண்மையே கொடைக்குப் பொருளினுஞ் சிறந்ததென்றாகிறது. இதனை,

"உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய ரென்னுஞ் செருக்கு"

என்ற வேதவாக்கு நன்கு உணர்த்தும். "தண்டாமலீவது தாளாண்மை" என்பது ஒருவன் தானாக முயன்று ஊக்கமேற்கொண்டு செய்வதன்றில் அமைவதாகையினால் இது தலையாய கொடையாம். கொடைக்குத் தாளாண்மை பிரதானமென்பது கண்டோமாதலின், தலையாய கொடையைத் தாளாண்மையென்றே கூறியதாம்.

தண்டி அடுத்தக்கால் ஈவது வண்மை—இது பிறர் வந்து கேட்டபின் கொடுக்குங்கொடை என்று பொருள் படும். கேட்டபின் கொடுத்தல், கேளாமலிருக்கத் தானே

* ஒருவனுக்கு மனவெழுச்சி யுடைமையே நிலைபெற்ற உடைமையாம். மற்றப் பொருளுடைமையானது நிலை பெறாமல் நீங்கிப்போம்.

முயன்று செய்தலினும் உயர்வுடையதன்றாகலின் இது இடையாய கொடையாம்.

அடுத்தடுத்துப் பின்சென்றால் ஈவது காற்கூலி - அடுத்தடுத்துப் பின்னே தொடர்ந்து சென்றால் கொடுப்பது நடைகூலியாகும் என்பது இதன்பொருள். நடைகூலியும் ஒருவித இரக்கத்தினால் அமைவதாதலின் இதுவும் ஒரு கொடையாம். இது முன்னிரண்டினும் மிகத் தாழ்ந்ததாதலின், கடையாய கொடையாகும்.

பின் சென்றும் ஈயான் எச்சம்போல் அறு - பின்னே தொடர்ந்து சென்றும் கொடாதவனுடைய சந்ததியைப்போல் அறுபடுவாய்—என்பஃது பொருள். இது ஈயாதது பரமலோபித்தனமென்றும், லோபி சந்ததி நாசமடைவான் என்றும் உணர்த்தியதாம்.

### வெண்பா.

உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் றன்கிளையும்
எச்சமறு மென்றா லறு. (63)

### கருத்து.

இது அநியாய வழக்கிடல் ஆகாதென்றும் அது செய்தவன் சந்ததியற்றுப் போவான் என்றும் விளக்கியதாம்.

### அரும்பதவுரை.

உள்ளவழக்கு = நியாயமானவழக்கு; ஊரார்பொது = ஜனசபை (ஊரிலுள்ளவர் சேர்ந்துள்ள சபை); எள்ளளவும் = அற்பமாவது; கைக்கூலி = பரிதானம் (லஞ்சம்); கால் அறுவான் = சந்ததி அற்றுப்போவான்; கிளை = சுற்

நத்தார்; எச்சம் அறும் என்றால் அறு — சந்ததியற்றுப் போமாயின் நீயும் அறுபடுவாய்.

### வெண்பா.

வழக்குடையா னிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறு மென்று லறு. (64)

### கருத்து.

உண்மை வழக்கைப் பொய் வழக்காக்குவது கூடாதென்றும் அப்படிச் செய்தவன், வழக்கை இழந்தவனுடைய சுற்றமும் அவனும் அழுங் கண்ணீரால், சந்ததியற்றுப் போவானென்றும் விளக்குவதிது.

### அரும்பதவுரை.

வழக்குடையான் நிற்ப = (உண்மையாகிய) வழக்குடையவனிருக்க; வலியானைக் கூடி = பலவானைச் சேர்ந்து; அழிவழக்கு = கெடுவழக்கு; தொடர்ந்து அழுத = இடைவிடாமலழுத.

### வெண்பா.

நேசவனக்கா ணுவிட்டத்து நெஞ்சார வேதுதித்தல்
ஆசாவன யெவ்விட்டத்து மப்படியே—வாச
மனையாவளப் பஞ்சவணயில் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாவள வேவலமுடி வில். (65)

இன்னாரை இன்ன இடத்திலே புகழவேண்டுமென்று பாடியதிது.

### கருத்து.

மரியாதைக் கிரமம் வகுத்ததாகுமிது.

இதில், நேசன், ஆசான், மனையாள், மைந்தன், வினையாள் இவ்வைவரையும் பற்றிப் பேசியிருக்கின்றது.

இவ்வைவரும் ஐந்து விதமான அன்புக்குரியவர். ஆகவே இவர்கட்கு இன்னின்னபடி இன்னின்ன இடத்தில் அன்பு செலுத்தவேண்டுமென்ற போதனையுமாகுமிது. இவ்வைந்துவகையில் நேசனிடத்து அன்பு முதலிற் கூறியுள்ளது. நேசனைக் காணுவிடத்து நெஞ்சாரவே துதித்தல் — என்றார். நேசனை உள்ளும் புறமும் ஒத்து நேசித்தலே உண்மை நேசமாகு மென்பதும் அவனை வெளியே பலரறிய அவன் எதிரில் புகழ்தல் முகஸ்துதி யாகுமாதலின் அது கூடாதென்பதும் விளக்கியதாகும். இதனால் இது,

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பதே நட்பு"—

என்ற வேதக்கருத்தை விளக்குவதாயிற்று.

(2) ஆசானை எவ்விடத்து மப்படியே — என்று குருவினிடத்தன்பு பேசினார். ஆசான், "எழுத்தறிவித்த வன் இறைவனாகும்"— என்றபடி பிரத்தியக்ஷ தெய்வ மாகின்றான். இந்த தெய்வம், மாணவனின் நன்மை நாடும் அருளுடன் விளங்கும். ஆதலினால் இங்குக் குற்றத் தைப் பொறுத்துக் குறையைக் களையும் ஸந்நிதி விசேஷ முண்டு. இதனால் அன்பு செலுத்துவதும் அதன் வழி துதிப்பதும் திருப்திகரமாய் அதாவது பரிபூர்ணமாய் அமையும். அன்பு பரிபூர்ணமானதாகையினால் அது எங்கே எந்த வேளையில் குருவின் ஸந்நிதான நினைப்புண் டாகின்றதோ அங்கே அந்த வேளையிலெல்லாம் வந்து தானே உதயமாவதாம். அது தங்கு தடையற்றதாம். ஆதலினாலேதான், ஆசானை எவ்விடத்தும் அப்படியே என்ற போதனை பிறந்தது.

மூன்றாவது — வாசமனையாளைப் பஞ்சணையில் — என்பது. பஞ்சணை யென்று ஓரிடமே குறிப்பிட்டிருக்கிறார். தன் பெற்றார், உற்றார் யாவரையும் விட்டுத் தன் கணவனையே கதியாக அடைந்து அவன் மனப்படி நடந்து வரும் உத்தமியைக் கணவன் எப்போதும் அன்பு பாராட்டிப் புகழ்ந்து பெருமைப்படுத்த வேண்டியது அவன் கடமையாம். ஆனால் கூச்சமின்றிப் புகழ்தற்குரிய இடம் பள்ளியறை ஒன்றேயாதலின், இந்த போதனை யேற்பட்டது.

* வழிபா டுடையளாய் வாழ்க்கைநடை யாளாய்
முனியாது சொல்லிற்றுச் செய்தாங் கெதிருரையா
தேத்திப் பணியுமே லில்லாளை ஆண்மகன்
போற்றிப் புனையும் பரிந்து — (அறநெறிச்சாரம்)

இத்திருவாக்கு மனைவி போற்றற்கு உரியவள் என்பது விளக்கும்.

(4) — மைந்தர்தமை நெஞ்சில் — ஒரு தந்தை தன் மைந்தனைத் தன் நெஞ்சிலேயே புகழ்ந்து மகிழ வேண்டுமென்பது இதன் பொருள். ஆகவே தந்தை மைந்தனை வெளிப்படையாய்ப் பலர் முன் நேரில் புகழ்வது கூடாதென்பதாயிற்று. ஏனெனில், மைந்தனைக்கல்வி கேள்விகளிலே பெரியவனாக்கி நல்வாழ் வடையுமாறு செய்தல் தந்தையினுடைய கடமையாதலின், வெளிப்படையாய்ப் புகழ்வதனால் அந்த நன்மைக்குப் பாதகமுண்டாகு

---

* புருஷனுக்கு அடங்கி அவனை வழிபட்டு வாழ்விற்கு வேண்டிய நல்ல நடத்தை மேற்கொண்டு கோபங்கொள்ளாமல் அவன் சொற்படி செய்து அவன் பேச்சுக்கு எதிர் பேசாமல் அவனை வாழ்த்தி வணங்கும் மனைவியை, புருஷன் அன்போடு ஆதரித்து வேண்டுவன செய்வான்.

மென்பது கருதியேயாம். தந்தை மகனுடைய செய்கையில், “நீ இன்னுந் திருந்தவேண்டும்—இன்னும் கவனிக்க வேண்டும்” என்று சொல்லி அவனை விர்த்திக்குக் கொண்டுவர வேண்டியவனல்லவா? அதனுலே தான் இந்த போதனை பிறந்தது.

(5) — வினையாளை வேலை முடிவில் துதித்தல் — வினையாளின் (வேலையாளின்) வேலைத் திறமைகண்ட போது ஏற்படுவதாகுமிது. வேலை நடக்கும்போது நடுவில் வேலையாளைப் புகழ்ந்தால், அவன் அவ்வேலையிலேகொண்டுள்ள ஊக்கத்தில் குறைவடைவான். அன்றியும் வேலை முடிந்தவுடன் பேசிய கூலிக்கு மேலேயும் கேட்பான். இதனுல் இடர்ப்பட நேரிடும். ஆகையினுல் அது கூடாது என்று விளக்கவே வினையாளை வேலை முடிவில் புகழ்தல் வேண்டும்—என்ருர்.

வெண்பா.

நிழலருமை வெய்யிலிலே நின்றறிமி னீசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய். (66)

ஔவையார் தமக்குப் பல காலும் உதவி செய்து வந்த சோமன் என்னும் பிரபு இறந்தபோது அவனுடைய கொடையினருமை தோன்றப்பாடியதிது.

கருத்து.

கொடையில் நல்லவர்க்கும் புல்லர்க்கு முள்ள தாரதம்மியம் விளக்குவதிது.

“பெரியோர் பிறர் தமக்குச் செய்த நன்மைகளை எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பர். ஆனல் அவர்

செய்த தீமையை மறந்து விடுவர்" என்று நூல்கள் கூறும். அன்றி,

*"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"—

என்று வேதம் விதித்திருக்கிறது. ஆகவே, இது, "நன்றிமறவேல்" என்ற போதனையை நினைப்பூட்டுவது மாகும்.

நிழலினருமை வெய்யிலிலே நின்றபோதும், ஈசனுடைய திருவடியினருமை கொடிய வினைவசத்தனையிருந்து உழலுங் காலத்திலும் தமிழ்ச்சொல்லினருமை நாலடியார் குறள் இவ்விரண்டு நூல்களை ஓதும்போதும் விளங்கும். இவைபோல் சோமனுடைய கொடையினருமை, அற்பர்களிடம் போய்க் குறையிரந்து நிற்பின் அவர்களிடம் வெளியாகும். அந்தக் கொடையினிலக்கணம் அருவருப்பைத் தரும்; உண்மைக் கொடையுமாகாது. ஆதலால் அக்கொடையினருமை இதனாலறியலாமென்று காட்டியதாகும்.

நல்லோர் கொடையையும் புல்லர் கொடையையும், ஏற்ற மூன்று உதாரணங்களாலே விளக்கியிருப்பது இதில் கண்டு மகிழும் ஓர் அருமையாகும். ஈசன்கழலருமை வெவ்வினையில் காண்மின் — என்றது, வினைவசத்திலகப்பட்ட ஜீவனைக் காப்பது ஈசன் திருவடியே யாகுமென்பதும் அவன் திருவடிக்கு அன்புடையராய் அவனை நம்பி வழிபடுதலே நற்கதி தருமென்பதும் இது விளக்குவதாம்.

---

* எந்த உதவியை மறந்தவர்கட்கும் ஈடேறும் வழியுண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்கு ஈடேறும் வழியில்லை என்பது.

### அரும்பதவுரை.

கழல் = திருவடி; நாலிரண்டில் = நாலிலும் இரண்டிலும் அதாவது நாலடியாரிலும் குறளிலும்; சோமன் = ஒரு பிரபு; புல்லர் = அற்பர்.

### வெண்பா.

போந்த வுதாரனுக்குப் பொன்துரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பா மில்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு. (67)

இன்னாருக்கு இது துரும்பு என்று பாடியது.

### கருத்து.

துறவோர், வேந்தனுக்கு அடங்கியவராகார் என்பது விளக்கியதாம்.

இதில், உதாரன், சூரன், அறிவோர், துறவோர், என்னும் இந்நால்வரின் தன்மை கூறி அவர் பெருமையை விளக்கியிருக்கின்றார். உதாரன், சூரன், துறவோர் இம் மூவரையும் பற்றி முன்னர்ப் பேசியுள்ளது காண்க. அறிவோர் என்றது உண்மைஞானங் கைவந்தவர் என்று பொருள்படும். அவர்கள் மண், பொன், பெண் மூன்றினாசையையும் விட்டு மெய்ப்பொருளை நாடி நிற்பாராகையினால், "அறிவோர்க்கு நாரி அருந்துரும்பாம்" என்றார்.

### அரும்பதவுரை.

போந்த= (உலகில் கொடை புரிவதற்கென்றே) வந்து பிறந்த; உதாரனுக்கு = தருமகுண முடையவனுக்கு; பொன் = பொற்காசு; ஆய்ந்த= எல்லாவற்றையும் நன்காராய்ந்த; நாரி = பெண்; இல்லத்துறவோர் = இல்வாழ்க்கையை விட்டு நீங்கினவர், (ஸந்நியாஸி)

### வெண்பா.

ஆங்கால மெய்வருந்த வேண்டா மதேதென்னில்
தேங்காய்க் கிளநீர்போற் சேருமே—போங்காலம்
காட்டாவண யுண்ட கனியதுபோ லாகுமே
தாட்டாளன் றேடுந் தனம். (68)

நல்ல காலத்தாலும் கெட்ட காலத்தாலும் வரும் பயனைப்பற்றிப் பாடியதிது.

### கருத்து.

வருவதுதானேவரும், போவதும் அப்படியேயாம்; அதுபற்றி வருந்துவது வீண். ஆயினும் எப்போதும் நல்ல காரியத்தையே செய்தல் வேண்டும் என்னும் நீதியை விளக்குவதிது.

### அரும்பதவுரை.

ஆங்காலம் = நல்ல காலம்; மெய் = தேகம்; போங்காலம் = கெட்ட காலம்; தாட்டாளன் = தலைவன்; தேடும் = சம்பாதிக்கும்; தனம் = பொருள்.

### மேற்கோள்.

* "மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல
உருவு முயர்குலமு மெல்லாந்—திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம்"—(வாக்குண்டாம்.)

### வெண்பா.

எழுதரிது முன்ன மெழுதிய பின்னர்
பழுதறவா சிப்பரிது பண்பாய்—முழுதுமதைக்

---

* மருவு - சேர்ந்த; சுற்றம் - உறவினர்; வான் - மிகுதியான; உருவும் - அழகும்; திருமடந்தை - ஸ்ரீதேவி; ஆம்போது - சேருங் காலத்தில்;

கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தானந் நிலை. (69)

கல்வியைத் தொடங்குவதிலிருந்து அதனாலாகத் தக்க பயனை அடைகிறவரையில் உள்ள கஷ்ட சாதனங்களை விளக்கப் பாடியதிது.

கருத்து.

கஷ்டமென்று கைவிடாமல் விடாமுயற்சியோடு கற்பவரே கல்வியிலே பெரியவராவர் என்பது இது உணர்த்தும்.

இதில் முதலில், எழுதக்கற்பதரிது, அதன் பின் எழுதியதைத் திருத்தமாக வாசிக்கக் கற்பது அதனினும் அரிது; முறைப்படி அதை முற்றிலும் கற்பது அதனினும் அரிது; அப்படிக் கற்றும் அதனாலாக வேண்டிய பயனை அடைவதரிது; அப்பால் அதன்படி நடப்பது அதனினும் அரிது என்று ஒன்றினும் ஒன்று அரிதாக விளக்கியிருப்பது பெரிதுங் கவனிக்கத்தக்கதாம்.

மேற்கோள்.

* எப்பிறப் பாயினு மேமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை—அப்பிறப்பில்
கற்றலுங் கற்றவை கேட்டலுங் கேட்டதன்கண்
நிற்றலுங் கூடப் பெறின்.—(அறநெறிச்சாரம்)

---

* எந்தக் குடியிலே பிறந்தபோதிலும் ஒருவனுக்குப் பெருமையை யுண்டு பண்ணுவது மக்களாய்ப் பிறப்பதேயாம்; அதனினும் வேறாயதொன்றுமில்லை. (அது எப்போது அந்தப் பெருமையைத் தருமென்றால்) அந்தப் பிறப்பில் கற்கவேண்டியவற்றை முறைப்படி கற்று, கற்றவற்றை ஐயந்திரிபறக்கேட் டுணர்ந்து, கேட்டபடி நின்றொழுகும் பாக்கியம் கைகூடப் பெற்றாலென்க.

வெண்பா.

ஏரு மிரண்டுளதா யில்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரவணித்தாய்ச் செய்வாருஞ் சொற்கேட்டால்
என்றும் உழவே இனிது (70)

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என்ற விதிப்படி உழவே நன்றல்லவா என்று வினவிய போது பாடியதிது.

கருத்து.

ஏற்ற சௌகரியங்களிருந்தால் உழவுத்தொழிலே இனிதென் றுணர்த்துவது.

இரண்டு ஏர், வீட்டிலே விதை, நீரோரத்து நிலம், வயலிலிருந்து ஊருக்குப் போய்வரத்தக்க சமீபம், சொற்படி நடக்கும் குடியானவர் — ஆகிய இவை யிருப்பின் எந்தக்காலத்தும் உழவே நல்லது என்று பொருள்படுவதிது. ஆதலின் எல்லாம் சௌகரியத்தைப் பொருத்த தென்பதே இது விளக்குவதாம். உழவுக்குக் கூறிய இத்தனை சௌசரியங்களிருந்து, "செய்வாருஞ் சொற்கேட்டால்" நலம். அப்படி குடிப்பிரியம் அமையாவிடின் இத்தொழில் முற்றுப் பெறுவதில்லையாம். ஆதலின் இந்தச் செய்யுளிலே ஔவையார் அந்த நுட்பமறிந்து போதித்திருப்பது பெரிதுங் கவனித்தற் குரியதாம்.

வெண்பா.

இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம்—மருடீர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியும் உள. (71)

ஒருசமயம் எழிற்குன்றத்து மன்னனை ஔவை பாடினள். அவன் ஔவையாரின் பாட்டின் அருமை யறியாதவனாய் யாதொரு உபசரணையும் செய்யாதிருந்த னன். அவனுடைய இந்த அறியாமைக்காக அவனை இகழ்ந்து அறிவுறுத்தியதிது.

**கருத்து.**

கல்வியினருமை யறியாதவன், புகழ்ச்சிக்கு அருக னாகான் என்பதுணர்த்துமிது.

இருளை யோட்டு மொளிபொருந்திய எழிற்குன்றத் தரசே, உனக்குள்ள பழுது குருடென்பது மட்டுமல்ல; குற்றமற்ற பாட்டையும் அதன் பொருளையும் உணர்ந்து கொள்ளாதவையான துளைகளுடன் கூடிய இரண்டு செவிகளுமுள்ளன; அந்தப் பழுதும் உனக்குண்டு— என்ற பொருள் தருவதிது. அரசனுக்குக் கண்களும் செவிகளுமிருந்தும் அவனைக் குருடனென்றும் செவிட னென்றும் கூறியிருப்பதேன்? தமது வரவை யறிந்து உபசரியாமலும் தமது பாட்டின் அருமையை உணராமலு மிருந்தது பிழையென்று உணர்த்தவேயல்லவா? ஆகை யினால் இது பெரியோரை உபசரிக்கவும் அவர் கூறுவது கேட்டு அதனருமை யறிந்து செய்வன தெரிந்து செய்ய வும் தெரியாதவன் இகழ்ச்சிக்குரியவனே யாவனென்பது விளக்குவதாம்.

* "கண்ணிற் சொலிச்செவியின் நோக்கும் இறைமாட்சி
புண்ணியத்தின் பாலது."—(நீதிநெறி விளக்கம்)

என்னும் பெரியார் திருவாக்கும்,

---

* கண்களே வாயாகவும் செவிகளே கண்களாகவும் கொண்டு நடக்கும் அரசியல் ஒரு வேந்தனுக்குப் புண்ணி யத்தின் வழியே அமைவதாம்.

* "காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்."

என்னும் வேதவாக்கும் அரசன் நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்கத்தை வரையறுக்கின்றமையினால், இதன்படி நடந்துகொள்ளாத எழிற்குன்றத்தரசன் இகழ்ச்சிக்குரியவனானா னென்றறிக. இது அரசன் தன் கடமை தவறியதனால் வந்த குற்றமாம். ஆதலின் கடமை மறப்பதே மடைமை என்பது போதனையாம்.

அகவல்

மூவர் கோவையு மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவல் வாயால்
என்னையும் பாடுக வென்றவ னெங்ஙனம்
பாடுது மியாங்க ளிறுபடு சேங்களம்
கண்ணிற் காணீர் விளரிபடு நல்யாழ்
விருப்பமாய்க் கேளீர்.
\- - - -
புலவர் வாய்ச்சொல் புலம்பலுக் கிரங்கிலீர்
\- - - -
ஓவாக் கானத் துயர்மரம் போலத்
தாவாக் கனியிற் றேன்றி னீரே. (72)

தன்னைப் பாடும்படி கேட்ட ஒருவனை நோக்கிப் பாடியதிது.

---

* வலியரால் நலிவடைந்து முறைவேண்டி வந்தவர்க்கும் குறைவேண்டி வறுமையுற் றிரந்தவர்க்கும் தடையின்றித் தரிசனந் தருவதே "காட்சிக்கெளிமை" என்பதாம். கேள்வியிலும் செய்கையிலும் கடிந்து பேசுதலே "கடுஞ்சொல்" என்பதாம். காண்பதற்கு எளியவனும் யாவர் மாட்டுங் கடுஞ்சொல்ல னல்லனுமாயின் அந்த அரசனுடைய நிலத்தை எல்லா நிலங்களிலும் உயர்த்துக் கூறும் உலகம்.

கருத்து.

புகழ்தற்குரிய தகுதியுடையவர் இவரென்று விளக்குவதிது.

(1) களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர் (2) விளரிபடு நல்யாழ் விருப்பமாய்க் கேளீர், (3) புலவர் வாய்ச்சொல் புலம்பலுக் கிரங்கிலீர், (4) ஓவாக்கானத்துயர் மரம்போலத் தாவாக்கனியில் தோன்றினீர்—என நான்கு குறை கூறி இப்படித் தகுதியற்றவராகிய உங்களை எப்படிப்பாடுவது என்று கூறியிருக்கின்றார். இந்நான்கில் முதலாவது, யானைப்படைகள் பலமிழந்து மாளும்படியான போர்க்களத்தை நீங்கள் உங்கள் கண்ணாற்கூடக் கண்டறியீர்—என்று பொருள்படுவதாகையினால், வீரமில்லாதவர் என்றும், இரண்டாவது, இசையோடு கூடிய நல்ல வீணாகானத்தை விரும்பிக் கேட்டறியீர் என்று பொருள்படுவதாகையினால், அசேதனப் பொருளையும் உருக்கவல்ல சங்கீதங் கேட்குமொரு ஞானமில்லாதவர் என்றும், மூன்றாவது, வித்வான்களின் வாய்ச்சொல்லாகிய இரக்கப்பாடலைச் செவியேற்று அதற்கு மனவுருக்கங் கொண்டறியீர் —என்று பொருள் படுவதாகையினால், கல்வியினருமை உணருந்தரமல்லாதவர் என்றும், நான்காவது, தொலையாத பெருங்காட்டில் உயர்ந்து வளர்ந்துள்ள மரம்போலவும் அந்த மரத்தின் கண் புசித்தற்கெட்டாமல் பழுத்துள்ள பழம்போலவும் இருக்கின்றீர்—என்னும் பொருள்படுவ தாகையினால், பொருளுடையவராயிருந்தும் பிறர்க்குக் கொடாதவரென்றும் குறை கூறியதாகின்றது. ஆகையினால் இந்தக் குறையுடையவன், புலவர் போற்றற்குரிய தகுதியற்றவனென்று விளக்கியதாயிற்று. இதனால் உலகத்

தில் புருஷராய்ப் பிறந்தவர்கள் போர்வீரராயும் சங்கீத ஞானமுடையவராயும்; கல்வியினருமை தெரிந்து ஆதரிக்கும் குணமிக்கவராயும் கொடைக்குணமுடையவராயுமிருத்தல் வேண்டுமென்பதும் அதுவே சிறப்பைத் தருமென்பதும் அறியலானோம்.

இதில், காட்டிலேயுள்ள உயர்மரம்போல் என்றது, பிறர்க்கு ஒரு பயனுமில்லாதவராயிருக்கிற நீர் நீண்ட மரமேயாகின்றீர் என்று இழித்துக் கூறியதாம். "என்னையும் பாடுக என்றனை—" என்று ஒருமையிற் பேசிப் பிறகு காணீர், கேளீர், இரங்கலீர், தோன்றினீர்— என்று பன்மையிற்பேசியது, அவனுடைய குலத்தவரையும் குறித்தற்பொருட்டேயாம்.

### அரும்பதவுரை.

மூவர் கோவையும் = மும்மூர்த்திகட்கும் (முத்தொழிலுக்கும்) முதலாயுள்ள பிரமசொரூபத்தையும், மூ இளங் கோவையும் = சேர, சோழ, பாண்டிரென்னும் இளவரசர் மூவரையும்; பனுவல் வாயால் = நூல் பயின்ற வாயால்; களிறு = யானை; விளரி = ஓர் இராகம்; யாழ் = வீணை; ஒவா = தொலையாத; தாவா = எட்டாத.

### வெண்பா.

ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வள வேனுமன்ன மிட்டுண்மின்—தெய்வம்
ஒருவனே யென்ன வுணரவல் லீரேல்
அருவினைக ளைந்து மறும்.

ஒருசமயம் சங்கப்புலவரின் கூட்டத்தி லிருந்த ஔவையார், கைச்சைகைகள் சிலசில காட்டி "இவற்றின் கருத்தை விளக்குக" என்று அவர்களைக் கேட்டார். அவர்கள், ஔவையாரின் கருத்துணருந் தரமில்லாமல் அவற்றை ஒரு பெண்பாலர்க்குப் பொருத்திப் பாடினர்.

ஔவையார் அப்பொழுது தமது கருத்து விளங்கும்படி பாடியதிது.

**கருத்து.**

* பஞ்சமல காரியங்களும் நீங்கும் வழி விளக்கியதிது.

பிச்சையிடுங்கள், தருமமார்க்கத்தைக் கைவிடாதீர்கள், ஒரு பிடியாகிலும் பிறர்க்கிட்டு உண்ணுங்கள், கடவுள் ஒருவரே என்னும் உணர்வைக் கொள்ளுங்கள்—இவற்றைச் செய்யும் வல்லமையைப் பெறுவீர்களானால் நீக்குதற்கரிய ஐந்து மலகாரியங்களும் நீங்கும்—என்று இதில் கூறியிருக்கின்றார். ஆகவே இது பஞ்ச மல காரியங்களை ஒழிப்பதற்குரிய போதனையாயிற்று.

பிச்சையிடுவதையும் அறநெறிபற்றி ஒழுகுவதையும் அன்னமிட்டுண்பதையும்பற்றி முன்னரே விளக்கியுள்ளது. தெய்வம் ஒருவனே யென்று உணர வல்லீரேல் அருவினைகள் ஐந்தும் அறும்—என்னும் போதனை இங்குக் கவனித்தற்குரியதாம். தெய்வம் ஒருவனேயென்றுணர்ந்து கொள்வதாவது, யார் எந்தப் பெயரினால் எந்தத் தெய்வத்தை எப்படித்தொழுதாலும் அவையெல்லாம், பிரஹ்மசொரூபமே என்று அறிதலாம். இந்த அறிவு தான் உண்மை ஞானம். இது சித்தித்த அளவில், சங்கற்ப விகற்பங்களெல்லா மொழியும். அவை நீங்கவே பஞ்சமலங்களும் விலகி இன்ப நிலை கைகூடும். ஆகவே சிறந்த போதனையாகுமிது.

ஔவை அருந்தமிழ் முற்றிற்று.

சுபம்.

---

* ஆணவம், மாயை, காமியம், மாயாகாரியம், திரோதயம்.

# புத்திமானே பலவான்

இது ஒரு லோபியையும் இரண்டு சகோதரர்களையும் பற்றிப் பேசுமொரு நாவல். இதில் சகோதரவாஞ்சை, கல்வி, ஒழுக்கம், உலுத்தகுணம், செல்வம், ஈகை, மானம், கர்வம் இவைகளாலுண்டாகும் நன்மை தீமைகள் முதலியன ஆன்றோர் மேற்கோள்களுடனும், தக்க முதுமொழிகளுடனும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. கதாநாயகன் தன் புத்திசாதுர்யத்தினால் "புத்திமானே பலவான்" என்பதை நிலை நிறுத்துவது புத்தி புகட்டக்கூடியதாயும், வினயமாயுமிருக்கும்.

விலை அணா. 0 12 0

# பரதன்

இது வால்மீகி ராமாயணத்திலிருந்து பரதபாதுகா பட்டாபிஷேக மென்னும் பாகத்தை மாத்திரம் தனியே பிர்மஸ்ரீ வரகவி. திரு. அ. சுப்ரமண்யபாரதியா ரவர்களால் செவ்விய நடையில் எழுதப்பட்ட புத்தகம். இதில் ஸத்தியம் தவறாமை, பிதிர்வாக்ய பரிபாலனம், சகோதர வாஞ்சை, ராஜநீதி, பதிபக்தி, உலக நடைக்குரிய தருமங்கள் முதலியன, அநேகவித நியாயங்களுடனும் கம்பராமாயணத்திலிருந்து, திரட்டப்பட்ட முக்யமான மேற்கோள்களுடனும், படிப்பவர்களின் மனம் உருகும்படி எழுதப்பட்டிருக்கிறது.

விலை அணா. 0 8 0

# சாவித்திரி

## அல்லது மனைவியின் கடமை

**வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதி எழுதியது.**

இது பழமையான ஒரு சரித்ரமெனினும் இது நம் தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் பல முறை படித்துப் படித்துப் பயன் பெற வேண்டிய முக்யமான சரித்திரங்களுள் ஒன்றென்பது எவரும் மறுக்க முடியாததாகும். ஆதலின் இது நல்ல நடையில் யாவரும் உற்சாகத்தோடு படித்து இதன் பயனை அடைவதற்கேற்றபடி எழுதியிருக்கின்றது.

விலை அணா. 0 6 0

---

K. பழனியாண்டி பிள்ளை & Co., திருவல்லிக்கேணி, சென்னை.

31 AAV 0

# மகாத்மா காந்தியால் இயற்றப்பட்ட நூல்கள்

## 1. ஆரோக்கிய வழி.

இந்நூலைப் படித்து அறிந்து அதில் சொல்லியிருக்கிறபடி நடப்போர் நோயற்ற வாழ்வினராக இருப்பர் என்பது நிச்சயம். சென்ற 20 வருஷகாலமாக தேகாரோக்கியத்தைப் பற்றி நாம் படித்துள்ள பலநூல்களிலிருந்தும், தமது விஸ்தாரமான அனுபோகத்திலிருந்தும் அறிந்துள்ள உண்மைகளைக் கஷ்டப்படும் மனுஷ்ய ஜாதியிடத்தில் இரக்கம் கொண்டு சொல்லியிருக்கிறார். எதைச் சொல்லுவதிலும், சொல்லுகிறமாதிரி முக்கியமானது. அந்த மாதிரியை மகாத்மா நன்கறிந்தவர். அவருடைய நூலை ஒரு முறையேனெழுந்தவாரியாகப் படித்தாலும், உடனே அவருடைய கொள்கைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர ஆரம்பித்து விடுவார்கள். விலை அணா. 12.

## 2. தர்ம நீதி.

இந்த நூலில் ஸன்மார்க்க வாழ்விற்கு அடிப்படையாகவுள்ள தர்மங்களை மகாத்மா காந்தி தெளிவாகவும் இலகுவாகவும் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்.

விலை அணா. 6.

## இந்திய சுயராஜ்யம்

ஸ்வராஜ்யம் என்பதை நன்கு விளக்கி ஆதியில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததுபோல், நம் தேசத்தில் "நாகரிகம் நாகரிகம்" என்று தோன்றிப் பற்பலரையும் மயக்கி வருத்தும் சில விஷய விவரங்கள் நிர்மல சிந்தையுடன் விளக்கப்பட்டுள்ளன. படிப்போருக்கு மனமயக்கம் நீங்கித் தெளிவு உண்டாகி, தேசாபிமான உதயம் ஏற்படும்.

இந்நூலின் விலை 0—8—0

---

R. பழனியாண்டி பிள்ளை & Co., திருவல்லிக்கேணி, சென்னை.

ஆவணக்காப்பக